# திருப்பாலைவனம்



பதிப்பாசிரியர்

**சி. பி. சிங்,** இஆப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்

**எம். எஸ். ஆயிஷா பேகம்**

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2011

# திருப்பாலைவனம்

# திருப்பாலைவனம்

ஆசிரியர்

**எம். எஸ். ஆயிஷாபேகம்**

பதிப்பாசிரியர்

**சி.பி. சிங்,** இஆப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008.

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042.

# அச்சிட்டோர் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திருப்பாலைவனம் |
| ஆசிரியர் | : | எம். எஸ். ஆயிஷாபேகம் |
| பதிப்பாசிரியர் | : | முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் |
| வெளியீட்டு உரிமை | : | தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை |
| மொழி | : | தமிழ் |
| வெளியீட்டு எண் | : | 248 |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| ஆண்டு | : | 2011 - திருவள்ளுவராண்டு 2042 |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | 114 |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| தாள் அளவு | : | 80 GSM MAPLITHO |
| விலை | : | ரூ. 27/- |
| அச்சிட்டு வெளியிட்டோர் | : | தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை<br>தமிழ் வளர்ச்சி வளாகம்<br>ஆல்சு சாலை, எழும்பூர்<br>சென்னை - 600 008. |

**சி. பி. சிங்,** இஆப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

நாள் : 29-08-2011.

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டின் பண்பாட்டு தரவுகள், அழிந்துவிடாமல் எதிர்கால தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில், அகழாய்வுகளும், கல்வெட்டுகளைப் படி எடுக்கும் பணிகளையும், தொல்லியல் சின்னங்களை தூய்மைச் செய்து பாதுகாக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் இவைகளைப் பற்றிய விழிப்புணர்வினை மாணவர்கள் அறிந்துக் கொள்ள தொல்லியல் துறையின் கீழ் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் இயங்கி வருகிறது.

இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் தமிழ், தொல்லியல் வரலாறு மற்றும் வடமொழி ஆகிய பாடப்பிரிவுகளில் முதுகலைப் பட்டம் பயின்றவர்களுக்கு தொல்லியல் (ம) கல்வெட்டியலில் முதுநிலைப் பட்டயப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. முதுநிலைப் பட்டயப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு உதவித்தொகையாக ரூபாய் 2000 அளித்துவருகிறது. இம்முதுநிலை பட்டயப் படிப்பின் இறுதியில் மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரு கோயிலினை தேர்வு செய்து ஆய்வேடாக சமர்ப்பித்து வருகின்றனர்.

கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 1976-77 - ஆம் ஆண்டு பயின்ற மாணவியான செல்வி. எம். எஸ். ஆயிஷா பேகம்

அவர்கள் சமர்ப்பித்த 'திருப்பாலைவனம்' என்ற ஆய்வேடு 2010-11 - ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் நூலாக வெளியிடப்படுகிறது.

இஸ்லாமியச் சமுதாயத்தைச் சார்ந்த இம்மாணவி 'திருப்பாலைவனம்' ஆய்வேட்டில் இக்கோயிலை விரிவாக ஆய்வு செய்து இலக்கியங்கள், கல்வெட்டுச் செய்திகள் மற்றும் செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் துணையோடு விவரித்திருப்பது சிறப்பாகும். இந்நூலாசிரியர் செல்வி. எம்.எஸ். ஆயிஷா பேகம் அவர்கள் மறைந்த தசாவதானி செய்குத்தம்பி பாவலர் அவர்களின் பெயர்த்தி, என்பது சிறப்பாகும். எளிய நடையில் உரையாற்றுவது போல் இவ்வாய்வேட்டினை அமைத்துள்ளது பராட்டுதற்குரியதாகும்.

இந்நூலின் பதிப்புப் பணியினை சிறப்புற மேற்கொண்ட கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி.சு. சம்பத், திரு. இரா. சிவானந்தம், திரு. வெ. இராமமூர்த்தி தொல்லியல் அலுவலர் ஆகியோருக்கு எனது பாராட்டுகள். மேலும் கணினி தட்டச்சு செய்தளித்த திருமதி. கு. கோகிலா, பிழைத்திருத்தம் செய்தளித்த திரு. மா. ஆ. சங்கர் மற்றும் இந்நூல் வெளிவர அனைத்துப் பணிகளையும் மேற்கொண்ட துறையின் அச்சுப்பிரிவின் அனைத்து பணியாளர்களுக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூலிற்கான நிதியுதவி அளித்திட்ட தமிழ்நாடு அரசுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலினை தொல்லியல் (ம) வரலாற்று ஆய்வாளர்கள், ஆய்வு மாணவர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் வரலாற்று ஆர்வலர்கள் ஆகியோர் படித்துப் பயன்பெற கேட்டுக்கொள்கிறேன்.

***சி. பி. சிங்***

# பொருளடக்கம்


பதிப்புரை

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊரும் பேரும் | ... | 1 |
| 2. | இலக்கியச்செய்திகள் | ... | 4 |
| 3. | திருப்பாலீஸ்வரர் கோயில் அமைப்பு | ... | 8 |
| 4. | சிற்பங்கள் | ... | 28 |
| 5. | செப்புத்திருமேனிகள் | ... | 35 |
| 6. | கல்வெட்டுச் செய்திகள் | ... | 39 |
| 7. | கல்வெட்டில் இறைவன் பெயர் | ... | 54 |
| 8. | கல்வெட்டில் நாட்டுப்பிரிவுகள் | ... | 56 |
| 9. | கல்வெட்டில் கொடைகள் | ... | 60 |
| 10. | கல்வெட்டில் நந்தவனங்கள் | ... | 73 |
| 11. | கல்வெட்டில் மடங்கள் | ... | 76 |
| 12. | கல்வெட்டில் காசுகள் | ... | 78 |
| 13. | கல்வெட்டில் நிலங்கள் அளவைகள் | ... | 80 |
| 14. | சிறப்புச் செய்திகள் | ... | 82 |
| 15. | கோயில் வழிபாடுகளும் விழாக்களும் | ... | 85 |
| 16. | சமுதாயச் செய்திகள் | ... | 90 |
| 17. | துணைநின்ற நூல்கள் | ... | 96 |
| 18. | நிழற்படங்கள் | ... | 98 |

# ஊரும், பெயரும்

## ஊர் அமைப்பு

திருப்பாலைவனம் பழைய செங்கல்பட்டு மாவட்டத்தில், (தற்போதைய திருவள்ளூர் மாவட்டம்) பொன்னேரி வட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர் ஆகும். சென்னையிலிருந்து பொன்னேரி வழியாக, காட்டூர் வழியாக பழவேற்காடு செல்லும் பாதையில் அமைந்துள்ளது. இவ்வூர் பொன்னேரி புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 10கி.மீ தொலைவிலுள்ளது. முல்லையும், குறிஞ்சியும் திரிந்து பாலையாகின்ற இலக்கணப்படி இங்கு பாலைமரங்கள் மிகுந்திருந்ததன் காரணமாக இவ்வூருக்கு பாலைவனம் என்ற பெயர் பெற்றிருக்க வேண்டும். இதற்கு சான்றாக இக்கோயிலினுள் இன்னும் பாலைமரங்கள் காணப்படுகின்றன.

பண்டைய தமிழகத்தில் வழக்கிலிருந்த பல பெயர்கள் இன்று வழக்கொழிந்து பெயர் மாறி, புதுப்பெயர்கள் புனைந்து காணப்படுகின்றன. பண்டைய காலத்தில் இருந்து தற்போது வரை அதேப் பெயருடன் சில ஊர்கள் அமைந்துள்ளன. மதுரை, கரூர், கோட்டாறு போன்ற ஊர்களை உதாரணமாகக் கூறலாம். அதேபோன்று 'திருப்பாலைவனம்' என்னும் இவ்வூரும் அன்று முதல் இன்று வரை அதே பெயரிலேயே வழங்கி வருவது மிகவும் சிறப்புக்குரியது.

'திருப்பாலைவனம்' என்றும், 'திருத்தேர்த்துறை' என்றும் இருபெயர்கள் கொண்டிருந்த இவ்வூருக்கு இன்று 'திருப்பாலைவனம் ' என்ற பெயரே நிலைத்து வழங்கி வருகிறது.

## பெயர் வரக்காரணங்கள்

திருப்பாலைவனம் என்றும் திருத்தேர்த்துறை என்றும் வழங்குவதன் காரணம் கூற இலக்கிய ரீதியான சான்றுகளோ, அல்லது எந்த விதமான வரலாற்றுச் சான்றுகளோ இல்லை. ஆனால் அங்கு

நிலவி வரும் புராணக் கதைகள்தான் சான்றுகளாக விளங்குகின்றன.

## திருத்தேர்த்துறை

இவ்வூரிலுள்ள திருப்பாலீஸ்வரர் கோயிலில் தேவதாசி ஒருத்தி இருந்தாள், அவளது மரணத் தருவாயில் தேவலோகத்திலிருந்து தேர் வந்து அவளை ஏற்றிச் சென்றதாகவும் அதனால் இவ்வூருக்குத் 'திருத்தேர்த்துறை' என்று பெயர் ஏற்பட்டதாக ஒரு கருத்து நிலவுகிறது. இவ்வூருக்கு இப்பெயர் வழங்கப்பட வில்லையானாலும் இக்கோயிலின் பின்புறமுள்ள மடுவுக்கு இப்பெயர் வழங்கி வருகிறது.

## திருப்பாலைவனம் கைபீது கூறும் கதை

திருத்தேர்த்துறை என்று பெயர் பெற்றதற்கான காரணம் சற்று மாறுபட்ட வகையில் இதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலிலுள்ள பழைய சுயம்புலிங்கத்தை மன்னன் குலோத்துங்க சோழன் பிரதிட்டை பண்ணுவதற்கு முன்னே "தேவேந்திரன்" தன்னுடைய இரதத்தின் மீது ஏறி வந்து நாள்தோறும் அந்தச் சுயம்புலிங்கத்தை வழிபட்டுச் செல்வான். ஒரு நாள் பக்தி குறைந்ததன் காரணமாக அந்த இரதம் ஆகாயத்திலேயே நடவாமல் போயிற்று. அந்த இரதத்தை அவன் திருப்பாலைவனத்துக்கு மேற்கே இருந்து, கிழக்கே போகின்ற ஒரு மடுவிலே விட்டு விட்டுப் போய் விட்டான். அந்த இரதம் வெகுநாள் வரை அத்தேர் அங்கேயே இருந்தது. எனவே இவ்வூருக்குத் "திருத்தேர்த் துறை" என்று ஒரு பெயர் உண்டாயிற்று என்று கூறுகிறது.

## பெயர் பெற்றிருந்தது உண்மையே

இப்படி இருவகையான மாறுபட்டக் கருத்துக்கள் உலவி வருகின்ற போதிலும் அப்படி ஒரு பெயர் இருந்தது மட்டும் உண்மை. காரணம் என்னவென்றால் முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டில் இவ்வூர் திருத்தேர்த்துறை என்றும் கூறப்பட்டுள்ளது. இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகள் எல்லாவற்றையும் நோக்கும் போது இவனது கல்வெட்டில் மட்டுமே திருத்தேர்த்துறை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுக்குப் பின்னருள்ள மன்னர்கள்

காலக் கல்வெட்டுகளில் இப்பெயர் இல்லை. எனவே முதலாம் குலோத்துங்கன் காலத்திற்குப் பின்னர் இப்பெயர் வழக்கொழிந்து போயிற்று என்று நம்ப முடிகிறது.

## திருப்பாலைவனம்

குறிஞ்சியும், முல்லையும் திரிந்த பகுதியை பாலைநிலம் என்று சிலப்பதிகாரம் பகருகின்றது. வறட்சியுடன் பாலைமரங்கள் மிகுந்து காணப்படும், இந்நிலத்தில் இன்றும் திருப்பாலீஸ்வரர் கோயிலின் ஸ்தல விருட்சமாக பாலைமரம் காணப்படுகிறது. திருப்பாலைவனம் என்று பெயர் பெறுவதற்கு காரணம், இந்நிலத்தில் முன்பு பாலைமரங்கள் அடர்ந்து காணப்பட்டதன் காரணமாக இப்பெயர் பெற்றிருக்க வேண்டும். ஆதலால் இக்கோயில் இறைவனுக்கு திருப்பாலீஸ்வர் என்று பெயர் வழங்கப்படலாயிற்று.

# இலக்கியச் செய்திகள்

இக்கோயில் 11-ஆம் நூற்றாண்டில்தான் கட்டப்பட்டது. எனவே 8,9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆழ்வார்கள், நாயன்மார்களால் பாடப்பட்டிருக்க முடியாது. ஆனால் இக்கோயில் எடுக்கப்பட்டக் காலத்திற்கு முன்னமே பாலைமரத்தடியில் லிங்கம் இருந்தது என்பது தல வரலாறு. அதை மெய்ப்பிக்கும் வகையில் மாணிக்கவாசகரின் கீழ் வரும் பாடல் அமைந்துள்ளது.

“எவ்வெவர் தன்மையும் தன்வயிற்படுத்துத்தானேயாகிய தயாபரன், எம்மிறை, சந்திர தீபத்துச் சாத்திரனாகி, அந்தரத் திழிந்து வந்து, அழகமர் பாலையுள், சுந்தரத் தன்மையொடு துதைந்தருளியும்.”

திருவாசகத்தின் 8-ஆம் திருமுறையில் காணப்படுகிறது, இப்பாடல், பாலைமரத்தடியில் அன்றே நிலைப் பெற்றிருந்த சிவலிங்கத்தின் மேல் பாடப்பட்டது தான் என்று ஒருகருத்து நிலவுகிறது.

இது தவிர ஐம்பது ஆண்டுகட்குமுன்னர் வாழ்ந்திருந்த சிவராஜ சுவாமிகள் என்பவர் “திருப்பாலீஸ்வரர் பதிகம்” என்று ஈஸ்வரன் மீதும் “லோகாம்பிகைப் பதிகம்” என்று அம்பாள் மீதும் பாடல் பாடியுள்ளார்.

## திருப்பாலீஸ்வரர் பதிகம்

பாடல் :

பாலைமரப் பொழினிறையுன் பதியடைந்த சோழன் பகரரிய
சேனையிலோ ராணை தரு பிணைத்த
காலையதின் கருவிகளிற் கனவுதிரம் பெருகிக்
கணப்போதி லுயிர் விலங்கக் கண்டவனும் பயந்தே
சோலையிலம் மரத்தடியைச் சோதனை செய்துனது
சுயம்புருவங் கண்டு மன்னன் துய்ய செம்பொன் கோயில்
சீலமுடன் செய்து தொழும் திருப்பாலைவன வாழ் கோயில்
தெள்ளமுதாம் பாலீசா! திருவருள் செய்தருளே!

இப்பாடலில் சிவராஜ சுவாமிகள் தல வரலாறு முழுவதையும் கூறி பாலீஸரைப் போற்றி அருள் வேண்டுகின்றார். அடுத்து "லோகாம்பிகைப் பதிகத்தில் இப்பிறவியால் தான் அடைந்த துன்பங்களை நீக்கி தேவியின் அடிகளின் நிழலில் ஓய்வுபெற வரம் கேட்டுப் பாடுகின்றார்.

## லோகாம்பிகைப் பதிகம்

"அன்னையே யின்னேர மடிமை முறையிடுவதுன்
ணரிய திருவுள மறியுமே
யானாலு முறையிடுவ தென்ன வெனிலகிலத்தி
லளவிலாப் பிறவி பெற்றும்
பின்னயப் பிறவிதோறும் மனைவாழ்க்கை முதலையின்
பேழ் வாயிற் சிக்கியந்தோ
பேசுதற் கரிதாய பிணி மூப்பு சாக்காடு
பெற்றளவிற் றுன் பிலாழ்ந்தும்
வுன்னியதை நீங்கிடா தூயர் சுகம் தாயெண்ணி
யொழியாத காலன் வசமா
யுழன்றதினி போது நின்றுபயவடி நீழலி
லோய்வுற்றிருக்க வருள்வாய்
தென்னையொடு கமுகு நற்சென்னலொடு கன்னலார்
திருப்பாலைவன மேவியே
சீலவடியார்க்கருள் செய் பாலீசர் பாலமருந்
திரிலோகாம் பாளன்னையே"!

இப்பாடலில் "தென்னையொடு கமுகு நற் சென்னலொடு கன்னலார் திருப்பாலைவனம்" என்று ஊரின் சிறப்பையும் கூறுகின்றார்.

ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய 'பிரபந்தத் திரட்டில்" ஒரு பாடல் காணப்படுகின்றது. "பாலைவனப் பதிற்றுப் பத்தந்தாதி" என்ற பிரிவின் கீழ் அப்பாடல் பாடப் பெற்றுள்ளது.

"ஆனேறு கொடியுயர்த்தாய் திருப்பாலைவனத்தர
சேயடி
யாய் வாழ மீனேறு கடலுலகினெடுங்கருணை
மழைபொழியுமேக
மானாய், மானேறு கரதலத்தா யெனக் கடங்காய்
பெருவாழ்வும் வானஞ்
சூழுங், கானேறு பெருங்கதியு நெடியமால்
காணாநின் கமலப் பூவே".

ரிஷபக் கொடியுடையவர், கடல் சூழ்ந்த உலகிற்கு மேகம் போன்ற அருளைப் பொழிகின்றவர், மானைக் கையிலேந்தியவர், திருமாலால் அடிகாண முடியாதவர் என்றெல்லாம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் திருப்பாலீஸ்வரர் புகழப்பட்டுள்ளார்.

## திருவொற்றியூர் புராணத்தில் வாசுகிச் சுருக்கம்

இந்த தலைப்பின் கீழ் ஒரு புராணக் கதை இடம் பெற்றுள்ளது அது வருமாறு:-

வாசுகி என்றும் நாகராஜன் 'தர்ரூ சாஸ்திரத்தின்' படி ராஜநீதி செலுத்திக் கொண்டு, கீழ்த்திசைப் பாதாளத்தில் ராஜனாயிருந்தவன். பரமசிவன் மீது பக்தியுள்ளவன், பிறவிப் பயன் நீங்கி சிவனடிகளை அடையும் பொருட்டு ராஜ்யத்தைத் தன் மகனிடம் ஒப்படைத்து விட்டு, 'உப மன்னியர்' என்னும் முனிவரை நாடிச் சென்றான். சென்று அவரது திருவடிகளை வணங்கி நிற்க அம்முனிவர் அவனுக்கு சக்ஷுதீக்ஷை, பரிசதீக்ஷை, வாக்குத்தீட்க்ஷை, மந்திரதீட்க்ஷை ஆகிய நால்வகைத் தீட்க்ஷைகளையும் செய்தார். பின்பு அவன் அம்முனிவருக்கு நெடுங்காலம் தொண்டு செய்து கொண்டிருந்து விட்டு, பின்பு திருவொற்றியூருக்குப் போய்ச் சேர்ந்தான். அங்குள்ள பிரம்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மகிழ்ந்து அங்குள்ள பலகார நாரதரது திருவடியை தரிசித்துத் தன் வேண்டுகோளைத் தெரிவித்தான். உடனே அவர் அவனை நோக்கி, நீ நிலை பெற்றதாகிய இந்த தலத்துக்கு வடதிசையிற் பொருந்திய, பாலைமரத்தேவர்களெல்லாம் வண்டுகளாகி, அந்த விருட்சத்தின் மலர்த்தேனையுண்ணும்படி, நாடோறும் தேனைச்சேர்த்துக் கொண்டுவந்து, அம்மரப் பொந்தில் வைத்து அந்த வண்டுகள் இளைப்படையாத வண்ணம் உண்ணும்படி கொடுத்துக் கொண்டிருக்கிற, அந்தவிருட்க்ஷத்தின் நிழலில் யாவருக்கும் தரிசனமாகும்படி நாம் சிரேஷ்டமாய் வீற்றிருந்தருளுகிறோம். நீ அங்கு வந்து சேர்ந்து "பூசை செய்யக்கடவாய்" என்று கூறி மறைந்தருளினார். எனவே வாசுகி என்னும் நாகராஜனும் திருப்பாலைவனம் சென்று பாலீஸ்வரருடையை, திருவடித்தாமரைகளை அர்ச்சனை செய்தார். இதன் அடிப்படையில் அமைந்த பாடலிது.

"நாதனப் பலகைக் குண்டந்தனன்
போதமுற்றவரன் பதம் போற்றியே
யோது பாலைத்தலத்திலுற்றே சிவன்
பாதபங்கய மர்ச்சனை பண்ணியே"

(30-வது பாடல்)

திருப்பாலைவனத்தைப் பற்றியோ அல்லது திருப்பாலீஸ்வரர் கோயிலைப் பற்றியோ, இவை தவிர வேறு இலக்கியச் செய்திகள் ஏதுமில்லை.

# திருப்பாலீஸ்வரர் கோயில் அமைப்பு

## திருப்பாலீஸ்வரர் கோயில்

திருப்பாலைவனத்தில் காணப்படுகின்ற பழமையானதும், பெரியதாகியதும், மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமாகிய கோயில் இவ்வூரில் அமைந்துள்ள சிவன் கோயில் தான். இக்கோயில் கட்டப்பட்டதற்கானத் தல வரலாறு ஒன்று கூறப்படுகிறது. இவ்வரலாறு அவ்வூரில் நிலவி வருவதோடு இதே வரலாற்றைத் திருப்பாலைவனம் கைபீதும் எடுத்துரைக்கின்றது.

குலோத்துங்க சோழன் பூமியெல்லாம் சிவலிங்கப்பிரதிட்டை செய்த போது இந்தத் திருப்பாலைவனத்திலே சிவலிங்கம் பிரதிட்டை செய்ய வேண்டுமென்று தன்னுடைய சேனையோடு திருப்பாலைவனத்திலே வந்து இறங்கி, சிவலிங்கம் ஒன்றினை செய்து பிரதிட்டை செய்வதற்கு இடம் பார்த்து காமாட்டிகளை விட்டு அங்கேயிருந்த பாலை மரங்களையெல்லாம் வெட்டுவித்தான். அதிலே ஒரு சிவலிங்கம் இருந்தது. அந்தச் சிவலிங்கத்துக்குச் சிரசிலே கோடாரிக்காயம் ஏற்பட்டது. பட்டமாத்திரமே குலோத்துங்க சோழனுடைய பட்டத்துயானை கீழே விழுந்து இறந்துப் போயிற்று. அப்போது, குலோத்துங்க சோழன் பயந்து இறைவனை வணங்கி அந்த பழைய சிவலிங்கத்தை கருவறையில் வைத்து பிரதிட்டைச் செய்து அவிமுத்தீஸ்வர சுவாமியென்று பெயரிட்டுப் பின்னர் தான் உருவாக்கிய சிவலிங்கத்தையும் ஒரு பக்கத்திலே வைத்துப் பிரதிட்டைச்செய்து 'திருப்பாலீஸ்வரன்' என்று பெயரிட்டு கருவறை, முன்மண்டபம் முதலானவைகளும் கட்டுவித்தான் என்று கைபீது கூறுகின்றது.

> "எவ்வெவர் தன்மையும், தன் வயிற்படுத்து தானேயாகிய
> தயாபரன், எம்மிறை சந்திரதீபத்துச் சாத்திரனாகி, அந்தரத்

திழிந்து வந்து, அழகமர் பாலையுள், சுந்தரத் தன்மையோடு
துதைந்திருந்தருளியும்"

என்பது மாணிக்க வாசகர் பாடல் இப்பாடல் கோயில் கட்டுவதற்கு முன்னர் பாலைமரத்தடியில் இருந்த லிங்கத்தின்மீது பாடப்பட்டது என்பது ஒரு சிலர் கருத்து.

## கோயில் எடுப்பித்தது முதல் குலோத்துங்கசோழனே

இக்கோயிலைப் பற்றி திரு S.R. பாலசுப்பிரமணியமோ அல்லது பிறரோ இதுவரையிலும் எந்தக் கருத்துமே கூறவில்லை. ஆனால் டாக்டர் இராசமாணிக்கனார் மட்டும் 'திருப்பாலைவனம் கல்வெட்டுகள்' என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டு அக்கோயிலைப் பற்றிய தன் கருத்தை அதில் எடுத்துரைத்துள்ளார்.

டாக்டர் இராசமாணிக்கனார் இக்கோயிலை வீரராசேந்திரன் காலம் என்றுக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் கருத்து தவறானதாகத் தென்படுகிறது. காரணம் இக்கோயிலில் முதலாம் குலோத்துங்கன் காலத்திலிருந்ததுதான், கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவனுக்கு முன்னர் உள்ள மன்னர்கள் கால கல்வெட்டுகள் ஒன்று கூட இங்கு இல்லை. ஆனால் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இருந்து அவனுக்குப் பின்னர் வந்த சோழ மன்னர்கள் எல்லோருடைய கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. மூன்றாம் இராசேந்திரன் கல்வெட்டுகள் மட்டும் இல்லை. ஆனால் பிறமன்னர்கள் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. வீரராசேந்திரன் கல்வெட்டு ஒன்று கூட இல்லாத காரணத்தால் வீரராசேந்திரன் காலத்ததாக இக்கோயிலைக் கருதுதல் தவறாகும்.

திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரராசேந்திர சோழ தேவர்க்குயாண்டு என்று இரண்டு கல்வெட்டுகள் தொடங்கு கின்றன. இவை முறையே இம்மன்னனின் 5-ஆம், 6-ஆம் ஆட்சி ஆண்டுகளைச் சார்ந்தவை. கல்வெட்டில் குலோத்துங்க சோழன் பையூர் என்று ஒரு ஊரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. வீரராசேந்திரன் காலத்திற்குப் பின்னர் தான் குலோத்துங்கன் என்ற பெயருள்ள மன்னனே சோழர் அரசியலில் இடம் பெறுகிறான். எனவே வீரராசேந்திரன் காலத்தில் குலோத்துங்கனின் பெயரில் ஊர் அமைவது என்பது சாத்தியமற்றது. குலோத்துங்கன் என்ற

மன்னனின் ஆட்சியின் போதோ அல்லது அதற்குப் பின்னரோதான் அப்பெயருள்ள ஊர் அமைந்திருக்கவேண்டும். எனவே இக்கல்வெட்டு வீரராசேந்திரன் காலத்தைச் சார்ந்தது அல்ல. மூன்றாம் குலோத்துங்கனுக்கு 'வீரராசேந்திர சோழன்' என்ற பெயரும் உள்ளதால் இக்கல்வெட்டில் 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரராசேந்திரசோழதேவன்' என்று குறிப்பிட்டிருப்பது மூன்றாம் குலோத்துங்கனையே. எனவே இக்கல்வெட்டுகள் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்தவை என்று அறுதியிட்டுக் கூறலாம். எனவே இக்கல்வெட்டுகள் வீரராசேந்திரன் காலத்தியது அல்ல. இங்குள்ள கல்வெட்டுகளை நோக்கும் போது அவை முதற்குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டே காலத்தால் முந்தியது. எனவே இக்கோயில் எடுப்பித்தது முதற்குலோத்துங்கன் காலமே என்று உறுதியாகக் கூறலாம்.

முதற்குலோத்துங்கன் காலத்தில் எடுப்பிக்கப்பெற்ற இக்கோயில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் மீண்டும் கட்டப்பட்டது. இதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது. மூன்றாம் குலோத்துங்கனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கோயில் கட்டப்பட்ட செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. "சோவடுகன்" என்பவனது மேற்பார்வையில் திருப்பாலைவனம் உடையாருக்குக் கற்றளி எடுக்கப்பட்டபோது "வடுகன் தேவன்" என்பவனுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தில் மூன்றில் இரண்டு பங்கு உரிமையை அவன் தன் இருமருமகன்களுக்கும் சீதனமாகக் கொடுத்தான் என்ற செய்தியை இக்கல்வெட்டு உணர்த்துகிறது. எனவே மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் திருப்பாலீஸ்வரருக்குக் கற்றளி எடுக்கப்பட்டது என்ற உண்மை வெளிப்படையானது.

கற்றளி என்றுக் குறிப்பிடப்பபட்டுள்ளதால் ஒருவேளை முன்னர் செங்கல்லால் கட்டப்பட்டிருந்து பின்னர் இவனால் கற்றளியாக்கப்பட்டதோ என்ற ஒரு எண்ணம் தோன்றலாம். ஆனால் மூன்றாம் குலோத்துங்களின் கல்வெட்டுக் காணப்படுகின்ற அதே கருவறை சுவரில் முதல் குலோத்துங்கன், மற்றும் அவனுக்குப் பின்வந்த மன்னர்களது கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. எனவே முன்பே அக்கோயில் கற்றளியாகவே இருந்தது என்பது ஒத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. ஆகவே

கருவறையில் காணப்படுகின்ற கல்வெட்டுகளின் அமைப்பைக் கொண்டு இக்கோயில் மீண்டும் கட்டப்பட்டது என்பது புலனாகிறது. முன்னர் கட்டப்பட்ட அதே கற்களைக் கொண்டே மீண்டும் கட்டப் பட்டிருக்கலாம்.

எனவே திருப்பாலீஸ்வரன் கோயில் முதற்குலோத்துங்கன் காலத்தில் எடுப்பிக்கப்பட்டு மீண்டும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

## பொது அமைப்பு

இக்கோயில் நீள் சதுர அமைப்புடையது. கோயிலின் மதில் கிழக்கு, மேற்காக 506 அடி நீளமும், தெற்கு, வடக்காக 550 அடி நீளமும் கொண்டுள்ளது. இக்கோயில் இறைவனுக்குத் தவிர அம்மன், முருகர் ஆகியோருக்கு தனிச் சன்னதிகள் உள்ளன. இக்கோயிலில் சுவாமிக்கு வலப்புறம் அம்மன் சன்னதி அமைந்துள்ளது தனிச்சிறப்பு ஆகும்.

## சிவன் கோயில்

இக்கோயில் இறைவன் கிழக்கு நோக்கி அமைந்து உள்ளது. இங்குள்ள லிங்கத்தின் தலை உச்சியில் கோடாரிப்பட்ட வடு காணப்படுகிறது.

## அமைப்பு

இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முகமண்டபம், முன் மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகின்றது. முக மண்டபத்தில், பக்கத்திற்கு இரண்டாக, நான்கு முழுத்தூண்கள் உள்ளன. தூண்கள் சோழர் காலத்து கலை அமைப்பில் அமைந்துள்ளன. கருவறை நுழைவாயிலில் விநாயகரும், தட்சணாமூர்த்தியும் உள்ளனர். இவ்விரண்டு சிற்பங்களும் தேவ கோட்டங்களின் கீழே வெளியில் வைக்கப்பட்டுள்ளன.

தேவ கோட்டங்களில் தற்காலத்தைச் சார்ந்த இரு பூதகணங்கள் பக்கத்திற்கொன்றாக உள்ளன. அவையிரண்டும் சங்கு ஊதுகின்ற நிலையில் காட்சி அளிக்கின்றன.

முக மண்டபத்தின் வெளிச்சுவரில் தென்புறம் ஒரு தேவ கோட்டமும், வடப்புறம் ஒரு தேவ கோட்டமும் உள்ளன. ஆனால் அவற்றில் சிற்பங்கள் ஏதும் இல்லை.

## தூங்கானை மாடம்

கருவறை பின்புறம் தூங்கானை மாடம் அமைந்து உள்ளது. விமானம் தூங்கானை மாடவடிவில் உள்ளது. திருச்சுற்று அமைக்கப்பட்டுள்ளது.

அதிட்டான பகுதி கீழிருந்து மேலாக உபானம், பத்மம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், பட்டிகை, கண்டம், வேதிகை ஆகிய அமைப்புகளைக் கொண்டு விளங்குகிறது.

சுவர்ப்பகுதி 5 தேவ கோட்டங்களையும், பல தூண்களையும் கொண்டு விளங்குகின்றன. ஐந்து தேவ கோட்டங்களிலும் முறையே தென்பகுதியில் வினாயகர், தட்சணாமூர்த்தி சிற்பங்களும், மேற்கில் விஷ்ணுவும், வடக்கில் பிரம்மன், துர்க்கை சிற்பங்களும் உள்ளன. சுவரில் கலசங்கள், தோரணங்கள் எதுவுமில்லை.

பிரஸ்தரத்தில் கூடுகளுடன் கூடிய கபோதகமும் அதன்மேல் யாளிவரியும் உள்ளன. கோயில் ஏகதளம் கொண்டது. தளம் பித்தியைவிட சற்று உயரம் குறைந்தது. தளத்தில் காணப்படுகின்ற தேவகோட்டங்களில் கீழ்க்காணும் சிற்பங்கள் அமைந்து உள்ளன.

## கிரீவத்திலுள்ள சிற்பங்கள்

**பிரம்மா:** பிரம்மா வலதுகால் கீழ் நோக்கியும், இடதுகால் மடக்கி அமர்ந்த நிலையிலும் பின்னிரு கைகளிலும் அட்சமாலையும், கெண்டியுமிருக்க, முன்னிருகைகள் அபயமாகவும், சுகஹஸ்தமாகவும் வடக்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

**திருமால் :** திருமால் வலதுகால் கீழ் நோக்கியும், இடதுகால் மடக்கியமர்ந்த நிலை, பின்னிரு கைகளில் சக்கரம், சங்கு இருக்க முன்னிரு கைகள் அபயம், சுகஹஸ்தமாக மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

**தட்சணாமூர்த்தி :** இச்சிற்பம் வலதுகால் கீழ்நோக்கியும், இடதுகாலை வலக்காலின் தொடைமேல் மடக்கி வைத்தமர்ந்த நிலை, பின்னிரு கைகளிலும் நாகமும் திரி சூலமும் இருக்க முன்னிரு கைகளில் ஒன்று அபயமாகவும், மற்றொன்று புத்தகம் ஏந்தியும் தெற்குப் பகுதியில் காணப்படுகின்றது.

இச்சிற்பங்கள் அனைத்தும், பிந்திய காலத்தைச் சார்ந்தவையே. கிரீவம் பல நவீன கால சிற்ப அமைப்புடன் காணப்படுகிறது. அவை வருமாறு.

**சிவன் பார்வதி :** சிவனும், பார்வதியும் அமர்ந்து இருக்க வலப்புறம் வினாயகரும், இடப்புறம் முருகரும் நின்றிருக்கின்றனர்.

மேற் கூறப்பட்ட சிற்பங்களின் இடையேயுள்ள கிரீவம் பகுதியில் சப்த ரிஷிகள் காணப்படுகின்றனர்.

விமானம் தூங்கானை மாட அமைப்புடையது. விமானத்தின் கிழக்கு பகுதியில் தோரணம் போன்ற அமைப்பும், அத்தோரணத்தின் நடுவில் காளையின்மேல் பார்வதியும், பரமசிவனும் வீற்றிருக்கின்றனர்.

கிரீவத்திலும், விமானத்திலும் காணப்படுகின்ற சிற்பங்கள் பிற்காலத்தைச் சார்ந்தவை. சுதைகளாலான அவ்வுருவங்களின் அமைப்பும், அலங்காரமும், ஆடையின் அமைதியும், சமீப காலத்தைச் சார்ந்தது என்றே உணர்த்துகின்றன. நான்கு பக்க மூலைகளிலும், அமர்ந்த நிலையில் காணப்படுகின்ற நந்திகள், அச்சிற்பங்களைவிட மிக பழமையானவை. கி.பி 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருக்கலாம்.

## திருச்சுற்றுத் தூண்கள்

கருவறையைச் சுற்றியுள்ள திருச்சுற்றில் மொத்தம் 40 தூண்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 28 தூண்கள் வட்டமான அமைப்புடனும் 12 தூண்கள் சதுரமான அமைப்புடனும் காணப்படுகின்றன. இரண்டு அமைப்புக்களும் வரிசையாக இல்லாமல் கலந்தே காணப்படுகின்றன. இரண்டு வகைத்தூண்களும் பிற்காலத்தைச் சார்ந்தவையே.

முன் மண்டபத்தின் தென்புறம் எட்டு தூண்களும், வடப்புறம் எட்டுத்தூண்களும் உள்ளன. முன்புறம் அதாவது கிழக்குப்புறத்தில் 12 முழுத்தூண்களும், நான்கு அரைத்தூண்களும் உள்ளன. கிழக்கு பக்கச் சுவரில் வடக்கு மூலையிலும், தெற்கு மூலையிலும .இரண்டு சிறிய அறைகள் உள்ளன. கிழக்குப்பக்கத்தூண்களில்

மட்டும் சில சிற்பங்கள் காணப்படுகின்றன. பூக்கள், சிம்மம், மத்தளம் கொட்டுகின்ற மனிதனின் உருவம் போன்றவை காணப்படுகின்றன.

## தூண்சிற்பம் :

## பதஞ்சலி முனிவர்

இத்தூண் சிற்பங்களில் மிகவும் குறிப்பிடத்தகுந்த உருவ அமைப்பு ஒன்று உள்ளது. ஒரு தூணில் முனிவர் ஒருவர் கைக்கூப்பிய வண்ணம் காணப்படுகிறார். பிறிதொரு இடத்தில் நடுவில் முனிவர் கைகூப்பிய வண்ணம் நிற்க, அவரது இருபுறமும் கெண்டிகளிலிருந்து முறையே ஒவ்வொரு பாம்பு வெளி வந்து அவருக்கு ஆசி வழங்குவது போல் அமைந்துள்ளன. மற்றொரு தூணின் ஒரு புறத்தில் குரங்கொன்று அமர்ந்திருக்க, அதன் பக்கத்தில் பாம்பு காணப்படுகிறது. கோயிலின் புராண வரலாற்றோடு இவைத் தொடர்புடையனவாகக் காணப்படவில்லை. எனினும் இச்சிற்பங்களுக்கு இங்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருப்பது ஆய்வுக்குரியது. நடராஜர் அருகில் வியாக்ர பாத முனிவர், பதஞ்சலி ஆகியோர் இருப்பர். பதஞ்சலிக்கும், பாம்புக்கும் தொடர்பு உண்டு. எனவே இது சிவன் கோவிலானபடியால் பாம்புடன் தொடர்பு படுத்திக் காட்டுகின்ற இச்சிற்பம் பதஞ்சலி முனிவரின் உருவமாக இருக்கலாம்.

## நடராஜர் மண்டபம்

கருவறை முன் உள்ள நடராஜர் மண்டபத்தினை 'மகா மண்டபம்' என்றே அழைக்கின்றனர். அம்மண்டபத்தூணில் காணப்படுகின்ற ஒரு தெலுங்குக் கல்வெட்டு, இம்மண்டபத்தைக் கட்டியவனின் பெயரைக் குறிப்பிடுகிறது. மேலும் இரண்டு தமிழ்க்கல்வெட்டுகள் மகாமண்டபம் எடுப்பிக்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

## மண்டபம் கட்டியது யார்?

"காளயுக்தி வருடம் மேக பகுள திருவாளர் இராம நமோ மண்டலேஸ்வர மந்திர மீசர கண்டர ஹரி ஹர்பரோர் ஒபுல ராஜய்ய மகன் ரெட்டிராஜா கட்டிய மண்டபம்'' என்பது இம்மண்டபத்தூணில் காணப்படுகின்ற தெலுங்குக் கல்வெட்டின்

தமிழாக்கமாகும். எனவே ஒபுல ராஜய்ய என்பவரின் மகனான ரெட்டிராஜா என்பவனால் இம்மண்டபம் கட்டப்பட்டது என்பது தெளிவு. தெலுங்கு வருடமான காளயுக்தியில் என்பதும் இக்கல்வெட்டு மூலம் தெரியவருகிறது.

கோயிலிலுள்ள ஒரு தமிழ்க்கல்வெட்டு இக்கோயிலின் மகா மண்டபமும், கோயிலின் படிகளும், பையூர் கோட்டத்தைச் சார்ந்த ஆமூரிலுள்ள ஒருவரால் கொடையாக கொடுக்கப்பட்டவை என்ற செய்தியை தெரிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டு இக்கோயில் மகா மண்டபமும், கோயில் படிகளும் அண்ணப்பிள்ளை என்பவரால் கட்டிக்கொடுக்கப்பட்டவை என்று குறிப்பிடுகின்றது.

## மண்டபம் எடுத்தவனும், எடுப்பித்தவனும்

மேற்கூறப்பட்ட மூன்று கல்வெட்டுகளும் 'குமாரவீரசாயன உடையார்' என்ற தெலுங்கு மன்னனின் காலத்தைச் சார்ந்தவை. இரண்டு தமிழ்க் கல்வெட்டுகளில் ஒன்றில் மன்னனின் 10-ஆம் ஆட்சி ஆண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு தமிழ்க் கல்வெட்டுகளில் ஒன்று மகாமண்டபம் கொடையளித்தவன் பெயரும், மற்றொரு தமிழக் கல்வெட்டில் அவனது ஊரையும் குறிக்க மண்டபத்தூணில் உள்ள தெலுங்கு கல்வெட்டு அம்மண்டபத்தை கட்டினவன் பெயரையும் குறிப்பிடுகின்றன.

எனவே மேற்கூறிய செய்திகளைத் துணைக்கொண்டு நோக்கும் போது இம்மண்டபமானது 'வீரசாயன உடையார்' என்ற விஜய நகர மன்னனின் 10-ஆம் ஆட்சி ஆண்டில் பையூர் கோட்டம் ஆமூரைச் சார்ந்த அண்ணபிள்ளை நாயக்கரால் எடுப்பிக்கப்பட்டது என்றும் ஒபுல ராஜய்யாவின் மகனான ரெட்டிராஜா என்பவரால் கட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது. மேலும் இக்கோயில் படிகளும் இவராலேயே எடுப்பிக்கப்பட்டது என்ற செய்தியும் தெரியவருகிறது.

மகா மண்டபத்தில் நடராஜருக்கென்று தனிக் கருவறையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

## மண்டப அமைப்பு

நடராஜர் மண்டபத்தின் வாயில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. வாயிலையடுத்து உள்ளே சற்றுத் தாழ்வான

பகுதியொன்று காணப்படுகின்றது. இப்பகுதியில் எட்டு முழுத் தூண்கள் காணப்படுகின்றன. வாயிலை அடுத்துள்ள படிகளின் இருபுறத்திலும் இரண்டு அரைத்தூண்கள் காணப்படுகின்றன.

இத்தூண்களில் நாக பந்தம் காணப்படுகின்றது. நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் உள்ளன. தூண்கள் கீழே சதுர வடிவமாகவும், அதற்கு மேலே பதினாறு பட்டைகளுடன் கூடிய அமைப்புகளுடனும் உள்ளன. சதுரமானப் பகுதிகளில் தூண்களின் நாற்புறமும் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

பல மன்னர்களின் உருவங்கள் இத்தூண்களில் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும், ஒவ்வொரு அமைப்புடையவை. சில தூண்களில் விஜய நகர மன்னர்களின் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு தூணில் வீரபத்திரர் உருவம் காணப்படுகிறது. மேலும் முருகன் மயில் மீதமர்ந்து இருக்கும் காட்சி, வீர ஆஞ்சநேயர் உருவம், புலியுடன் சண்டையிடும் ஒரு வீரனின் தோற்றம், நாகலிங்கம், நர்த்தன விநாயகர், சிம்மக்கொடி, பெண் அடியார், நாட்டியமங்கை, திறந்த வாயுடைய மகரம், நர்த்தன காளி, நர்த்தனமாடுகின்ற குள்ள பூதம் போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலின் தல புராணத்தைச் சித்தரிக்கும் வண்ணம், பாலைவன நிழலில் லிங்கம் அமைந்திருக்கும் காட்சி இரு தூண்களில் செதுக்கப்பட்டுள்ளது. புன்னை மரத்தடியில் கோபியர் நின்றிருக்க புன்னைமரத்தின் மீது கோபியரது ஆடையுடன் கண்ணன் அமர்ந்திருக்கும் காட்சி மற்றொரு தூணில் செதுக்கப் பட்டுள்ளது. இத்தனை சிறப்புகளையும் கொண்டுள்ள இம்மண்டபத்தின் தாழ்வானப் பகுதி நீள சதுர அமைப்புடையது. இதன் கிழக்குப் புறத்தில் கருவறையை நோக்கிய வண்ணம் ஒரு நந்தி அமைக்கப்பட்டுள்ளது. அதன் பின்புறம் ஒரு பலிபீடமும் காணப்படுகின்றது. நந்தி காலத்தால் சற்றுப் பழமையானதாகக் காணப்படுகிறது.

மண்டபத்தில் தாழ்வான இப்பகுதியை அடுத்து மேடை போன்ற ஒரு அமைப்பு காணப்படுகிறது. இது சமீப காலத்தில் கட்டப்பட்டதாகும் என்பதை அதற்குள்ள தூண்களின் அமைப்பு

தெளிவுபடுத்துகின்றன. இப்பகுதியில்தான் செப்புத்திருமேனிகள் வைக்கப்பட்டு உள்ளன. இம்மேடைப் பகுதியின் வடப்புறம் ஒரு சிறிய கருவறை அமைந்துள்ளது. இங்குதான் ஆடவல்லான், மற்றும் சிவகாமி செப்புப்படிமங்கள் உள்ளன. நடராஜர் பீடத்தின் வலப்புறத்தில் மரத்தாலான விநாயகரின் சிற்பம் ஒன்று சிறிய வடிவில் காணப்படுகிறது.

நடராசர் செப்புத்திருமேனி இருக்கும் அறைக்கு நடராசர் கருவறை என்ற பெயர். கருவறையின் இருபுறமும் மரத்தாலான துவார பாலகர்கள் உள்ளன. அவை தேரில் வைக்கப்படும் துவார பாலகர்களின் அமைப்பை போல அமைந்துள்ளன. பின்னிருக் கரங்களிலும் முறையே சக்தியும், வஜ்ரமும் இருக்க முன்னிரு கைகளும் சூசிமுத்திரைக் காட்டியும், தண்டூன்றிய நிலையிலும் காணப்படுகின்றன. ஒரு காலை ஊன்றியவாறு காலைத்தூக்கிய வண்ணம் நின்றிருக்கின்றனர். முழங்கால் வரையிலும் முண்டமாலை அணிந்துள்ளனர்.

## கல்யாண மண்டபம்

நடராஜர் மண்டபத்தையடுத்துக் காணப்படுவது கல்யாண மண்டபமாகும். இதனை மகா மண்டபம் என்றும் அழைக்கின்றனர். இது விஜய நகரர் காலத்தில் கட்டப்பட்டது. இரதம் போன்ற அமைப்பு உடையது. இரதத்தை யானைகள் இழுத்துச் செல்வது போன்று இதன் படிகளின் இருபுறமும் யானையின் தலை உருவ அமைப்புக் காணப்படுகிறது. இம்மண்டபப் படிகள் கிழக்கு நோக்கிய வண்ணம் உள்ளன.

கல்யாண மண்டபத்தில் காணப்படுகின்ற தூண்களின் மொத்த எண்ணிக்கை முப்பத்து ஏழு, இவற்றில் முழுத்தூண்கள் இருபத்தாறு, அரைத்தூண்கள் பதினொன்று. இத்தூண்களில் ஆறு முழுத்தூண்கள் மண்டபத்தை அடுத்துள்ள தரைப் பகுதியிலும் ஏனையவை மண்டபத்தின் மேலும் அமைந்துள்ளன.

தூண்களில் நாக பந்தம் நன்கு வளர்ச்சி அடைந்த நிலையிலுள்ளது. சில தூண்களில் விஜயநகர அரசின் சின்னம் காணப்படுவதால் இம்மண்டபம் விஜயநகரர் காலத்தைச் சார்ந்தது என்று உறுதியாகக் கூறலாம்.

கண்ணனின் பத்து அவதாரங்களும் இத்தூண்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. மேலும், வாலி சுக்ரீவர் சண்டை, அனுமன் உருவம், இராமர், இலட்சுமணர், விஷ்ணு, பிரம்மா, வீரபத்ரர், விநாயகர், முருகர், பிட்சாடனர், பைரவர், வாலி, சுக்ரீவர் போன்ற உருவங்களெல்லாம் இங்குள்ள தூண்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. மேலும் குதிரைமேல் அமர்ந்த வீரன் உருவமும் ஒன்றிரண்டு தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. மேலும் மோகினி, நாட்டியப்பெண்கள் ஆகியோரது உருவங்களும் உள்ளன.

## மணி

கல்யாண மண்டபத்தின் முன்னர் வெண்கலத்தால் ஆன மணியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. "ஸ்ரீபாலீஸ்வரர் சுவாமியார் தேவஸ்தானம் திருப்பாலைவனம் 1929 ஸ்ரீ சூன் மாதம் 14" என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. எனவே இம்மணி கி.பி. 1929-ஆம் ஆண்டு சூன் மாதம் 14-ம் தேதி அங்குள்ள தேவ கோயில் நிர்வாகத்தினரால் செய்து கொடுக்கப்பட்டது என்று அறிய முடிகிறது. எழுத்துக்களின் மேலே நடுவில் மாலை அணிந்துள்ள முப்பட்டை நீறணிந்த சிவலிங்கமும் அதன் இடப்பக்கம் லிங்கத்தை நோக்கி அமர்ந்த நிலையில் ஒரு நந்தியும் அதன் தலைபக்கத்தின் மேலே அரைச்சந்திரன் வடிவமும் லிங்கத்தின் வலபுறம் சூரியனும் பொறிக்கப்பட்டுள்ளன.

## அம்மன் கோயில்

இக்கோயில் இறைவன் சன்னதியின் தென்புறம் கிழக்கு நோக்கி அம்மன் சன்னதி அமைந்துள்ளது.

## கட்டப்பட்ட காலம்

அம்மனுக்கு பிற்காலத்தில்தான் கோயில் எடுக்கப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில் மூன்றாம் இராசராசன் காலத்திலிருந்துதான் கல்வெட்டில் அம்மன் கோயில் பெயர் இடம் பெற்றுள்ளது. அதற்கு முந்திய சோழமன்னர்கள் கல்வெட்டுகள் எதுவும் இதனைப்பற்றிக் குறிப்பிடவில்லை. 'திருப்பாலைவனமுடையார்க் கோயிலிலுள்ள பெரிய நாச்சியார் சன்னதிக்கு விளக்கு எரிப்பதற்காக ஒரு வணிகன் பணம்

கொடுத்தான்' என்று மூன்றாம் இராசராசனின் கல்வெட்டுக் குறிப்பிலிருந்து இம்மன்னன் காலத்தில் தான் அம்மன் சன்னதி கட்டப்பட்டது எனக் கூறலாம். இவனுக்குப் பின்னர் வந்த சடாவர்மசுந்தரபாண்டியன், இராசநாராயண சம்புவராயர் ஆகியோர் காலக்கல்வெட்டுகளும் அம்மன் சன்னதியை குறிப்பிடுகிறது.

அம்மன் சன்னதியில் விளக்கு எரிப்பதற்காக "தேவர்கள் தேவன்" என்பவன் பணம் கொடுத்துள்ளான் என்று சடாவர்ம சுந்தரபாண்டியனின் 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கூறுகிறது. இக்கல்வெட்டு அம்மன் கோயில் கருவறை தென்புறச்சுவரில் காணப்படுகின்றது.

## பழுது பார்க்கப்பட்ட அம்மன் கோயில்

சடாவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பின்னர் இப்பகுதியை ஆண்ட திருவண்ணாமலை மாவட்டம் படவேட்டினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சம்புவராயர் காலத்துக் கல்வெட்டில் அம்மன் கோயில் பற்றிய குறிப்பு வருகிறது. சம்புவராயமன்னர்களில் சிறந்த அரசனாக விளங்கிய இராசநாராயண சம்புவராயரின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் இக்கோயில் பழுதுபார்க்கப்பட்டது என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இக்கோயில் பழுது பார்க்கப்படுவதற்காக திக்கமநாயக்கர் என்பவரின் பிரதிநிதியால் ஏற்பாடு செய்யப்பட்டது என்று இக்கல்வெட்டு கூறுகிறது. இக்கல்வெட்டும் அம்மன் கோயில் கருவறையின் தென்புறச் சுவரில்தான் காணப்படுகிறது. எனவே மூன்றாம் இராசராசன் காலத்தில் எடுக்கப்பட்ட அம்மன் சன்னதியானது இராசநாராயண சம்புவராயர் காலத்தில் மீண்டும் பழுது பார்க்கப்பட்டது என்று தெரியவருகிறது.

கல்யாண மண்டபத்திலிருந்து அம்மன் கோவிலுக்குச் செல்லும் நுழைவாயிலின் மேலே கஜலட்சுமியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இருபுறமும் பக்கத்திற்கொன்றாக யானைகளும் சாமரம் வீசும் இரு பெண்களும் காணப்படுகின்றனர். இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம், திருச்சுற்று கொண்டு விளங்குகிறது.

கருவறையில் அம்மன் நின்றநிலையில் காட்சி அளிக்கிறாள். பின்னிருகைகளில் அங்குசமும், பாசமும் இருக்க, முன்னிருகைகள் அபயம், வரத முத்திரையுடன் காட்சி தருகிறார். தலையில் கிரீடமகுடம், காதுகளில் குண்டலங்கள் ஏதுமில்லை. அம்மன் நின்றுள்ள பீடம் சாதாரணமானது. அம்மனின் முன்னங்கைகளில் கங்கணம் காணப்படுகின்றது.

அர்த்த மண்டபச் சுவரில் ஐந்து தேவ கோட்டங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் சிற்பங்கள் ஏதும் இல்லை. இறைவன் சன்னதியைப்போல் இங்கு கஜபிருஷ்ட (தூங்கானை மாடம்) அமைப்பாக இல்லாமல் சதுர வடிவமானதாகக் காணப்படுகிறது. ஏகதள அமைப்பு உடையது. தளத்தில் சிற்பங்கள் காட்டபட்டுள்ளன. அச்சிற்பங்களாவன:

தெற்கு : கம்பா நதிக்காட்சி, இருபுறமும் சரஸ்வதியும் லட்சுமியும் காணப்படுகின்றனர்.

மேற்கு : அம்பாள் முருகனுக்கு வேல் கொடுக்கும் காட்சி, இடப்புறம் முருகன், வலப்புறம் ஒரு பக்தன்.

வடக்கு : இக்கோயிலின் தலபுராணம் சித்தரிக்கப் பட்டுள்ளது. பாலை மரத்தடியில் லிங்கம், வலப்புறம் மன்னன் வெட்டுவது போலவும், இடப்புறம் ஒரு பக்தன் அதைத்தடுப்பது போலவும் சிற்பம் வடிகப்பட்டுள்ளது.

கிழக்கு : இரு பெண்கள் அம்பாளுக்கு சாமரம் வீசுகின்றக்காட்சி, அம்மன் சன்னதியின் மேலுள்ள விமானம் தூங்கானை மாடவடிவில் அமைந்துள்ளது.

கருவறையைச் சுற்றியுள்ள திருச்சுற்றில் சிற்பங்கள் எதுவுமில்லை. தூண்கள் சாதாரண அமைப்பு உடையவை. திருச்சுற்றும் தூண்களும் பிற்காலத்தைச் சார்ந்தவை.

அம்மன் கோயிலின் முன் மண்டபத்தில் எட்டு முழுத்தூண்களும், பதினேழு அரைத்தூண்களும் காணப் படுகின்றன. தூண்களில் பல்வேறு சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

மண்டபத்திலுள்ள ஒரு தூணில் விசய நகர சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே இம்முன் மண்டபம் விசயநகர் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

பிற தூண்களில் இராமானுசர், மனித உருவங்கள், அனுமன், சஞ்சீவி மலையைக் கைகளில் ஏந்திய காட்சி, கம்பாநதிக் காட்சி, அனுமன் வாலில் லிங்கத்தைக் கட்டியிருக்கும் காட்சி, இராமர், எமன், நாட்டியப்பெண்கள், குள்ள பூதங்களின் பல்வேறு செய்கைகள் போன்றவை சிற்பங்களாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

அம்மன் சன்னதிக்கு நேர்எதிரே கோயிலின் வெளியில் சன்னதியை நோக்கியபடி அமர்ந்த நிலையில் ஒரு சிம்மம் காணப்படுகின்றது.

## சுப்பிரமண்யர் சன்னதி

இறைவன் சன்னதிக்கும் அம்மன் சன்னதிக்கும் இடையில் சுப்பிரமண்யர் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

சுப்ரமண்யர் தனது வாகனமாகிய மயில்மீது அமர்ந்து ஆறுமுகங்களுடனும், பன்னிரண்டு கைகளுடனும் காட்சியளிக்கின்றார். தலையில் கன்னிமாலைக் காணப்படுகிறது. வலது புறம் ஆறுகரங்களில் முறையே சக்தி, கத்தி, கேடயம், சங்கு பாசம், அபயமுத்திரை ஆகியவற்றுடனும் இடது புறமுள்ள ஆறுகரங்களில் முறையே வஜ்ரம் திரிசூலம், வில், சக்கரம், கோழி, வரதஹஸ்தம் ஆகியவற்றுடனும் முருகர் காணப்படுகிறார். அவரது வலதுபுறம் வள்ளியும், இடதுபுறம் தெய்வயானையும் நின்றிருக்கின்றனர். வள்ளியின் இடக்கரத்தில் மலர் ஏந்தியிருக்க வலக்கரம் டோல ஹஸ்தமாக உள்ளது. தெய்வயானையின் இடக்கரம் ஆசனத்தின் மீதிருக்க வலக்கரம் மலர் ஏந்தியுள்ளது. இருவரது தலையிலும் கரண்டமகுடம் காணப்படுகின்றது. சுப்ரமண்யர் சன்னதி பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும்.

## அலங்கார மண்டபம்

உற்சவ மூர்த்திகளை பிரதட்சனமாகக் கொண்டு செல்லும் போது இம்மண்டபத்தில் வைத்து தான் அலங்காரம் செய்து பின்னர் எடுத்துச் செல்வர்.

நடராசர் மண்டபத்திற்கும், கல்யாண மண்டபத்திற்கும் சேர்ந்தார் போல் பிரஸ்தரம் அமைந்துள்ளது. பிரஸ்தரத்தின் மேலே பல சிற்பங்கள் காணப்படுகின்றன. நான்கு புறமும் நந்திகள் படுத்த நிலையில் காணப்படுகின்றன.

## ஸ்தல விருட்சம்

தென் மேற்கு மூலையில் காணப்படுகின்ற பாலைமரந்தான் இக்கோயிலின் ஸ்தல விருட்சமாகும். இங்கு இருக்கின்ற பாலைமரங்களிலேயே இதுதான் மிகப்பழமையானது. மேடை மீது அமைந்துள்ளது. அதே மேடையில் இதன் பின்னாலிருக்கின்ற மற்றொரு பாலை மரமும் மிகப்பழமையானது.

## தொட்டில் கட்டுதல்

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் தங்களுக்குக் குழந்தை பிறந்தால் இம்மரத்தில் தொட்டில் கட்டிப் போடுவதாக பிரார்த்தனை செய்து கொள்கின்றனர். குழந்தை பிறந்த பின்னர் குழந்தையைக் கோயிலுக்குக்கொண்டு வந்து பிரார்த்தனை செய்கின்றனர். அன்று சிறிய வடிவில் ஒரு தொட்டிலை இம்மரத்தில் கட்டி அதில் ஒரு கல்லையும் போட்டு வைப்பர். குழந்தையைத் தொட்டில் கட்டிக் கொண்டு வரும் வழக்கங்களோ அல்லது குழந்தையை அத்தொட்டிலில் போட்டு எடுக்கும் வழக்கமோ இல்லை.

## அருணாசல ஈஸ்வர சன்னதி

மேற்கில் அமைந்துள்ளது. இது ஒரு சிறிய தனிக்கோயில். அர்த்த மண்டபமும், முன்மண்டபமும் காணப்படுகிறது. கருவறையின் நடுவில் லிங்கமும், அதன் கோமுகம் இடது பக்கமும் உள்ளன. சன்னதியின் வெளியில் கருவறையை நோக்கிப் படுத்திருக்கும் நந்தி காணப்படுகிறது. நந்தி மிகவும் பிற்காலத்தைச் சார்ந்தது.

## நந்தவனம்

ஆலால சுந்தரன் என்ற பெயரில் ஒரு நந்தவனம் ஏற்படுத்தப்பட்டதாக முதலாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. “சாத்தனூர்” கிராமத்திலுள்ள இந்தம்பேடு என்ற ஊர்த் தலைவனால் திருப்பாலைவனமுடைய நாயனார் கோவிலுக்காக ‘ஆலாலசுந்தரன்’ என்ற பெயரில் ஒரு திருநந்தவனம் ஏற்படுத்துவதற்காக நிலம் விலைக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டது என்று அக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இது இம்மன்னனின் 24-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. முதல்

குலோத்துங்கன் கி.பி. 1070-இல் அரசு ஏற்றதால் இக்கல்வெட்டுக் குறிப்புப்படி இந்த நந்தவனம் கி.பி. 1094-இல் ஏற்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.

கி.பி. 1094-இல் முதல் குலோத்துங்கன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்நந்தவனம் சமீப காலம் வரை சிறந்த பராமரிப்புடன் இருந்து வந்தது. சுமார் 50 வருடங்களுக்கு முன்பு பழவேற்காட்டில் வாழ்ந்திருந்த ஒரு செட்டியார், இந்த நந்தவனத்தின் பராமரிப்புக்காக பணம் அனுப்பி புஷ்ப கைங்கரியம் செய்து வந்தார்.

விசாகத்தன்று நந்தவனத்து மலர்களை எடுத்து ஆறுமுக சுவாமிக்கு அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்யவும் ஏற்பாடு செய்திருந்தார். மற்ற நாட்களில் அனைத்து இறைவனுக்கும் இம்மலர்களைப் பயன்படுத்தினர். தற்போது இந்த நந்தவனம் பராமரிக்கபடாமல் உள்ளது.

## சண்டிகேஸ்வரர் சன்னதி

கோயிலின் எதிரே சண்டிகேஸ்வரர் சன்னதி ஒன்று உள்ளது. இக்கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள சண்டிகேஸ்வரர் உருவத்தைப் போன்றே உள்ளது. ஆனால் உருவம் மட்டும் சற்றுப் பெரியது.

## பைரவர் சன்னதி

இக் கோயிலின் வடக்குத்திசையில் தெற்கு நோக்கியபடி பைரவர் சன்னதி உள்ளது. இக்கோயில் அர்த்தமண்டபம், முன் மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு நவீன கட்டட அமைப்புடன் காணப்படுகிறது.

அர்த்த மண்டபத்தில் பைரவர் நின்றநிலையில் காட்சி அளிக்கின்றார். அவர் பின்னால் அவரின் வாகனமான நாய் காணப்படுகிறது. பைரவர் சாதாரண பீடத்தின் மேல் நின்று இருக்க, அவரது முன்னிரு கைகளில் திரிசூலமும், கபாலமும், பின்னிரு கைகளில் டமரும், பாசமும் காணப்படுகின்றன. உடலில் ஆடையின்றி தலையில் ஜ்வாலா மகுடம், மார்பில் முப்புரிநூல், இடுப்புக்குக் கீழ் கடிச்சூத்திரம் கொண்டுள்ளது. இச்சிறப்பம் பிற்காலத்தைச் சார்ந்தது.

## சூரியர் கோயில்

இக்கோயில் கிழக்கில் அமைந்துள்ளது. இதன் வாயில் மேற்கு நோக்கியுள்ளது. இக்கோயிலும், சிற்பமும், மிகவும் பிற்காலத்தியது.

## மடப்பள்ளி

மடப்பள்ளி தென்கிழக்கு மூலையிலுள்ளது. இரண்டு கட்டடங்கள் கொண்டது. கூரைஓடுகளால் வேயப்பட்டது. கட்டட அமைப்பு மிகவும் சமீப காலத்தைச் சார்ந்தது. ஒரு கட்டடம் மடப்பள்ளியாகவும், மற்றொன்று சேமிப்பு அறையாகவும் உபயோகப்படுத்தப்படுகிறது.

## ராஜகோபுரம்

ஐந்து நிலைகளைக் கொண்ட ராஜகோபுரம் இங்குள்ளது. வாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோபுரத்தில் சுதைச்சிற்பங்கள் பல காணப்படுகின்றன. அவற்றில் பல சற்று பழுதுபட்ட நிலையில் காணப்படுகின்றன. கோபுரத்தின் முன் பகுதியில் இருபுறமும் பக்கத்திற்கொன்றாக இரண்டு தேவ கோட்டங்கள் காணப்படுகின்றன. ஆனால் தேவகோட்டங்களில் சிற்பங்களில்லை.

## சுந்தரபாண்டியன் திருமதில்

இத்திருச்சுற்றுமதில் கோபுரத்தோடுச் சேர்ந்து கோயிலின் மொத்தப் பகுதிகளையும் உள்ளடக்கிக் காணப்படுகிறது. இது நீள் சதுர அமைப்புடையது. கிழக்கு, மேற்காக 506 அடி அகலமும், தெற்கு, வடக்காக 550 அடி நீளமும் கொண்டது. இம்மதில் சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் எடுப்பிக்கப்பட்டது என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது. அளி நல்லூரைச் சார்ந்த நிலங்களை பையூர்க் கோட்டத்தார் ஊர்ச்சபையோர் இக்கோயில் திருமதில் எடுப்பதற்காக விட்டுக் கொடுத்தனர் என்றும், அம்மதில் பின்னர் சடாவர்மன் சுந்தர பாண்டியனின் பெயரால் அழைக்கப்பட்டது என்றும் அக்கல்வெட்டு விளக்குகிறது. இது சுந்தர பாண்டியனின் 14-ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்ட கல்வெட்டாகும். எனவே இக்கோயிலின் திருச்சுற்று மதில்

சடாவர்மன் சுந்தரபாண்டியனின் 14-ஆம் ஆட்சியாண்டில் கட்டப்பட்டது என்பது நன்கு புலனாகிறது.

## கோயில் குளங்கள்

கோயிலின் முதற் திருச்சுற்றில் தெற்கில் சூரிய புஷ்ப கரணியும், வடக்கில் சந்திர புஷ்பகரணியும் உள்ளன. இவையிரண்டும் கிணறுகளாகும். கோயிலுக்கு வெளியே எதிரில் உள்ள குளம் அமிர்த புஷ்பகரணியானது, துருக்கற்களாலான படிக்கட்டுக்களை நாற்புறமும் கொண்டுள்ளது. அதன் மேற்குப் புறத்தில் குளத்தை நோக்கிய வண்ணம் அமர்ந்த நிலையிலுள்ள ஒரு விநாயகர் சிற்பம் காணப்படுகிறது. இதுவும் பிந்திய காலத்தைச் சார்ந்தது.

## பதினாறுகால் மண்டபம்

கோயில் ராஜகோபுரத்திற்கும், அமிர்த புஷ்பகரணிக்கும் (கோயில் குளத்திற்கும்) இடையில் ஒருமண்டபம் காணப்படுகிறது. இதனை பதினாறுகால் மண்டபம் என்று அழைக்கின்றனர். உற்சவ காலங்களில் பஞ்ச மூர்த்திகளை இங்கு வைத்து தீபராதனை செய்வர்.

பங்குனி உத்திரத்தின் போது பத்துநாள் உற்சவம் சிறப்பாக நடந்தால் சுவாமிக்கு இங்கு வைத்துத் திருக்கல்யாணம் நடக்கும். இது சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டது.

## பெயரற்ற நந்தவனம்

கோயில் குளத்திற்குக் கிழக்கே ஒரு நந்தவனம் காணப்படுகிறது. இது சுமார் இரண்டு ஏக்கர் பரப்பளவு உடையது. தற்போது பராமரிப்புக் குறைந்து காணப்படுகின்றது. முன்னர் குறிப்பிட்ட ஆலால சுந்தர நந்தவனத்தைத் தவிர வேறு இரண்டு நந்தவனங்கள் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. பக்தர் சித்தத்துறைவான் திருநந்தவனம்
2. ஐம்பத்தெழுவர் திருநந்தவனம்

இவ்விரண்டில் ஒன்றாக அது இருக்கக்கூடும். ஆனால் தற்போது அதற்கு எந்தப்பெயரும் வழங்கப்படாத காரணத்தாலும் அதன் தோற்றம் பற்றி அறிய முடியாததாலும் குறிப்பாக ஒன்றினைச் சுட்டிக்காட்ட முடியவில்லை.

## சன்னதிக் கோயில்

நந்தவனத்திற்கும், கோயில் குளத்திற்கும் இடையே சிறிய கோயில் அமைந்துள்ளது. இதனை சன்னதிக் கோயில் என்று அழைக்கின்றனர். கருவறை அர்த்த மண்டபம் மட்டுமே கொண்டு விளங்கும் இக்கோயில் சிறிது பழமையானது. கருவறையில் லிங்கம் காணப்படுகிறது.

## பஞ்சலிங்கம்

கோயிலில் பஞ்சலிங்கங்கள் இருக்க வேண்டும் என்று மரபாக இங்குக் கருதப்படுவதால் இக்கோயிலில் ஐந்து லிங்கங்களும் இடம் பெற்று உள்ளன என்று சொல்லுகின்றனர்.

மூலஸ்தானத்தில் ஒன்று
உள்பிரகாரத்தில் இரண்டு
அருணாசல ஈஸ்வரர் சன்னதியில் ஒன்று
சன்னதிக் கோயிலில் ஒன்று

இவ்வைந்து லிங்கங்களும் சேர்ந்து பஞ்சலிங்கம் என்று அழைக்கப்படுகின்றன.

## ஊர்ப்பெயர் மடுவிற்காயிற்று

கோயிலின் வெளியே மேல் திசையிலுள்ள மடுவிற்கு தற்போது திருத்தேர்த்துறை என்று பெயர் வழங்கப்படுகின்றது. ஆனால் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் திருப்பாலைவனம் என்ற இவ்வூர் திருத்தேர்த்துறை என்ற பெயரால் அழைக்கப் பட்டதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது.

இக்கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் எடுக்கப்பட்டு, பின்னர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் மீண்டும் சரிசெய்து கட்டப்பட்ட இறைவன் சன்னதியையும், பின்னர் இராசநாராயண சம்புவராயன் காலத்தில் பழுது பார்க்கப்பட்ட அம்மன் சன்னதியையும் கொண்டு விளங்குகின்றது. நடராஜர் மண்டபம், கல்யாண மண்டபமும், அம்மன் சன்னதியின் முன் மண்டபமும் விஜயநகர் காலத்தவையாகும். மொத்தக்கோயிலையும் சுற்றி அமைந்துள்ள திருச்சுற்றுமதில் சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தியது. முதல் திருச்சுற்றில் காணப்படுகின்ற ஆலாலசுந்தரன் திருநந்தவனம் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் ஏற்பட்டதாகும்.

திருப்பாலீஸ்வரர் கருவறைச் சுவர், அம்மன் சன்னதி கருவறைச் சுவர் நடராஜர் மண்டபத்தின் வெளிப்புறச் சுவர், நடராஜர் மண்டபத்தூண் ஆகிய இடங்களில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

# சிற்பங்கள்

தமிழக கோயில் வரலாற்றில் சிற்பங்கள் தனி இடத்தைப் பெற்று திகழ்கின்றன. தமிழ் நாட்டில் சிற்பங்கள் தொன்று தொட்டே அதாவது சங்க காலத்திலிருந்தே சிறப்புற்றிருந்து வருகிறது. கோயில்கள் எடுப்பதில் மன்னர்கள் காட்டியுள்ள ஆர்வத்தினை அவர்கள் விட்டுச் சென்றுள்ள சிற்பங்களிலும் காணலாம்.

திருப்பாலீஸ்வரர் கோயிலில் காணப்படுகின்ற சிற்பங்கள், சோழர் காலத்திய சிற்ப அமைதியைக் காட்டுவனவாய் உள்ளன.

## தட்சிணாமூர்த்தி

இச்சிற்பம் கருவறைத் தென்புறச் சுவரில் உள்ள தேவ கோட்டத்தில் காணப்படுகின்றது. சமீப காலத்தில் இந்த சிற்பத்தை உள்ளடக்கிய தேவ கோட்டத்தைச் சுற்றி தனிஅறை ஒன்றைக் கட்டி உள்ளனர். வலது கால் கீழே தொங்க, இடது காலை அதன் மேல் மடக்கி ஆலமரத்தின் கீழ் அமர்ந்துள்ளார். இம்மூர்த்தி மார்பில் முப்புரிநூல், கழுத்தில் கண்ட ஆரம் (ருத்ராட்ச மாலை) வலது காதில் ஒன்றுமில்லாமல், இடது காதில் மட்டும் பத்ரகுண்டலம் காணப்படுகிறது. காலின் கீழ் முயலகன் படுத்திருக்க, காலடியில் இருபுறமும் சிறிய உருவில் ரிஷிகள் அமர்ந்துள்ளனர். மூர்த்தியின் இரு கைகளிலும் கங்கணம் காணப்படுகின்றன. காலின் கீழ் முயலகன் படுத்திருக்க, காலடியில் இருபுறமும் சிறிய உருவில் முனிவர்கள் அமர்ந்துள்ளனர். மூர்த்தியின் இரு கைகளிலும் கங்கணம் காணப்படுகின்றன. முன்னிரு கைகளிலும் முறையே சின்முத்திரையும், ஏடும் காணப்பட பின்னிரு கைகளிலும் முறையே பாம்பும், சுவாலையும் தென்படுகின்றன.

இச்சிற்பத்தின் அமைதியை நோக்கும் போது இதை கி.பி. 17 அல்லது 18 - ஆம் நூற்றாண்டைச்சார்ந்தது என்று கூறலாம்.

## விநாயகர்

இச்சிற்பமும், அர்த்தமண்டபத்தின் தென்புறச் சுவரிலுள்ள தேவகோட்டத்தில் காணப்படுகின்றது. சாதாரண பீடத்தின் மேல் நின்ற நிலையில் அமைந்துள்ளது. மார்பில் முப்புரிநூல் காணப்படுகின்றது. உதரபந்தம் சங்கிலி போன்ற அமைப்பில் உள்ளது. மார்பில் சன்னவீரமும் தென்படுகின்றது. பின்னிரு கைகளிலும் முறையே மழுவும், பாசமும் இருக்க முன்னிரு கைகளில் ஒன்றில் தந்தமும், மற்றொன்றில் மோதகமும் உள்ளது. இச்சிற்பம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அமைப்பில் காணப்படுகிறது.

## பிரம்மா

கருவறை வடக்குச் சுவர் தேவகோட்டத்தில் இச்சிற்பம் உள்ளது. சாதாரண பீடத்தின்மேல் நின்றநிலையில் காணப்படுகிறது. மார்பில் முப்புரிநூல், பாதம் வரையிலும் ஆடை, தலையில் கிரீட மகுடம், மேலும் கடிசூத்திரம் காணப்படுகிறது. இரு கைகளிலும் கேயூரம் இது சாதாரண அமைப்புடையது. முன்கைகளிலும் கங்கணம் காணப்படுகிறது. காதுகளில் குண்டலங்கள் இல்லை. சிற்பத்தின் முன்னிரு கைகளும் முறையே அபயம், கட்டியவலம்பிதம் என்ற பாவனைகளைக் காட்ட பின்னிரு கைகளும் முறையே பாசம், கெண்டி ஆகியவற்றைப் பிடித்துள்ளன. இச்சிற்பத்தின் அமைதியை நோக்கும் போது இதனை கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூற இயலும்.

## விஷ்ணு

இச்சிற்பம் கருவறையின் மேற்கு சுவரிலுள்ள தேவ கோட்டத்தில் ஒரு சாதாரண பீடத்தின்மேல் நின்ற நிலையில் காணப்படுகிறது. இச்சிற்பம் பாதம் வரையிலும் ஆடை, மார்பில் முப்புரிநூல், தலையில் கிரீட மகுடம், முன்னங்கைகளில் கங்கணம், உதரபந்தம், கடிசூத்திரம் போன்றவை காணப்படுகின்றன. கடிசூத்திரத்தில் சிம்மமுகம் காணப்படுகிறது. மேலும் கைகளில் கேயூரமும் காணப்படுகிறது. பின்னிருகைகளிலும் சங்கு சக்கரமிருக்க, முன்னிருகைகளும் அபயம், கட்டியவலம்பிதம் ஆகிய முத்திரைகளைக் காட்டி நிற்கின்றன. இச்சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## துர்க்கை

இச்சிற்பம் அர்த்தமண்டபம் வடக்குச் சுவரிலுள்ள தேவ கோட்டத்தில், எருமைத் தலையின் மேல் நின்ற நிலையில் காணப்படுகிறது. பாதம் வரையிலும் ஆடை, தலையில் கரண்டமகுடம், அதிபங்க அமைப்புடன் நின்ற நிலையில் உள்ளது. சிற்பத்தின் கைகளில் புஷ்பத்தின் அமைப்பில் கேயூரம் முன்னங்கைகளில் கங்கனம், பின்னிரு கைகளிலும் சங்கும், சக்கரமும் இருக்க முன்னிரு கைகளும் அபயம், கட்டியவலம்பிதம் ஆகிய முத்திரைகளைக் காட்டி நிற்கின்றன. இச்சிற்பமும், கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

முன்னர் சொல்லப்பட்ட தட்சிணாமூர்த்தியையும் விநாயகரையும் போன்று அதே அமைப்புக்களுடன் கூடிய உருவங்கள் இரண்டு கருவறையின் கிழக்குப்புறமுள்ள நுழைவாயிலில் பக்கத்திற்கொன்றாகக் காணப்படுகின்றன. கோயில் திருச்சுற்று தளம் திருத்தி அமைக்கப்பட்ட போது, இவ்விரண்டு சிற்பங்களையும், கருவறையின் வெளியில் வடக்குப்புறச் சுவரின் கீழ் புதைந்திருந்தனவென்றும், பின்பு அவற்றை எடுத்து இங்கு வைத்தனர் என்றும் கோயில் குருக்கள் கூறினார்.

தேவ கோட்டங்களில் காணப்படுகின்ற சிற்பங்கள் தவிர, கோயிலினுள் காணப்படுகின்ற மேற்குப்புறத் திருச்சுற்றில் பல சிற்பங்கள் காணப்படுகின்றன. அவை

## அனுமன்

நீள்சதுரக் கல்லில், மேலே எழுத்துக்களும், அதன் கீழே அனுமன் உருவம், காணப்படுகின்றது. 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்களச் சொல்லுடன் தமிழ் எழுத்து பொறிப்பு உடன் கூடிய நுளப்பியாற்றுழான் - நாயக்க நாராயணன் - அல்லுந்திக்கன் என்பவன் இதனை இக்கோயிலுக்குக் கொடையளித்ததாக கல்வெட்டுக் குறிப்பு கூறுகிறது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தெலுங்குச் சோழ மன்னன் இவன்.

## விநாயகர்

சாதாரண பீடத்தின் மேல் நர்த்தனம் ஆடுகின்ற நிலையில் காணப்படுகிறார். பின்னிரு கைகளிலும் மழுவும், பாசமும் இருக்க,

முன்னிரு கைகளிலும் தந்தமும், மோதகமும் காணப்படுகின்றன. இச்சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

## திருஞானசம்பந்தர்

நின்ற நிலையில் இருகைகளிலும் மலர் காணப்படுகிறது. இதன் அமைதியானது, இச்சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றுச் சொல்லத் தூண்டுகிறது.

## சுந்தரர்

நின்ற நிலையில் வலது கையில் மலர், இடது கையை ஆசனத்தின் மீது வைத்துள்ளார். தலையில் கிரீட மகுடம், இது மிகவும் பிந்திய காலத்தைச் சார்ந்ததாகத் தென்படுகிறது.

## அப்பர்

உழவாரப்படையைக் கையில் ஏந்திய வண்ணம் நின்ற நிலையில் காணப்படுகிறது. இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## மாணிக்கவாசகர்

நின்ற நிலையில் வலக்கரம் அட்சமாலையை ஏந்திய வண்ணம் சின் முத்திரைக் காட்டியபடி அமர்ந்திருக்க இடக்கையில் ஏடு காணப்படுகிறது. இச்சிற்பம் மிகவும் பிற்காலத்தைச் சார்ந்தது.

## வீரபத்திரர்

இவர் 'தட்சப் பிரதாபதி' என்றும் அழைக்கப்படுகிறார். இடப்புறம் சிறிய வடிவில் பூதகணம் (மகிஷாசுரன் போன்ற உருவம் கொண்டது) நின்று இருக்கிறது. வீரபத்திரர் சிலை நின்ற நிலையில் காணப்படுகிறது. முன்னிரு கைகளிலும் முறையே கத்தியும், கத்தியின் உறையும் காணப்பட, பின்னிரு கைகளிலும் அம்பும், வில்லும் உள்ளன. வீரபத்திரர் அருகில் உள்ள பூத கணத்திற்கு 'பிரம்மகணம்' என்று பெயர். வீரபத்திரரின் மார்பில் முப்புரிநூல் காணப்படுகிறது. கால்வரையில் முண்டமாலை, சுற்றிலும் சாதாரண பிரபை, இச்சிற்பம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## கங்காளர்

நின்ற நிலை பின்னிருகைகளிலும் உடுக்கையும் திரிசூலமும் உள்ளன. முன்னிரு கைகளுள் வலக்கை கீழ் நோக்கியபடி சின்முத்திரை காட்டி நிற்க, இடக்கை பிட்சைக்கபால பாத்திரம் ஏந்தியுள்ளது. பின்பக்கமுள்ள இடக்கை திரிசூலத்துடன் தடியும் பிடித்துள்ளது. இக்கழி முதுகின் பின்புறம் வழியாக நீண்டு செல்லுகின்றது. கண்டாபரணம் (ருத்ராட்சமாலை) அணிந்துள்ளார். மார்பில் முப்புரிநூல், உதரபந்தம் காணப்படுகிறது. கைகளில் 'துவாஜு பந்தம்' உள்ளது. முட்டிவரையிலும் ஒருவகை ஆபரணம் அணிந்துள்ளார். இருபக்கமும் குள்ள பூதங்கள் காணப்படுகின்றன. இடது பக்கமுள்ள குள்ள பூதத்தின் தலையில் பிட்சைப் பாத்திரம் காணப்படுகிறது. இச்சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதியைச்சார்ந்தது. இக்கோயிலிலுள்ளச் சிற்பங்களிலேயே மிகப்பழமையானதும் அதிக அழகு வாய்ந்ததும் இச்சிற்பமேயாகும்.

## நாகலிங்கம்

நாகலிங்கப் பூவின் அமைப்புடையது லிங்கத்தைத் தன்னுள் ஐக்கியப்படுத்திய நிலையிலுள்ள, படமெடுத்தபடியுள்ள நாகத்தின் அமைப்பு காணப்படுகிறது.

மேலும் ஒரு நீள் சதுரக்கல்லில் இருபாம்புகள் பின்னிய நிலையில் படமெடுத்தபடியுள்ள நிலையில் ஒரு சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இது தற்காலத்தைச் சார்ந்தது.

## முருகன் தன் தேவியருடன்

நின்ற நிலை தலையில் கண்ணிமாலை மார்பில் சன்னவீரம், உதரபந்ததுடன் காணப்படுகிறார். பின்னிரு கரங்களிலும், சக்தியும், வஜ்ரமும் இருக்க முன்னிரு கரங்கள் முறையே அபயம், கட்டியவலம்பிதம் ஆகிய முத்திரைகளைக் காட்டியபடி அமைந்துள்ளன. முருகனின் இடப்புறம் தெய்வயானையும், வலப்புறம் வள்ளியும் நின்றுள்ளனர்.

வள்ளி இடக்கையில் மலர் பிடித்திருக்க, வலது கையை ஆசனத்தின்மீது வைத்திருக்கின்றாள். தெய்வயானை வலக்கையில் மலர் பிடித்திருக்க, இடதுகையை ஆசனத்தின்மீது

வைத்திருக்கின்றாள். இம்மூன்று சிற்பங்களும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன.

## நவக்கிரகங்கள்

எல்லாம் நின்ற நிலையில் காணப்படுகின்றன. மிகவும் சமீப காலத்தைச் சார்ந்தவை.

## சூரியன்

இரு கைகளிலும் மலர்ந்த தாமரை பிடித்திருக்கிறார்.

## சந்திரன்

இரு கைகளிலும் (அல்லி) மொட்டு வைத்திருக்கிறார்.

## செவ்வாய்

பின்னிரு கரங்களிலும், வஜ்ரமும் சக்தியுமிருக்க, முன்னிரு கைகளில் வலக்கையானது கதைமேல் ஊன்றிய நிலையில் அமைந்திருக்க, இடக்கை வரதமுத்திரைக் காட்டி நிற்கின்றது.

## புதன்

முன்னிரு கைகளும் அபயம், வரதம் காட்டியபடி இருக்க, பின்னிரு கைகளும் கத்தியும் கேடயமும் தாங்கியுள்ளன.

## குரு

முன் வலக்கரம் கதைமேல் ஊன்றி இருக்க முன் இடக்கை வரதமாக அமைந்துள்ளது. பின்னிரு கைகளிலும், அட்சமாலையும், கெண்டியும் உள்ளன.

## சுக்கிரன்

பின்னிரு கைகளிலும் அட்சமாலையும், கெண்டியும் உள்ளன. முன் வலக்கை அபயமாகவும், முன் இடக்கரம் கதை மேல் காணப்படுகிறது.

## சனி

பின்னிரு கரங்களிலும் முறையே அம்பும் வில்லும் உள்ளன. முன் வலக்கையில் திரிசூலமும் முன் இடக்கை ஊரு ஹஸ்தமாகவும் உள்ளன. பின்னால் காக்கை வாகனமும் உள்ளது.

## ராகு

இருகரங்கள் அஞ்சலி அஸ்தமாக உள்ளன. கைகளிடையில் சிம்மத்தலை ஆயுதமாக உள்ளது.

## கேது

இருகரங்கள் அஞ்சலி அஸ்தமாக உள்ளன. சர்ப்பம் ஆயுதமாக காணப்படுகிறது.

## சண்டிகேஸ்வரர்

திருச்சுற்று வடக்கு பகுதியில் அமைந்துள்ள இச்சிற்பம் இடது கால் மடக்கி, வலது கால் தொங்க அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. மார்பில் முப்புரிநூல் யோகப்பட்டம் காணப்படுகிறது. நான்கு கரங்களுடன் காணப்படுவது ஒரு தனிச்சிறப்பு. முன்னிரு கரங்களும் அபயம், வரதமாகக் காட்சியளிக்க பின்னிருகைகளிலும் அட்சமாலையும், கையில் தாமரை மலரும் உள்ளன. இச்சிற்பம் மிகவும் பிந்திய காலத்தைச் சார்ந்தது.

மேற்கூறப்பட்ட அனைத்துச் சிற்பங்களும் இக்கோயிலில் காணப்படுகின்றன. அவை முறையே கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்படுகின்றது. சிற்பங்களின் அமைதியும், அழகும் நம் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணம் அமைந்துள்ளன.

# செப்புத் திருமேனிகள்

தமிழகச் செப்புத் திருமேனிகளின் அமைப்பும், அமைதியும் உலக மக்களின் பெருங்கவனத்தை ஈர்த்து நிற்பவையாகும். நம் முன்னோர் விட்டுச் சென்ற அப்படைப்புகள் உலக மக்களை பல வகைகளில் கவர்ந்து நிற்கின்றன.

திருப்பாலீஸ்வரர் கோயிலிலுள்ள செப்புத்திருமேனிகள் சுமார் 13-ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்படுகின்றது. இக்கோயிலில் நடராசர் மண்டபத்தில் இச்செப்புத் திருமேனிகள் அனைத்தும் வைக்கப்பட்டுள்ளன.

## சோமாஸ்கந்தர்

வலப்புறம் சிவனும், இடப்புறம் பார்வதியும் அமர்ந்திருக்க, நடுவில் சிறிய உருவில் ஸ்கந்தர் நின்ற நிலையில் இச்செப்புத் திருமேனி அமைந்து உள்ளது. பத்ம பீடத்தில் பத்மாஸனம் கொண்டு விளங்குகிறார்கள். சிவப்பெருமானின் பின்னிரண்டு கைகளில் மழுவும் மானுமிருக்க முன்னிரண்டு கைகள் அபயம், கடிஹஸ்தம் என்ற அமைப்புகளுடன் உள்ளன. பார்வதிக்கு இருகரங்களே காட்டப்பட்டுள்ளன. இவை முறையே கடிஹஸ்தம், வரதம் ஆகிய அமைதிகளில் காணப்படுகின்றன. ஆனால் கையில் மலரில்லை. சிவன் வலது கால் தொங்க விட்டு, இடது கால் மடக்கி அமர்ந்த நிலையில் இருக்க, பார்வதி இடது கால் தொங்கவிட்டு, வலது கால் மடக்கி அமர்ந்திருக்கிறாள். ஸ்கந்தர் இரு கைகளிலும் மலர் ஏந்தி நின்ற நிலையில் காட்சி அளிக்கிறார். இச்செப்புத்திருமேனியின் அமைதியைக் கொண்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம். பீடம் பிற்காலத்தைச் சார்ந்தது.

## பார்வதி

திரிபங்கத்துடன் நின்ற நிலையில் இருகரங்கள் காட்டப் பட்டுள்ளன. அவை முறையே கடக ஹஸ்தமாகவும், டோல ஹஸ்தமாகவும் அமைந்துள்ளன. இவ்வுருவம், கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. ஆனால் இதன் பீடம் பிந்திய காலத்தைச் சார்ந்தது.

## சந்திரசேகரர் தேவியுடன்

இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம். சந்திரசேகரர் திரிபங்கத்துடன் நின்றநிலையில் பின்னிருகைகளிலும் மழுவையும், மானையும் தாங்கி நிற்க முன்னிருகைகள் அபயம், வரதம் ஆகிய முத்திரைகளைக் காட்டுகின்றன. பார்வதி திரிபங்கத்துடன் நின்றிருக்க இருகரங்களும் முறையே, கடக ஹஸ்தமாகவும், டோல ஹஸ்தமாகவும் உள்ளன.

இச்செப்புத் திருமேனியைக் கொடுத்தவர் பெயர், இச் செப்புத்திருமேனியின் பீடத்தில் எழுதப்பட்டுள்ளது. சக ஆண்டு 1681-ல் ரகுநாத குலராஜு என்பவரால் கொடுக்கப்பட்டதாகத் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. சக ஆண்டு 1681 என்பது கி.பி. 1759 ஆண்டைக் குறிக்கிறது. எனவே இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று தெளிவாகத் தெரிகின்றது.

## வள்ளி தெய்வயானையுடன் முருகன்

இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சாதாரண பீடம் முருகன் வலது கால் தொங்கவிட்டு, இடது கால் மடக்க தன் வாகனமாகிய மயில் மேல் அமர்ந்திருக்க அவன் தேவிமார்களாகிய வள்ளியும், தெய்வயானையும் முறையே அவனது இருபுறமும் காட்சி அளிக்கின்றனர். முருகனது பின்னிரு கைகளில் சக்தியும், வஜ்ஜிரமும் தாங்கி நிற்க, முன்னிரு கைகள் அபயம், வரதமாகக் காணப்படுகின்றன. வள்ளியும், தெய்வயானையும், நின்ற நிலையிலுள்ளனர். வள்ளியின் வலக்கரம் டோல ஹஸ்தமாகவும், இடக்கரம் தாமரை மொட்டு தாங்கி இருக்க, தெய்வயானையின் வலக்கைத் தாமரை மலரைத் தாங்கி, இடக்கை டோல ஹஸ்தத்திலுமுள்ளன.

## சண்டிகேஸ்வரர்

இது 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சாதாரண பீடத்தின் மீது இரண்டு கரங்களுடன் நின்ற நிலையில் காணப்படுகிறார். வணங்கிய நிலையில் இருகரங்களினிடையே மழுவுடன் காணப்படுகிறார்.

## மாணிக்கவாசகர்

மாணிவாசகப் பெருமானின் உருவமும், கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. சாதாரண பீடத்தின் மீது நின்ற நிலையில் காணப்படுகிறார். கையில் ஏடு, முகத்தில் அமைதியுடன் காட்சி தருகிறார். வலக்கரத்தில் அட்சமாலை ஏந்தியிருக்கிறார்.

## அப்பர்

இது மிகவும் பிற்காலத்தைச் சார்ந்தது. பத்ம பீடத்தில் நின்ற நிலை. உடலில் இடுப்பு பாகம் மட்டும் சற்று வளைவுடன் காணப்படுகிறது. சூலக்குறி, வலது தோளில் திரிசூலமும், இடது தோளில் நந்தியும், முத்திரைப்போல் பொறிக்கப்பட்டுள்ளது. இதே போன்ற அமைப்பு சிதம்பரம் கோயில் செப்புத்திருமேனியிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இருகரங்களும் அஞ்சலி ஹஸ்தத்திலுள்ளது.

## சுந்தரர்

இதுவும் பிற்காலத்தைச் சார்ந்தது தான். இருகரங்களுடன் காணப்படுகிறார். வலக்கரத்தில் தாமரை மொட்டும், இடக்கையில் ஊன்று கோலும் உள்ளன. நடராசர், சிவகாமி, பெருமானின் அருகே எழுந்தருளியுள்ள அவன் தேவியும் உள்ளார். வலது காலின் கீழ், முயலகன் கிடக்க இடது காலைத் தூக்கி பெருமான் பத்மபீடத்தின் மேல் நின்று ஆடுகிறார். சுற்றிலும் பிரபா மண்டலம் ஒளி வீச, பின்னிரு கைகளிலும், உடுக்கையையும், அக்கினி ஜுவாலையையும் தாங்கி, முன்னிரு கைகளும் முறையே, அபயமாகவும், கஜஹஸ்தமாகவும் காட்சி தர ஆடுகிறார், ஆடவல்லான். பரந்த ஜடா மகுடத்தின் வலப்புறம், பெண் வடிவில் கங்கையையும், இடப்புறம் நாகமும் காட்சி தர சிரசில் புன்சிரிப்போடு கூடிய கபாலம் தென்படுகிறது. கபாலத்தின் வலது காதில் நாகம், இடது காதில் அர்த்தச்சந்திரன். ஜடா மகுடத்தின் முன்பாக கத்தி ஒன்று உள்ளது. மார்பில் முப்புரிநூல், இடது பக்கத்தில் இருகரங்களுக்கிடையில் யோகப்பட்டத்தின் ஒரு பாகம் தொங்குகிறது. மார்பில் முப்புரி நூலுடன் அது இணைகிறது. பெருமானின் இடப்பாகம் சிவகாமி நின்ற நிலையில் காட்சி

அளிக்கிறார். இருகரங்களே காணப்படுகின்றன. அவை முறையே கடக ஹஸ்தமாகவும், டோல ஹஸ்தமாகவும் உள்ளன. சாதாரண பீடத்தின் மீது தேவி நிற்கிறாள். இப்படிமம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனலாம்.

## மரச்சிற்பம்

### விநாயகர்

இது கி.பி. 13-ம் நூற்றாண்டைச் சார்ந்தது. கோபுர வாயிலின் பழைய கதவில் இருந்துள்ளது. கதவு பழையதாகி, புதுப்பிக்க வேண்டிய நிலை ஏற்படவே விநாயகரை மட்டுமே தனியே எடுத்து இங்கு உள்ளே கொண்டு வந்து வைத்தனர். தற்போது இது நடராஜர் மண்டபத்தில் வைக்கப்பட்டு உள்ளது. இப்போதும் அதற்கு வழிபாடு நடைபெறுகிறது.

# கல்வெட்டுச் செய்திகள்

## கல்வெட்டுகளின் அமைப்பு

தமிழக வரலாற்றை அறிய பெரிதும் துணைநிற்பவை கல்வெட்டுகளே. தமிழகத்தில் காணப்படுகின்ற கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி ஆகிய மொழிகளினாலானவை.

திருப்பாலைவனத்திலும் இந்நான்கு மொழிக் கல்வெட்டு களும் காணப்படுகின்றன. அவை முறையே சோழர், தெலுங்குசோழர், காகத்தியர், சம்புவராயர், பாண்டியர், விசயநகரர் ஆகிய மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகளாகும். மொத்தம் உள்ள 71 கல்வெட்டுகளில் 65 கல்வெட்டுகள் தமிழில் எழுதப்பட்டவை. மீதமுள்ளவைகளில் 3 தெலுங்கு, 2 கன்னடம், 1 வடமொழிக்கல்வெட்டுகளாகும். இவ்வனைத்துக் கல்வெட்டுகள் பற்றிய ஆங்கிலக் குறிப்புகள் 'இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1929-ல்' 307-லிருந்து 377 வரையிலான தொடர் எண்களில் வெளிவந்துள்ளன. ஆறு முழுக்கல்வெட்டுகள் 'திருப்பாலைவனக் கைபீது' என்ற புத்தகத்தில் வெளிவந்துள்ளன. மேலும் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி XIII என்ற நூலில் 216 வது தொடர் எண்ணில் மற்றொரு கல்வெட்டு வெளிவந்துள்ளது. ஏனைய கல்வெட்டுகள் எதுவும் அச்சிடப்படவில்லை.

கல்வெட்டுகள் அனைத்தும் கருவறைச் சுவர் திருச்சுற்றுச்சுவர், கோயிலின் வெளிச்சுவர் ஆகிய இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

## சோழ அரசர்கள்

பிற்கால சோழப்பேரரசை கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடையில் நிறுவியவன் விசயாலயன் என்ற சோழமன்னன்,

இவனது காலத்தில் நிறுவப்பட்ட சோழப் பேரரசு கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் நிலைத்திருந்தது. மூன்றாம் இராசேந்திரனுக்குப் பிறகு அது பாண்டியர் வசமாயிற்று.

திருப்பாலைவனத்தில் முதலாம் குலோத்துங்கன் காலம் தொடங்கி மூன்றாம் இராசராசன் காலம் வரையிலான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தி இல்லை.

## முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070 - 1120)

இவன் தந்தை வழியில் கீழைச்சாளுக்கிய மரபையும், தாய் வழியிற் சோழர் மரபையும் சார்ந்தவன். 'சுங்கத் தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர் என்று கல்வெட்டில் புகழப்படுகிறான். இவன் கி.பி. 1070-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1120 வரை அரசாண்டவன். சோழ மன்னர்கள் முடிசூட்டப் பெறும் நாளில் இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களை ஒருவர் பின் ஒருவராக மாறி, மாறி புனைந்து ஆட்சி செய்தனர். அதன் படி இவன் இராசகேசரி என்னும் பட்டம் புனைந்து ஆட்சி புரிந்தவன். இவனுக்கு இளமையில் 'இராசேந்திரன்' என்னும் பெயர் இருந்தது என்பதை செல்லூர் செப்பேடுகள் உணர்த்துகின்றன. மேலும் இவன் விஷ்ணுவர்த்தன் என்னும் அபிடேகப் பெயர் பெற்றவன். இவன் பாண்டியர், சேரர், மேலைச்சாளுக்கியர், தென் கலிங்கர், வடகலிங்கர், ஆகியோரைப் போரில் வென்றான். ஜெயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப் பரணி, இவன் காலத்தில் நடந்த கலிங்கப்போரைப்பற்றி விரிவாக குறிப்பிடுகிறது.

> "வேலைக் கொண்டு விழிஞமழித்துஞ்
> சாலைகொண்டதுத் தண்டு கொண்டேயன்றோ"

என்றும்,

> "வெள்ளாறும், கோட்டாறும் புகையாண்டே"

என்று கலிங்கத்துப் பரணியும்

> "மேவலர்தஞ் சேலைத்துரந்து சிலையைத்தடிந்து இருகாற்
> சாலை கலமறுத்த தண்டினான்"

என்று விக்கிரம சோழனுலாவும், இவனைப் புகழ்கின்றன.

இவ்வேந்தன் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்தமையால் தமிழ் நாட்டில் இவனது கல்வெட்டுகள் மிகுதியாகக் காணப்படுகிறது. அன்றியும் மைசூர் பகுதியிலும், தெலுங்கு நாட்டிலும் இவனது கல்வெட்டுகள் கிடைக்கின்றன. திருப்பாலைவனத்தில் காணப்படுகின்ற இவனது கல்வெட்டுகள் இவனை "திரிபுவனச் சக்ரவர்த்தி குலோத்துங்க சோழன்" என்றும், "குலோத்துங்க சோழ தேவன்" என்றும் குறிப்பிடுகின்றன. இங்கு முறையே இம்மன்னனது 12, 13, 23, 24, ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளும் மற்றும் இம்மன்னனது ஆட்சி ஆண்டைக் குறிப்பிடாத இரண்டு கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இவனது கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் மொழியில், தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன.

## விக்கிரம சோழன் (கி.பி. 1118 - 1136)

இவன் முதலாம் குலோத்துங்கனின் மகனாவான். கி.பி. 1118-இல் சோழ நாட்டில் இளவரசு பட்டம் கட்டப்பட்டு கி.பி. 1124-இல் தன் தந்தை இறந்த பின்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்று கி.பி. 1136 வரை ஆட்சி செய்தான். இவன் பரகேசரி என்ற பட்டம் பெற்றவன். காஞ்சிபுரம் மாவட்டம் சிவன் கூடல் என்னும் ஊரில் உள்ள கோயில் கல்வெட்டொன்றில் இவன் பிறந்த ஆனித் திங்கள் உத்திரட்டாதி நாள் முதல் ஏழு நாட்கள் திருவிழா நடத்துவதற்கு கி.பி. 1128-இல் நிலம் அளிக்கப்பெற்ற செய்தியை கூறுகிறது. எனவே இம்மன்னன் ஆனி மாதம் உத்திரட்டாதி நாளில் பிறந்துள்ளான் எனத் தெரியவருகிறது. ஒட்டக்கூத்தர் பாடியருளிய விக்கிரமச் சோழனுலாவின் பாட்டுடைத் தலைவர்களுள் இவனும் ஒருவன். இவன் தில்லைக் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்துள்ளான். இம்மன்னனுக்குத் "தியாக சமுத்திரம்" என்ற பட்டப் பெயரும் உண்டு.

திருப்பாலைவனத்தில் இவனது காலக் கல்வெட்டு ஒன்று மட்டும் உள்ளது. அது இவனது 14-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. 'திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரமச் சோழ தேவன்' என்று இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறான். இக்கல்வெட்டு தமிழ் மொழியிலும், தமிழ் எழுத்துகளிலும் எழுதப்பட்டுள்ளது. கி.பி. 1136-வரை ஆட்சிபுரிந்துள்ளான்.

## இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133 - 1150)

இவன் விக்கிரம சோழனின் மகன், கி.பி. 1133-இல் முடி சூட்டப்பட்டு கி.பி. 1150 வரை அரசாண்டான். இவன் சோழ மன்னர்களின் ஒழுக்கலாற்றின்படி இராசகேசரி என்னும் பட்டம் பெற்றான். இவனுடைய மெய்க்கீர்த்திகள் இவ்வேந்தனது ஆட்சியைப் புகழ்ந்து கூறுகின்றனவேயன்றி வரலாற்றுச் செய்திகளை உணர்த்துவனவாயில்லை. இவன் தில்லையில் பல திருப்பணிகள் செய்துள்ளான். இவனுக்கு 'அநபாயச் சோழன்' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

திருப்பாலைவனத்தில் இவனது கல்வெட்டுகள் இரண்டு காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று இவனது 11-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. மற்றொன்று ஆட்சியாண்டை குறிப்பிடாதக் கல்வெட்டு. ஒரு கல்வெட்டில் 'திருப்பேரம் பலத்துக்குப் பொன் வேய்ந்த இராசகேசரி வர்மன்' என்றும், மற்றொரு கல்வெட்டில் 'பேரம்பலத்துக்குப் பொன்வேய்ந்த திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவன்' என்றும் இம்மன்னன் குறிப்பிடப்படுகிறான். ஈண்டு குறிப்பிடப்பட்டுள்ள பேரம்பலம் என்பது தில்லையைக் குறிப்பிடுகிறது. இவன் சிறந்த சிவ பக்தன் அதன் காரணமாகத் தில்லைக்கு நிறைய திருப்பணிகள் செய்துள்ளான். திருமாணிக்குழியில் காணப்படும் இவன் கல்வெட்டொன்று இவனை "தில்லைத்திருநகர் சிறப்புடையதாகத் திருமுடி சூடிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்" என்று கூறுகின்றது. திருப்பாலைவனத்திலுள்ள இவனது கல்வெட்டுகள் தமிழ் மொழியிலும், தமிழ் எழுத்துகளிலும் எழுதப்பட்டுள்ளன.

## இரண்டாம் இராசராச சோழன் (கி.பி. 1146 - 1173)

இரண்டாம் குலோத்துங்க சோழன் இறந்த பிறகு அவன் புதல்வனாகிய இரண்டாம் இராசராசசோழன், சோழ நாட்டின் சக்கரவர்த்தியாக கங்கை கொண்ட சோழபுரத்தில் கி.பி. 1146-இல் முடி சூட்டப்பட்டு கி.பி. 1163 வரை அரசாண்டான்.

இவன் ஆட்சி தமிழ் நாட்டில் மட்டுமின்றி, தெலுங்கு நாடு முழுவதிலும் பரவி இருந்தது. இவன் தந்தையைப் போல் தில்லைக் கூத்தனிடம் பேரன்பு கொண்டவனாயிருந்தமையால், தில்லை

கோயிலுக்கு இவன் பல திருப்பணிகள் செய்துள்ளான். இவன் தந்தை இராசகேசரி என்ற பட்டம் பெற்றிருந்ததால், இவன் தன்னை பரகேசரி என்று குறிப்பிட்டுக்கொண்டான். இவனுடைய கல்வெட்டுகள் வடக்கே கோதாவரி, குண்டூர், நெல்லூர், ஆகிய பகுதிகளிலும் காணப்படுவதால், வேங்கி நாடு ஆகியவை இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன என்று தெரிய வருகிறது. இவன் தன் நாட்டில் "தந்தை இல்லார்க்குத் தந்தையாகியும், தாயில்லார்க்குத் தாயாகியும், மைந்தரில்லார்க்கு மைந்தராகியும், மன்னுயிர்கட்குயிராகியும்" இருந்து அரசாண்டு வந்தான் என்று இவனது மெய்க்கீர்த்தி எடுத்து இயம்புகின்றது.

திருப்பாலைவனத்தில் இவனது கல்வெட்டுகள் ஆறு காணப்படுகின்றன. அவை முறையே அவனது 10, 12, 14, 15, 17 - ஆம் ஆட்சியாண்டுகளைச் சார்ந்தவையாகும். இக் கல்வெட்டுகளில் "திரிபுவனச் சக்கரவர்த்தி இராச இராசதேவர்" என்று குறிப்பிடப்படுகிறான். இக்கல்வெட்டுகள் அனைத்தும், தமிழ் மொழிகளிலும், தமிழ் எழுத்துகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

## இரண்டாம் இராசாதிராசன் (கி.பி. 1163 - 1178)

இவன் கி.பி. 1163-இல் முடி சூட்டப்பட்டு கி.பி. 1178-வரை அரசாண்டான். இவன் இராசகேசரி என்னும் பட்டப்பெயர் உடையவன். இவனது கல்வெட்டுகள் "கடல் சூழ்ந்த பார்மாதர்" எனவும், கடல் சூழ்ந்த பாரேழும் எனவும், "பூமருவிய திசை முகத்தோன்" எனவும் தொடங்குகின்றன. இம்மெய்க்கீர்த்திகள் இவனது ஆட்சியின் சிறப்பை அழகுறக் கூறுகின்றனவேயன்றி இவனது வரலாற்றுச் செய்திகளை உணர்த்துவனவாய் இல்லை. இவனது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட தாயமுறைப் போரில் பங்கு பெற்று இம்மன்னன் சிங்கள மன்னனாகிய பராக்கிரம பாகுவுடன் போரிட்டான். இந்நிகழ்ச்சி இலங்கைச் சரிதமாகிய மகா வம்சத்திலும், எஞ்சிய பகுதிகள் சோழ நாட்டிலும், தொண்டை நாட்டிலுமுள்ள நான்குக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுகளுள் காஞ்சிமா நகரைச் சார்ந்த ஆர்ப்பாக்கத்து இராசாதிராசனது ஐந்தாம் ஆட்சியாண்டு கல்வெட்டிலும், மயிலாடுதுறையை சார்ந்த

பல்லவராயன் பேட்டை எட்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டிலும், அரக்கோணத்தைச் சார்ந்த வட திருவாலங்காட்டுக் கல்வெட்டும், "திருக்கடவூர்" மயானக் கல்வெட்டும் பன்னிரெண்டாம் ஆட்சியாண்டிலும் வரையப் பெற்றனவாகும்.

திருப்பாலைவனத்தில் காணப்படுகின்ற இவனது இரண்டு கல்வெட்டுகளும் முறையே இம்மன்னனது 6-ஆம் ஆட்சியாண்டையும் 11-ஆம் ஆட்சியாண்டையும் சார்ந்தவை. இவ்விரு கல்வெட்டுகளும், இம்மன்னனை "திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராதிராச தேவன்" என்றும் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுகள் தமிழ்மொழியிலும், தமிழ் எழுத்துகளிலும் எழுதப்பட்டுள்ளன.

## மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1178 - 1218)

இம்மன்னன் கி.பி. 1178-இல் முடிசூட்டப்பட்டு கி.பி. 1218 வரை அரசாண்டான். சோழ மன்னர்களின் ஒழுக்கலாற்றின்படி இவன் பரகேசரி என்ற பட்டம் புனைந்து ஆட்சி புரிவானாயினான். பாண்டி நாடு, ஈழநாடு, கொங்கு நாடுகளோடு இவன் போர் நடத்தினான். இவன் சுமார் நாற்பது ஆண்டுகள் அரசாண்டதால் இவன் காலக்கல்வெட்டுகள், தமிழ்நாடு முழுமையும் காண படுகின்றன. அக்கல்வெட்டுகள் இவனது வெற்றியை எடுத்துக் கூறுவனவாயும் அமைந்துள்ளன. இவ்வேந்தன் சிவாலயங்களுக்குச் செய்துள்ள திருப்பணிகள் மிகப்பல. புதுக்கோட்டையைச் சார்ந்த குடுமியான்மலையிலும், சேரனூரிலும் காணப்படும் கல்வெட்டுகள் அவற்றை விளக்கிக் கூறுகின்றன.

திருப்பாலைவனத்தில் இம்மன்னனது கல்வெட்டுகள் மொத்தம் எட்டு காணப்படுகின்றன. அவை முறையே மன்னனின் 5, 6, 15, 18, 19, 24, 36, 39-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தவை. "மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ அரசன்" என்று இக்கல்வெட்டுகள் இவனைக் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் மொழியிலும், தமிழ் எழுத்துகளிலும் உள்ளன.

## மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216 - 1256)

இம்மன்னன் கி.பி. 1216-இல் மூடிசூட்டப்பெற்று கி.பி. 1256 வரை ஆட்சி செலுத்தினான். சோழ மன்னர்கள் ஒருவர் பின்

ஒருவராக மாறி மாறி புனைந்து கொண்ட இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள் இவனது இராசகேசரி என்னும் பட்டம் புனைந்து கொண்டவன். இவன் ஆட்சிக் காலத்தில் சோழ நாடு பலவகைத் துன்பங்களுக்கு உள்ளாகித் தன்னுடைய சீரும், சிறப்பும் இழந்தது. சோழ நாட்டிற்கு வடமேற்கே ஹொய்சளரும், தெற்கே பாண்டியர்களும், வல்லரசுகளாகி தம் பேரரசை நிறுவுவதற்கு முயற்சி செய்து அதில் ஓரளவு வெற்றியும் பெற்றனர். சோழ நாட்டிற்கு வடகிழக்கே நெல்லூருக்கருகில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த தெலுங்குச் சோழர்கள் தமக்கு வடக்கேயிருந்த காகத்தியரை உற்ற நண்பராகவும், உறவினராகவும் கொண்டு வலிமை எய்தி வந்தனர். மேலும் இவன் கீழிருந்த குறுநில மன்னர்கள் இராசராசனோடு பகைமை கொண்டு உள்நாட்டில் கலகமும், குழப்பமும் செய்துத் தனியரசு நடத்த முயன்றனர். ஆகவே இவன் ஆட்சியில் நாடு பலவகை இன்னல்களுக்குள்ளாயிருந்தது.

திருப்பாலைவனத்தில் இம்மன்னன் காலத்தைச் சார்ந்த 15 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை முறையே 7, 13, 14, 15, 18, 20, 22, 23, 28, 29-ஆம் ஆட்சியாண்டுகளைச் சார்ந்தவையவை. 'திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர்' என்று மன்னன் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறான். இக்கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் மொழியிலும், தமிழ் எழுத்துகளிலுமாக எழுதப்பட்டுள்ளன.

மூன்றாம் இராசராசனுக்குப் பின்னர் பட்டத்துக்கு வந்த சோழ மன்னனான மூன்றாம் இராசேந்திரனின் கல்வெட்டுகள் இக்கோயிலில் மட்டுமல்லாது தொண்டை மண்டலம் முழுவதிலுமே மூன்றாம் இராசேந்திரனின் 20 - ஆம் ஆட்சியாண்டிற்குப் பிறகுள்ள சோழ மன்னர்கள் கல்வெட்டுகள் எதுவுமேயில்லை. ஆனால் தெலுங்குச் சோழனாகிய கண்ட கோபாலின் கல்வெட்டுகள் காஞ்சி, திருப்பாலைவனம் ஆகிய இடங்களில் மிகுதியாக காணப்படுவதால் இராசேந்திரன் தொண்டை மண்டலப்பகுதியைத் தெலுங்குச் சோழருக்குக் கொடுத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

மேற்கூறிய சோழ மன்னர்கள் கல்வெட்டுகளிலிருந்து அவர்கள் ஆட்சியின் இறுதிவரை அதாவது ஏறத்தாழ கி.பி. 13-ஆம் நூற்றாண்டுவரை தங்கள் ஆட்சியின் போது இக்கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளார்கள் என்று தெரிய வருகிறது.

## தெலுங்குச் சோழர்கள்

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சித்தூர், நெல்லூர், கடப்பை ஆகிய பகுதிகளை ஆட்சிப் புரிந்தனர். தெலுங்குச்சோழர் எனவும், பொத்தப்பிச் சோழர் எனவும் கூறப்படுவர். அன்னாருள் நல்ல சித்தரசன், தம்பி சித்தியரசன், திருக்காளத்தி தேவன் என்போர் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்திலிருந்த தெலுங்கு மன்னராவார்கள். அவர்கள் எல்லோரும் இச்சோழர் பெருமானுக்குத் திறை செலுத்திக் கொண்டு குறுநில மன்னராக வாழ்ந்து வந்தவர் என்பது அவர்கள் நாட்டில் காணப்படும் கல்வெட்டுகளால் நன்கு அறியமுடிகின்றது.

## தம்மு சித்தி

மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் அம்மன்னன் கீழ் சிற்றரசனாயிருந்து ஆண்டு வந்த ஒரு தெலுங்குச் சோழ மன்னன். நெல்லூர் மாவட்டத்திலுள்ள காவலி என்ற இடத்திலுள்ள ஒரு கல்வெட்டு இவனை நல்ல சித்தியின் சகோதரன் என்று குறிப்பிடுகிறது. தம்மு சித்தியின் இரண்டு கல்வெட்டுகள் திருவாலங்காட்டில் காணப்படுகிறது. இக்கல்வெட்டுகள் அவனை மூன்றாம் குலோத்துங்கன் கீழிருந்த ஒரு சிற்றரசனாகக் குறிப்பிடுகிறது.

திருப்பாலைவனத்தில் தம்மு சித்தியின் கல்வெட்டு உள்ளது. இதில் சக ஆண்டு 1129 குறிப்பிடப்படுகிறது. இது கி.பி. 1207-ஆம் ஆண்டைக் குறிக்கின்றது. இக்கல்வெட்டு சமஸ்கிருத மொழியிலும், கிரந்த எழுத்துகளிலும் எழுதப் பட்டுள்ளது. இக்கல்வெட்டில் தம்மு சித்தி என்றே இம்மன்னன் குறிப்பிடப்படுகிறான்.

## திருக்காளத்தி தேவன்கண்ட கோபாலன்

இம்மன்னனும் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தைச் சார்ந்தவன்தான். இவன் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழனின் மகன். இவனும் குலோத்துங்கனின் கீழ் ஆண்ட ஒரு சிற்றரசன்.

திருப்பாலைவனத்தில் இவன் காலத்தைச் சார்ந்த நான்கு கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அவை முறையே மன்னனின் 3,4-ஆம் ஆட்சியாண்டுகளைச் சார்ந்தவை. கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ்மொழியிலும், தமிழ் எழுத்துகளிலும் எழுதப்பட்டுள்ளன. "திரிபுவனச் சக்கரவர்த்தி அல்லும் திருக்காளத்தி தேவன் கண்ட கோபால தேவன் என்று இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளான்.

## இராசராச கண்ட கோபால தேவன்

இம்மன்னன் மூன்றாம் இராசராசன் காலத்தைச் சார்ந்தவன். இவன் திருக்காளத்தி தேவனின் மகனாய் இருக்க வேண்டும். இராசராசனின் கீழ் சிற்றரசனாயிருந்து நட்புடன் அரசாண்டமையால் இராசராசன் பெயரையும் இவன் பெயருடன் இணைத்து கூறப்பட்டிருத்தல் வேண்டும்.

திருப்பாலைவனத்தில் இவன் கல்வெட்டு ஒன்று மட்டுமே உள்ளது. இக்கல்வெட்டு அவனது 35-ஆவது ஆட்சியாண்டைச் சார்ந்தது. இக்கல்வெட்டுத் தமிழ் மொழியில், தமிழ் எழுத்து களாலானது 'திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசன் கண்ட கோபால தேவன்' என்று கல்வெட்டில் இம்மன்னன் பெயர் குறிப்பிடுகிறது.

## விசய கண்ட கோபாலன்

இம்மன்னன் மூன்றாம் இராசேந்திரன் காலத்தவன். இவன் நெல்லூரிலிருந்து ஆட்சி புரிந்தவன். இவனுக்கு "திக்க நிருபதி" என்ற மற்றொரு பெயரும் உண்டு. சோழ நாட்டின் வடபகுதியில் மூன்றாம் இராசராசனின் 29-ஆம் ஆட்சி ஆண்டிற்குப் பிறகு சோழர்களின் கல்வெட்டுகள் காணப்படவில்லை. அன்றியும் இராசேந்திரன் கல்வெட்டுகள் ஒன்றுகூட காணப்படவில்லை. ஆனால் கண்டகோபாலன் கல்வெட்டுகள் தொண்டை மண்டலத்தில்

காணப்படுகின்றன. எனவே இப்பகுதியில் சம்புவராயன், கோப்பெருஞ்சிங்கன் என்போர் அல்லல் விளைத்து வந்தமையால் இராசேந்திரன் அதனைக் கண்ட கோபாலனுக்கு அளித்திருத்தல் வேண்டும். "திக்க நிருபதி" என்ற கண்ட கோபாலன் காஞ்சி மாநகரின் ஆட்சியுரிமையைப் பெறுவதற்கு முன் சம்புவராயன், சேதிராயன் முதலானோர் நாட்டின் மீது படையெடுத்துச் சென்றனர் என்று "திக்கநசோமயாஜி" என்பார் தம் தெலுங்கு இராமாயணத்தில் கூறியிருப்பதால் சம்புவராயனோடு, இராசேந்திரன் நிகழ்த்திய போரில், கண்ட கோபாலனும் படையுடன் வந்து இவனுக்கு உதவி இருத்தல் வேண்டும் என்பது தெரிய வருகிறது. இறுதியில் இவனை முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் வென்று அவன் தலைநகராகிய நெல்லூரில் வீராபிடேகம் செய்து கொண்டான்.

திருப்பாலைவனத்தில் இவனது கல்வெட்டுகள் 6 காணப்படுகின்றன. முறையே இம்மன்னனின் 7,15,16,18,20,25-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளாகும். "திரிபுவனசக்கரவர்த்தி விசயகண்டகோபால தேவன்" என்று மன்னன் பெயர் இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் மொழிகளிலும், தமிழ் எழுத்துகளிலும் எழுதப்பட்டுள்ளன.

## முதல் சடையவர்ம சுந்தர பாண்டியன்

கி.பி. 1250-க்குப் பிறகு பிற்காலப் பாண்டியர் ஆட்சி தமிழகம் முழுவதும் பரவியது. மூன்றாம் இராசேந்திரனையும் அவன் கீழ் சிற்றரசனாயிருந்த விசய கண்ட கோபாலனையும் தோற்கடித்து சோழ நாட்டில் தன் ஆட்சியை நிறுவி இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தவன். பாண்டிய நாட்டை எங்கும் பரவச் செய்து மிகவும் உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்தவன். இவன் 'எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீசுந்தரப்பாண்டிய தேவர்' என்று வழங்கப் பெற்றவன். சுந்தரபாண்டியன் தெலுங்குச் சோழனாகிய விசயகண்ட கோபாலனை போரில்கொன்று நெல்லூரைக் கைப்பற்றி அந்நகரில் வீராபிடேகம் செய்து கொண்டான். விசய கண்ட கோபாலின் தம்பியர் வந்து வணங்கவே அவர்கட்குரிய நாட்டை அளித்து

ஆண்டுதோறும், தனக்கு கப்பம் செலுத்திக்கொண்டு, அரசாண்டு வருமாறு பணித்தான். அதனைக் கீழ்வரும் பாடல் குறிப்பிடுகின்றன.

"வாக்கியல் செந்தமிழ்ச் சுந்தர பாண்டியன் வானமரில்
வீக்கியவன், கடிற்கண்ட கோபாலனை விண்ணுலகிற்
போக்கிய பின்பவன், தம்பியர் போற்றப் புரந்தரசில்
ஆக்கிய வார்த்தை பதினாறு உலகமுமாகியதே".

திருப்பாலைவனத்தில் சுந்தர பாண்டியனது கல்வெட்டுகள் மூன்று காணப்படுகின்றன. அவை முறையே அவனது 11,14-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்ததாகும். "திரிபுவனச் சக்கரவர்த்தி சடாவர்மன் சுந்தரபாண்டிய தேவன்" என்று கல்வெட்டில் இம்மன்னன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் மொழியில் தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன.

## சம்புவராயர்

இவர்கள் சோழராட்சியிலிருந்தே காஞ்சிபுரம், திருவண்ணாமலை பகுதிகளில் சிற்றரசர்களாய் இருந்து வந்தனர். விக்கிரமச் சோழன் காலத்தில் 'விக்கிரமச் சோழ சம்புவராயன்' என்பவனும். இரண்டாம் இராசராசன் காலத்தில் 'நித்த வினோத சம்புவராயன்' என்பவனும் 'இராசநாராயண சம்புவராயன்' என்பவனும் குறுநில மன்னர்களாயிருந்து ஆட்சி புரிந்தனர். 'இராச நாராயணன்' என்று முதலாம் குலோத்துங்கனுக்கும் ஒரே சிறப்புப் பெயர் உண்டு என்பது ஈண்டு குறிப்பிட வேண்டிய ஒன்று.

## இராசநாராயண சம்புவராயர்

சம்புவராயர்களின் தலைசிறந்தவன் இவன். பிற்காலச் சோழராட்சிக்குப் பிறகு ஏற்பட்ட பாண்டியர் ஆட்சிக்கு வீழ்ச்சி ஏற்பட்ட பின்னர் விசய நகர பேரரசின் தோற்றம் வரை இவன் தொண்டை மண்டலம் பகுதியில் ஆட்சி நடத்தி வந்தான். மாமல்லபுரத்தில் காணப்படுகின்ற இவன் கல்வெட்டு ஒன்று சகவருடம் 1275-இல் இவனுடைய 13-வது ஆட்சியாண்டைக் குறிப்பிடுவதாகவும், இதனால் இம்மன்னன் கி.பி. 1340-இல் பட்டத்துக்கு வந்தான் என்றும், தமிழக அரசு தொல்பொருள்

ஆய்வுத் துறையின் இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் தன்னுடைய 'மாமல்லை' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். இராசநாராயண சம்புவராயர் சுமார் 30 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார் என்றும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருப்பாலைவனத்தில் இம்மன்னன் கல்வெட்டு ஒன்று மட்டுமே காணப்படுகின்றது. இதில் இம்மன்னனின் 3-ஆம் ஆட்சி ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. 'இராச நாராயண சம்புவராயன்' என்றே இம்மன்னன் பெயர் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டு தமிழ் மொழியிலும், தமிழ் எழுத்துகளிலும் காணப்படுகின்றது.

## காகத்தியர்

காகத்தியர்கள் முதலில் சாளுக்கியர்களின் கீழ் சுமார் ஒரு நூற்றாண்டு காலம் சிற்றரசர்களாய் இருந்தவர்கள். சாளுக்கிய மன்னன் நான்காம் விக்கிரமாதித்தனின் கீழ் சிற்றரசனாயிருந்த 'இரண்டாம் பெத்த' என்பவன் தான் காகத்திய வம்சத்தின் முதல் அரசனாகக் கருதப்படுகிறான். இவன் காலம் கி.பி. 1076 - 1126. சாளுக்கிய மன்னன் மூன்றாம் சோமேஸ்வரன் இறந்த பின்பு காகத்தியர்கள் தனியரசாக திறமைப் பெற்று விளங்கினர். ஆந்திரப் பகுதியையும் கைக்கொண்டு 'வாரங்கல்' என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். தனியரசின் முதல் மன்னன் பெயர் 'காகத்தி ருத்ரதேவா' என்பது. இவ்வம்சத்தின் சிறந்த மன்னர்களாகக் கருதப்படுவோரில் 'காகத்திய கணபதியும்' 'பிரதாபருத்ர தேவரும்' அடங்குவர்.

தொண்டை மண்டலம் காஞ்சிபுரத்தில் காணப்படுகின்ற மூன்றாம் இராசேந்திரனின் கி.பி.1245-ஆம் ஆண்டு (352 and 576 of 1919) கல்வெட்டிற்குப் பிறகு, அவனது கல்வெட்டுகள் எதுவும் அங்கு தென்படவில்லை. இராசேந்திரனின் 29-ஆம் ஆட்சி ஆண்டைக் குறிக்கிறது. காகத்திய கணபதியின் கல்வெட்டு (2 of 1893) இதுகி.பி.1249-ஆம் ஆண்டு நாள் செவ்வாய்க்கிழமையைக் குறிக்கிறது. எனவே மூன்றாம் இராசேந்திரனின் 29-ஆம் ஆட்சி ஆண்டிற்குப் பிறகு அதாவது கி.பி. 1245-க்கு பிறகு தொண்டை மண்டலம் காகத்தியர்கள் வசமாயிற்று என்று அறியமுடிகிறது.

## மஹா மண்டலேஸ்வர பிரதாப ருத்ரதேவன்

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரதாப ருத்ரதேவன் கி.பி. 1295-லிருந்து 1323-வரை ஆண்டவன். காகத்திய கணபதியின் மகள் ருத்ராதேவி என்ற ருத்ராம்பாளின் பேரன், இம்மன்னனுக்கு வீரருத்ரா என்ற மற்றொரு பெயரும் உண்டு. ருத்ராம்பாள் இறந்த பிறகு கி.பி. 1295-இல் தனது 35-ஆவது வயதில் பட்டத்திற்கு வந்தவன், இவனது கல்வெட்டொன்று திருப்பாலைவனத்தில் காணப்படுகிறது. கல்வெட்டு தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. ‘மஹா மண்டலேஸ்வர பிரதாப ருத்ர தேவர்’ என்றே கல்வெட்டில் இவன் பெயர் குறிப்பிடப்படுகிறது. ‘பிரமாதி’ என்ற ஆண்டின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விசயநகர மன்னர்கள்

### புக்கர்

விசயநகர அரசை நிறுவியவர்களில் ஒருவர், கம்பிலித் தேவன் குடும்பத்தைச் சார்ந்தவன். சங்கமர் என்பவரின் ஐந்து புதல்வர்களுள் ஒருவன். இவன் கி.பி. 1357-லிருந்து கி.பி. 1377-வரை இருபது ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவர் காலத்தில் இவரது மகன் கம்பண்ணன் என்பவன் சுல்தான்களின் ஆதிக்கத்தை ஒழிக்கக் கருதித் தெற்கே படையெடுத்துச் சென்று தமிழகத்துத் தொண்டை நாட்டில் இருந்த படைவீடு இராச்சியத்தை வென்று பின்பு மதுரையில் முகமது துக்ளக்கின் காலத்தில் ஏற்பட்டு நடந்து வந்த சுல்தான் ஆட்சியை ஒழித்து மதுரை நாயக்கரின் நேரடி ஆட்சிக்கு வழிகோலி வைத்தார். எனவே இரண்டாம் கம்பண்ணனின் தென்னாட்டுப் படையெடுப்பு புக்கர் ஆட்சியில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

புக்கர் காலக்கல்வெட்டு ஒன்று திருப்பாலைவனத்தில் காணப்படுகிறது. இது தமிழில் எழுதப்பட்டுள்ளது. ‘குமார விசய புக்கராயர்’ என்று மன்னர் பெயர், இக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆட்சியாண்டு ‘க்ரோதனா’ ஏன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## குமார வீரசாயன உடையார்

இவனும் விசய நகர வம்சத்தைச் சார்ந்தவன். கம்பராஜாவின் மகன் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறான். கம்பண்ணனை இங்கு 'கம்பராஜா' என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும். கம்பணரே தட்சண மகா மண்டலேஸ்வரராய் இருந்து தமிழ் நாட்டையும் மேற்பார்த்து வந்தவர். எனவே அவரது மகனான குமார வீரசாயன உடையாரின் கல்வெட்டு தொண்டை மண்டலத்தில் காணப்படுவது இயல்பு.

திருப்பாலைவனத்தில் இம்மன்னனின் கல்வெட்டுகள் நான்கு காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டு கல்வெட்டுகளில் மன்னர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் கோயிலில் மண்டபம் எடுக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மன்னன் பெயர் குறிப்பிடாத இரண்டு கல்வெட்டிலும் மண்டபம் கட்டியவனின் பெயரும் அது யாரால் கட்டப்பட்டது என்றும் குறிப்பும் உள்ளது. எனவே பெயரிடப்படாத இரண்டு கல்வெட்டுகளும் இம்மன்னன் காலத்தியதே என்று துணிய முடிகிறது. அக்கல்வெட்டுகள் அனைத்தும் முறையே மன்னனின் 4,10-ஆம் ஆட்சியாண்டுகளைச் சார்ந்தவை. ஒன்றில் ஆண்டு குறிப்பிடப்படவில்லை. மற்றொன்றில் 'காளயுக்தி' என்று ஆண்டின் பெயர் குறிப்பிடப்படுகிறது. மூன்று கல்வெட்டுகள் தமிழிலும், ஒன்று தெலுங்கிலுமாக உள்ளது.

## கோனேரின்மைக் கொண்டான்

ஒரு கல்வெட்டில் மன்னன் கோனேரின்மைக் கொண்டான் என்று குறிப்பிடப்படுகின்றான். மன்னனின் நேரடி ஆணையை 'கோனேரின்மைக் கொண்டான்' என்று குறிப்பிடுவது வழக்கம். ஆனால் எந்த மன்னனின் ஆவணம் என்பது அறிய முடியவில்லை. இது சோழர் காலக் கல்வெட்டு என்பதில் ஐயமில்லை.

## பிற கல்வெட்டுகள்

இக்கோயிலில் மன்னன் பெயரிடப்படாதக் எட்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றுள், இரண்டு கல்வெட்டுகளில் ஆண்டு குறிப்பிடப்படவில்லை. பிறிதொன்றில்

18-ஆம் ஆட்சியாண்டு என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய 6 கல்வெட்டுகளில் சக ஆண்டு சொல்லப்பட்டு உள்ளது. அவை முறையே வருமாறு:

சக ஆண்டு 1601 - கி.பி. 1679
சக ஆண்டு 1681 - கி.பி. 1759
சக ஆண்டு 1362 - கி.பி. 1440
சக ஆண்டு 1356 - கி.பி. 1434
சக ஆண்டு 1280 - கி.பி. 1358

இவையனைத்தும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலிருந்து 18-ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகளாகும். சக ஆண்டு 1280 என்று சொல்லப்பட்டுள்ளக் கல்வெட்டில் 12-ஆம் ஆட்சி ஆண்டும் எழுதப்பட்டுள்ளது. இவ்வாண்டுகளை வைத்துக் கொண்டுப் பார்க்கும் போது இவை முறையே விசயநகர மன்னர்கள் காலத்திலிருந்து நாயக்கர் காலம் வரையிலான கல்வெட்டுகள் எனலாம். ஆகவே நாயக்க மன்னர்கள் காலத்திலும், இக்கோவிலுக்குக் கொடைகள் பல அளிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

இக்கோயில் கல்வெட்டுகளை ஆய்வு செய்ததில் முதலாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து, நாயக்கர்கள் காலம் வரை, இக்கோயிலுக்கு பல வகையானக் கொடைகள் அளிக்கப்பெற்று நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

# கல்வெட்டில் இறைவன் பெயர்

பொதுவாக கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கும், இறைவிக்கும் பல்வேறு காலங்களில் பல்வேறு பெயர்கள் வழங்கி வருதல் இயல்பு. திருப்பாலைவனத்திலுள்ள திருப்பாலீஸ்வரர் நான்கு விதமாகக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளார்.

1. திருப்பாலைவனமுடைய நாயனார்
2. திருப்பாலைவனமுடையார்
3. பாலீஸ்வரஸ்வாமி
4. சம்பு

## திருப்பாலைவனமுடைய நாயனார்

மூன்றாம் குலோத்துங்கனின் 39-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு (351-1929), திருக்காளத்தி தேவன் கண்ட கோபாலனது 3,25-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் (308 of 1929 & 354 of 1929), குமார வீரசாயன உடையாரின் 10-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஆகியவை இறைவன் பெயர் ‘திருப்பாலைவனமுடைய நாயனார்’ என அழைக்கின்றன.

## திருப்பாலைவனமுடையார்

எட்டுக் கல்வெட்டுகள் இவ்வாறு இறைவன் பெயரைக் குறிப்பிடுகின்றன. முதல் குலோத்துங்கனின் 24,23,12-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள், (309, 335, 341 of 1929), இரண்டாம் இராசாதி இராசனின் 11-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு (320 of 1929), மூன்றாம் குலோத்துங்கனின் 15, 19-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் (313,328 of 1929), மூன்றாம் இராசாராசனின் 29-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு (340 of 1929), ஆகிய எட்டு கல்வெட்டுகள் இவ்விறைவனை ‘திருப்பாலைவனமுடையார்’ என்று குறிப்பிடுகின்றன.

## பாலீஸ்வரஸ்வாமி

சக ஆண்டு 1601 (கி.பி. 1679) ஐச்சார்ந்த மன்னனின் பெயரில்லாத ஒரு தெலுங்குக் கல்வெட்டில் பாலீஸ்வரஸ்வாமி என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீபாலீஸ்வர ஸ்வாமி இறைவனின் உச்சி கால வ ழிபாட்டிற்காக கொடையளிக்கப்பட்ட செய்தி கல்வெட்டு குறிப்பிலிருந்து அறியப்படுகிறது. (356 of 1929)

## சம்பு

மன்னனின் பெயரும், ஆண்டும் சொல்லப்படாத கல்வெட்டு ஒன்றில் 'சாம்பு' என்ற பெயரால் இறைவன் அழைக்கப்படுகின்றான். இது தெலுங்கு எழுத்து, சமஸ்கிருத மொழிக் கல்வெட்டாகும். (307 of 1929)

## இறைவி பெயர்

தேவி, பெரிய நாச்சியார், பிரியாத நாச்சியார், ஆகிய இம்மூன்று பெயர்கள் இறைவிக்கு வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாம் இராசராசனின் 29-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் 'பெரிய நாச்சியார்' என்ற பெயரும் (340 of 1929), இராசநாராயண சம்புவராயனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் என்றும் 'பிரியாத நாச்சியார்' என்ற பெயரும் (377 of 1929), மன்னன் பெயரும் ஆண்டும் சொல்லப்படாத கல்வெட்டொன்றில் 'தேவி' என்றும் (307 of 1929) இறைவியின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. தற்போது 'லோகாம்பிகை' என்ற பெயர் வழங்கப்படுகிறது.

## குமாரீஸ்வரமுடைய நாயனார்

முதலாம் குலோத்துங்கனின் 23-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் (341 of 1929) குமாரீஸ்வரமுடைய நாயனார் என்ற பெயர் சொல்லப்பட்டுள்ளது. இது திருப்பாலீஸ்வரருக்கு வழங்கப்பட்ட பெயரல்ல. திருப்பாலைவனமுடையார் கோயிலைச் சார்ந்த சில பிராமணர்கள் குமாரீஸ்வரமுடைய நாயனார் என்னும் இறைவனுக்கு கொடையளித்துள்ளனர். ஆனால் அவ்வூர் எதுவென்று அறிய முடியவில்லை.

# கல்வெட்டுகளில் நாட்டுப் பிரிவுகள்

தொண்டை மண்டலம் பல மண்டலங்களாவும், கோட்டங்களாகவும் நாடுகளாகவும், ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன என்றும் கல்வெட்டொன்று மூலம் அறியக்கிடக்கின்றன. இக்கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் மண்டலங்கள், கோட்டங்கள், வளநாடுகள், நாடுகள், கூற்றங்கள், ஊர்கள், சதுர்வேதிமங்கலம் பின்வருமாறு.

### மண்டலங்கள்

1. சயங்கொண்ட சோழ மண்டலம்
2. சோழ மண்டலம்

### கோட்டங்கள்

1. பையூர்க் கோட்டம்
2. புலியூர்க் கோட்டம்
3. ஊற்றுக்காட்டுக் கோட்டம்
4. புழற்கோட்டம்
5. ஈக்காட்டுக் கோட்டம்
6. செங்காட்டுக் கோட்டம்

### வளநாடுகள்

1. இராசராச வளநாடு
2. விக்கிரம சோழ வளநாடு
3. நித்த வினோத வளநாடு
4. தென்கரை நித்த வினோத வளநாடு
5. மெய்குன்ற வளநாடு
6. குலோத்துங்க சோழ வளநாடு

### நாடுகள்

1. பையூர் நாடு
2. குன்றத்தூர் நாடு
3. திருமுனைப்பாடி நாடு
4. நடுவு நாடு
5. குன்ற நாடு
6. நாயிற்று நாடு
7. பேரூர் நாடு
8. காக்கலூர் நாடு
9. திருநறையூர் நாடு

### சதுர்வேதிமங்கலம்

1. சத்ரு பயங்கர சதுர்வேதிமங்கலம்
2. குஞ்சரமல்ல சதுர்வேதிமங்கலம்
3. கேரளாந்தக சதுர்வேதிமங்கலம்
4. விக்ரம சோழ சதுர்வேதிமங்கலம்

### கூற்றம்

1. ஆவூர் கூற்றம்

### ஊர்கள்

1. சாத்தனூர்
2.. அரசூர்
3. குன்றத்தூர்
4. திருவான்மியூர்
5, கோளூர்
6. இரையூர்
7. வயலூர்
8. பேரூர்
9. அதங்கூர்

10. நெல்லூர்
11. குலோத்துங்கசோழன் பையூர்
12. மெதுவூர்
13. ஆவூர்
14. ஆமூர்
15. எயினூர்
16. திருப்பாச்சூர்
17. மெதுகூர்
18. உறனூர்
19. அளிநல்லூர்
20. பெருங்குரும்பூர்
21. ஈஞ்சூர்
22. ஆலத்தூர்
23. விருதுராஜபயங்கரநல்லூர்
24. நணாயூர்

## கிராமங்கள்

1. இத்தம்பேடு
2. பனங்குடி
3. திருப்பாலைவனம்
4. பூவரம்பி
5. நடுவில்மலை
6. மென்முதலைமேடு
7. புதுவாயில்
8. பெரும்பேடு
9. பொன்னைம்பாக்கம்

## தெருக்கள்

1. பெரியதெரு
2. பிரிதிமாணிக்க பெருந்தெரு

# கல்வெட்டில் கொடைகள்

## முதலாம் குலோத்துங்கன் காலம் :-

## முனையதரையன் திருவரங்கம் உடையான் மலையராயன்

இவன் பல்லவர் குலத்தில் தோன்றியவன். இவன் அறிவாற்றல்களில் சிறந்து விளங்கியமையால் முதலில் குலோத்துங்கனுடைய அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாகிப் பிறகு படிப்படியாக உயர்நிலையை எய்தி இறுதியில் இவ்வேந்தர்க்கு அமைச்சர் ஆகவும், படைத்தலைவர்களுள் முதல்வனாகவும் ஆயினான். இவனது மற்றொரு பெயர் "கருணாகரத் தொண்டைமான்". இவனது வரலாற்றைக் கலிங்கத்துப் பரணி சிறப்பித்துக் கூறுகிறது. இவனே வடகலிங்கப் போருக்குத் தலைமையேற்று படைத்தலைவனாகச் சென்று, போர் நடத்தி அந்நாட்டு வேந்தனாகிய அனந்தவர்ம சோழகங்கனை வென்று, குலோத்துங்க சோழருக்கு வாகைமாலை சூட்டியவன். கவிச்சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டாரும் இவனை 'வண்டையர்' அரசன் 'அரசர்கள் நாதன்' மந்திரி 'உலகு புகழ் கருணாகரன்' எனவும் புகழ்ந்துள்ளார். இவன் விக்கிரமச் சோழன் ஆட்சியின் முற்பகுதியிலும், இருந்துள்ளான் என்பது விக்கிரமச் சோழனுலாவினால் அறியக் கிடக்கின்றது. "முனையதரையன்" என்பது அரசனால் இவனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் ஆகும்.

திருப்பாலைவனத்தில் முதல் குலேத்துங்கனின் 14-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் இவன் நடுவில் மலை என்ற இடத்தைச் சார்ந்தவன் என்றும், இக்கோயிலுக்குப் பசுக்களைத் தானமாகக் கொடுத்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. முதல்குலோத்துங்கன் கி.பி. 1070-இல் பட்டத்துக்கு வந்தவனாகையால் இவன் கொடையளித்தது. கி.பி. 1084-இல் என்பது உணரப்படுகிறது.

## விக்கிரமசோழன் காலம்:-

## திருவேகம்பமுடையான் நாற்பத்தெண்ணாயிரம் நம்பி

இவன் "சோளிய வாணியந் திருவேகம்பமுடையார்" என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறான். இவன் திருப்பாலைவன முடையார், ஸ்ரீபண்டாரத்தாருக்குப் பொன் கொடுத்து குஞ்சரமல்ல சதுர்வேதி மங்கலத்தாரிடமிருந்து, நிலம் வாங்கி, கோனூர் திருப்பாத்துறை, திருப்பாலைவனமுடையார் கோயில் "தன்ம தாவளன்" திருமடத்துக்கு அதனை அளித்தான்.

முதற்குலோத்துங்கன் காலத்தில் நிலங்கள் அளக்கப் பெற்று நிலவரி ஒழுங்குப்படுத்தப் பட்டபோது அதன் அதிகாரிகளாக இருவர் இருந்தனர். 1. திருவேகம்பமுடையானான உலகளந்த சோழ பல்லவரையன் 2. குளத்தூருடையான் உலகளந்தானான திருவரங்கதேவன்.

ஈண்டு விக்கிரமச் சோழன் காலத்தியவனாகக் கருதப் படுகின்ற திருவேகம்பமுடையான் நாற்பத்தெண்ணாயிர நம்பி, முதற்குலோத்துங்கன் காலத்தில் இருந்த திருவேகம்ப முடையோனான உலகளந்த சோழ பல்லவரையனாகவும் இருக்கலாம். அல்லது அவன் குடியில் தோன்றியவனாகவும் இருக்கலாம். "உலகளந்தான்" என்பது, நிலங்களை அளந்ததால் மன்னனால் கொடுக்கப்பட்டச் சிறப்புப் பெயர் ஆகும்.

கல்வெட்டுக் கூற்றுபடி இவன் விக்கிரம சோழனின் 14-ஆம் ஆட்சியாண்டில் கொடையளித்து உள்ளான். விக்கிரம சோழன் கி.பி. 1118-இல் ஆட்சி வந்ததால் அவனது 14-ஆம் ஆட்சியாண்டு என்பது, கி.பி. 1132-எனத் தெரியவருகிறது.

## இரண்டாம் இராசராசன் காலம்:-

## ஆரியன் திருச்சிற்றம்பலமுடையான் பதுமன் என்ற கத்திமன்

இவன் இக்கோயிலுக்கு எருமைகள் கொடுத்ததாக மன்னனின் 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கூறுகின்றது. இது கி.பி. 1160-ஆம் ஆண்டைக் குறிக்கிறது. கோயிலில் விளக்கு எரிப்பதற்காக இவன் இக்கொடையை அளித்துள்ளான். இவன்

காஷ்மீரபுரத்தைச் சார்ந்தவன் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவனே இதே மன்னர் காலத்தில் திருவொற்றியூரிலுள்ள திரு வொற்றியூருடையார் கோயிலுக்கு 12 எருமைகள் கொடை அளித்ததாக அங்குள்ள கல்வெட்டுக் குறிப்புகள் கூறுகின்றன. எனவே இவன் இரண்டாம் இராசராசன் காலத்தில் தொண்டை மண்டலத்திலே இரு கோயில்களுக்கு கொடையளித்துள்ளான் என்பது தெளிவாகிறது.

மேலும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சேரமா தேவியில் இருக்கும் கைலாசமுடையார் கோயிலுக்கு முதல் இராசேந்திரன் காலத்தில் காஷ்மீரத் தேசத்தைச் சார்ந்த யோகதேவன் என்பவனும், அவன் மனைவியும் 12 காசுகள் கொடுத்ததாக அங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. முதல் இராசராசன் காலத்திலேயே அவன் மகன் இராசேந்திரன், கங்கை வரை சென்று, வெற்றி பெற்று வந்தான். எனவே அதன் விளைவாக காஷ்மீரபுரத்திலிருந்து பலர் தென்னாட்டிற்கு வந்திருக்க வேண்டும். அந்தத் தொடர்பு, இரண்டாம் இராசராசன் காலத்திலும் தொடர்ந்து நிலை பெற்று இருந்தது என்று ஆரியன் திருச்சிற்றம்பலமுடையான் தொண்டை நாட்டிலுள்ள கோயில்களுக்கு அளித்த கொடையில் இருந்து தெரிய வருகிறது. எனவே இவன் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு வந்தவன் என்பது வெளிப்படை.

## மங்கை நாயக்கன் மழவராயன்

சத்ருபயங்கர சதுர்வேதிமங்கல ஊர்ச்சபையைச் சார்ந்தவன் என்று இவன் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இரண்டாம் இராசராசதேவரின் 17-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1163) இவன் திருப்பாலீஸ்வரர் கோயிலுக்கு நிலம் கொடையளித்துள்ளான்.

## சேக்கிழான் பட்டி தேவன் ஆட்கொண்டான்

இரண்டாம் இராசராசனின் 10-ஆம் ஆட்சி ஆண்டில் இக்கோயிலுக்கு ஆடுகளை தானமளித்துள்ளான். இவன் குன்றத்தூரைச் சார்ந்தவன் என்று கல்வெட்டில் குறிப்பிடப் படுகின்றான். புலவர் பெருமான் சேக்கிழாரும் குன்றத்தூரைச் சார்ந்தவர் தான். இவன் பெயரிலும், சேக்கிழான் என்ற பெயர்

இணைந்து காணப்படுகின்றது. மேலும் சேக்கிழார் பிறந்த ஊரான குன்றத்தூரைச் சார்ந்தவன் என்றே இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளான். இவனும் சேக்கிழார் பெருமான் தோன்றிய அதே குலத்தைச் சார்ந்தவனாகவேயிருத்தல் வேண்டும் என்பது உறுதியாகின்றது.

## அமண்பாக்கிழான்

இவனுடைய மருமக்கள் இருவர் தங்கள் கணவன்மாரின் நலனிற்காக இக்கோயிலுக்கு 8 பழங்காசுகள் கொடுத்து உள்ளனர். இக்கொடை இரண்டாம் இராசராசனின் 15-ஆம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் இராசாதிராசன் காலம்:-

## குலோத்துங்க சோழன் மகிபாலன்

இரண்டாம் இராசாதிராசனின் 6-ஆம் ஆட்சியாண்டில் ஆமூரைச் சார்ந்த குலோத்துங்க சோழன் மகிபாலன் என்பவன் மார்கழித் திருவாதிரைத் திருநாளைக் கொண்டாடுவதற்காக கொடையளித்துள்ளான்.

பெருமன்னர்களின் கீழிருக்கும் சிற்றரசர்களும், தளபதிகளும், பிரதிநிதிகளும் அரசியல் அதிகாரியும், மன்னன் பெயரை தங்கள் பெயர்களுடன் இணைத்துப் பட்டப்பெயராக சூட்டிக்கொண்டனர்.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் திருக்காளத்தியைச் சூழ்ந்த நிலப்பகுதியை அரசாண்ட யதுகுல அரசனான கட்டிதேவன் என்பவன் தன் பெயரை "குலோத்துங்க சோழ யாதவராயன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இரண்டாம் இராசராசன் காலத்திலும் இராசராச வங்காரமுத்தரையன், இராசேந்திர சோழ பல்லவராதித்தன், குலோத்துங்க சோழ கடம்பராயன் என்றும் பலர் இருந்தனர். இரண்டாம் இராசாதி இராசனுக்குப் பின்னரும், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஏகவாசகன் குலோத்துங்க சோழ வாணகோவரையன் இராசராச காடவராயன் போன்றோர் இருந்தனர்.

எனவே இரண்டாம் இராசாதிராசன், காலத்திலும் "குலோத்துங்க சோழன்-மகிபாலன்" என்ற பெயர் கொண்ட இவன் மன்னனின் கீழிருந்த ஒரு பிரதிநிதியாகவோ அல்லது அரசு அதிகாரியாகவோ அல்லது குலோத்துங்கனிடம் அதிகாரியாயிருந்தவரின் மகனாகவோ இருக்கலாம். இவன் ஆமூர் நாட்டைச் சார்ந்தவன் என்று குறிப்பிடப்படுவதாலும் மன்னனின் பெயர் கொண்டு விளங்குவதாலும் ஆமூர் நாட்டின் பிரதிநிதி அல்லது அரசியல் அதிகாரியாகயும் இருக்கலாம்.

## மூன்றாம் குலோத்துங்கன் காலம்
## நுங்கமா தேவியார்

1196-இல் மூன்றாம் குலோத்துங்கனின் கீழ் சிறந்த சிற்றரசனாயிருந்த மதுராந்தக பொத்தப்பிச்சோழன் சித்தரைசனின் மனைவி நுங்கமா தேவியார் கோயிலில் விளக்கு எரிப்பதற்காக கோயில் சிவ பிராமணர்களிடம் பணம் கொடுத்ததாக இக்கோயில் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. குலோத்துங்க சோழனின் 18-ஆம் ஆட்சியாண்டில் இவன் இக்கோயிலுக்கு மட்டுமன்றி காளஹஸ்தி (சித்தூர்) நந்தலூர் (கடப்பா) ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களுக்கும் கொடை அளித்துள்ளார்.

## மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் சித்தரைசன்

மூன்றாம் குலோத்துங்கனின் 18-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் (கி.பி. 1196) மதுராந்தப் பொத்தப்பிச் சோழன் சித்தரைசன் பற்றி குறிப்பு காணப்படுகிறது. இவனது மனைவி நுங்கமாதேவி கோயிலில் விளக்கெரிக்க தானம் அளித்துள்ளச் செய்தியில் தன்னுடைய கணவனுடைய பெயருடன் குறிப்பிட்டுள்ளதிலிருந்து மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் சித்தரைசன் பற்றிய குறிப்பினை அறியமுடிகிறது.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும், 'மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன்' ஒருவன் குறிக்கப்படுகிறான். இவன் கடப்பாவிலுள்ள பொத்தப்பி என்னும் ஊரிலிருந்து அதனைச் சூழ்ந்த நாட்டை அரசாண்ட ஒரு சிற்றரசன். கி.பி. 1141-இல் கடப்பவிலுள்ள நந்தலூரிலுள்ள குலோத்துங்க சோழ விண்ணகரத்திற்குரிய நிலங்களின் எல்லைகளை கோயிலில்

கல்லில் வரையும் படி இவன் உத்தரவு செய்தான் என்று அங்குள்ள கல்வெட்டொன்றும் கூறுகிறது.

மேலும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் இப் பெயருள்ள சிற்றரசன் குறிப்பிடப்படுகிறான். பொத்தப்பி, நெல்லூர் ஆகிய ஊர்களிலிருந்து அரசாண்டு கொண்டிருந்த தெலுங்குச் சோழருள் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன், அவன் புதல்வன் நல்ல சித்தரைசன், திருக்காளத்தித் தேவன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர். நெல்லூர், கடப்பாவில் காணப்படும் சில கல்வெட்டுகளில் இருந்து மூன்றாம் குலோத்துங்கனுக்குக் கீழ்பட்டிருந்த சிற்றரசர்கள் என்பது நன்கு புலனாகிறது.

எனவே இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன், இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலிருந்த பொத்தப்பிச் சோழனின் வழி வந்தவனும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலிருந்த மதுராந்தகப் பொத்தப்பிச் சோழனின் மகனான நல்ல சித்தரசனுமாவான். இவனுக்கு 'நல்ல சித்தா' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

## வளையமழகியான் ஒற்றியரசன்

இவன் குலோத்துங்க சோழன் பையூரின் நாடாளுபவன் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறான். கோயிலில் விளக்கு எரிப்பதற்காக பசுக்கள் கொடுத்தான். இவனே, மூன்றாம் இராசராசனின் 28-ஆம் ஆட்சியாண்டில் சேனாதிபதியென்று குறிப்பிடப்படுகிறான். இவன் 3-ஆம் குலோத்துங்கனின் 6-ஆம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 1184-இல் குலோத்துங்க சோழன் பையூரின் நாடாளுபவனாக இருந்து பின்னர் மூன்றாம் இராசராசனின் 28-ஆம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி.1244-இல் சேனாதிபதி என்ற உயர் பதவியிலும் இருந்திருக்கிறான் என்றும் தெரியவருகிறது.

## கங்கமாதேவி திலக வாணுதலி

சயங்கொண்ட சோழ மண்டலத்திலுள்ள செங்காட்டுக் கோட்டத்திலிருக்கும் சேத்துறையைச் சார்ந்தவள். கோயிலில் விளக்கு எரிப்பதற்காக தானமளித்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

இக்கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்களின் 36-ஆம் ஆட்சி ஆண்டாகிய கி.பி. 1214-இல், கொடையளிக்கப்பட்டுள்ளது.

## சோடி வடுகன்

சோடி வடுகன் என்பவனுக்கு ‘ஜெயங்கொண்ட சோழ கிடாரத்தரையன்’ என்ற மற்றொரு பெயரும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்ட திருப்பாலீஸ்வரர் கோயில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் மீண்டும் புதுப்பித்துக் கட்டப்பட்டது. இக்கோயில் இந்த ‘சோடி வடுகன்’ என்பவனின் மேற்பார்வையில் கட்டப்பட்டது என்று கல்வெட்டு கூறுகின்றது.

## வடுகன் தேவன்

இக்கோயில் மூன்றாம் குலோத்துங்கள் காலத்தில் மீண்டும் கட்டப்பட்டபோது இவனும் அதில் பங்கு ஏற்றான். அதற்காக அளிக்கப்பட்ட நிலத்தில் மூன்றில் இரண்டு பங்கு உரிமையை தன்னுடைய மருமகன்கள் இருவருக்கும் சீதனமாகக் கொடுத்தான் என்று கல்வெட்டு பகர்கின்றது. முன்னர் குறிப்பிடப்பட்ட சோடி வடுகன் என்பவனும் வடுகன் தேவன் என்பவனும் உறவினர்கள் எனலாம்.

## மூன்றாம் இராசராசன் காலம் :-

## கண்டகோபாலன்

மூன்றாம் இராசராசனின் கீழ் ஆட்சிச் செலுத்திய ஒரு சிற்றரசன். திருக்காளத்தி தேவனின் மகன் இவன் கண்ட கோபால மாணிக்கம் என்ற பெண்ணின் பெயரில், இக்கோயிலைச் சார்ந்த மடத்துக்கும், பூந்தோட்டத்திற்கும் நிலம் கொடுத்ததாக இக்கல்வெட்டுக் கூறுகின்றது. இது மூன்றாம் இராசராசனின் 15-ஆம் ஆட்சி ஆண்டைச் சார்ந்ததாகும். இம்மன்னனின் 12-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டிலும் இவன் இக்கோயிலுக்கு திருச்சாந்துப் படிக்காக நிலம் கொடுத்ததைக் கூறுகிறது. இக்கல்வெட்டில் இவனுடைய முழுப்பெயரான மதுராந்தகப் பொத்தப்பிச்சோழன் கண்டகோபாலன் என்பது குறிப்பிடப் பட்டுள்ளது.

## கண்டகோபால மாணிக்கம்

"பனையந்தை" என்பது இவளது மறுபெயர். "சீத்தம்மா தேவியார்" என்ற பெண்ணின் சகோதரி என்று, இராசராசனின் 15-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறாள். மேலும் இவள் பெயரில் "கண்டகோபால மாணிக்க மடம்" என்ற ஒரு மடம் இருந்ததை இதே கல்வெட்டுக் குறிக்கின்றது. தெலுங்குச் சோழ சிற்றரசனான கண்டகோபாலன் இப்பெண்ணின் பெயரால் நிலம் கொடையளித்திருப்பதையும் இக்கல்வெட்டுகள் கூறுகின்றன.

## சீதம்ம தேவியார்

நெல்லூரிலுள்ள மனும சித்தீஸ்வரம் உடைய நாயனார் கோயிலில் நாட்டியப் பெண்ணாயிருந்தவள் என்பது கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. மேலும் மேலே குறிப்பிடப்பட்ட கண்ட கோபால மாணிக்கம் என்ற பெண்ணின் சகோதரி என்றும் குறிப்பிடப்படுகிறாள்.

## நாற்பத்தெண்ணாயிர வேளான்

இவனுக்கு 'அம்மையப்பன்-பார்பதி பாகன்' என்ற மற்றொரு பெயரும் இருக்கிறது. கோயிலில் விளக்கு எரிப்பதற்காக இவன் பணம் கொடுத்தான் என்றும், இவன் மெதுவூரைச் சார்ந்தவன் என்றும் இராசராசனின் 23-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. 'அம்மையப்பன்' இராசேந்திர சோழ சம்புவராயன், அம்மையப்பன் கண்ணுடைய பெருமாளான விக்கிரம சோழ சம்புவராயன், அம்மையப்பன் சீயன் பல்லவாண்டானான இராசநாராயண சம்புவராயன் என்று பல பெயர்கள் சூடியோர் சோழர் காலத்திலிருந்ததாகத் தெரிய வருகிறது. மேலும் அம்மையப்பன் என்ற பெயர் பொதுவாக சம்புவராயர்களுக்கே வழங்கி வந்துள்ளது என்றும், அப்பெயர்கள் மூலம் உணரப் படுகின்றது. எனவே இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அம்மையப்பன் பார்பதிபாகன் என்பவனும் சம்புவராயர் வம்சத்தைச் சார்ந்தவனாகவே இருத்தல் வேண்டும்.

## குமணனரசன் சீதரன்

இவன் மென்முதலை மேடு என்ற ஊரைச் சார்ந்தவனென்றும், கோயிலில் விளக்கிற்காக பணம் கொடுத்ததை இராசராசதேவரின் 13-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## விஜயாதீரன் - செல்வன்

இவன் புதுவாயில் என்ற இடத்தைச் சார்ந்தவன் என்றும், விளக்கிற்காகக் கோயிலுக்கு பசுக்கள் தானமாகக் கொடுத்தான் என்றும் கல்வெட்டு கூறுகின்றது. இக்கல்வெட்டு மூன்றாம் இராசராசனின் 7-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தது.

## மாரட்டன் அறமுடையான் அபயம் புக்கான்

இவன் ஒரு வாணிகன். திருப்பாச்சூரைச் சார்ந்த பிரதி மாணிக்கப் பெருந்தெருவைச் சார்ந்தவன். விளக்கிற்காகப் பணமும், விளக்கு ஒன்றும் இக்கோயிலுக்குத் தானமாகக் கொடுத்ததை மூன்றாம் இராசராசனின் 22-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு பகர்கிறது.

## பெரியான் திருச்சிற்றம்பலமுடையான் செழிய வேளான்

இவன் ஆவூர் கூற்றம் உறனூரைச் சார்ந்தவன். கோயிலைச் சார்ந்த அன்பர்க்கடியார் மடத்திலுள்ள ஆண்டார் களுக்காக இவன் நிலம் தானமாகக் கொடுத்துள்ளான். மூன்றாம் இராசராசனின் 7-ஆம் ஆட்சியாண்டில் இவன் இக்கொடையளித்தாகக் கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது.

## சிவ தவனப் பெருமாள்

இவன் ஆலத்தூரைச் சார்ந்தவன். கோயிலில் விளக்கு எரிப்பதற்காக ஆடுகள் கொடுத்துள்ளதை கல்வெட்டால் அறிய முடிகிறது. இக்கல்வெட்டு இராசராசனின் 20-ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டதாகும்.

## பெரியாழ்வார் வானவன் விழுப்பரையன்

இராசராசனின் 22-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் இவன் குறிப்பிடப்படுகின்றான். கோயிலில் விளக்கெரிப்பதற்காக இவன் பொன் கொடையளித்ததை இக்கல்வெட்டு கூறுகின்றது. மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் "விழுப்பாதராயன்" என்றொருவன் அரசியல் அதிகாரியாக இருந்தான் என்று தெரியவருகிறது. இவன் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விழுப்பரையனாகவோ அல்லது இவன் குலத்தில் தோன்றியவனாகவோ இருக்கலாம்.

## திருக்காளத்திதேவ கண்டகோபாலன் காலம் :-

### ஆரணி வண்ணக்கன் பேரம்பலக் கூத்தன் காவுடையான் சூரியதேவன்

ஆரணி வண்ணக்கன் என்று இவன் குறிக்கப்பட்டிருப்பதால் 'ஆரணி' என்ற ஊரைச் சார்ந்தவனாயிருத்தல் வேண்டும். மேலும் இவன் பெயரில் 'பேரம்பலக் கூத்தன்' என்ற சொல் இணைந்திருப்பதால், சிறந்த சிவபக்தனாகவும் இருக்க வேண்டும். திருக்காளத்திதேவனின் மூன்றாம் ஆட்சியாண்டைச் சார்ந்த இக்கல்வெட்டு, மேற்குறிப்பிட்டவன் கோயிலுக்கு நிலம் கொடையளித்ததைக் கூறுகிறது.

## விசயகண்டகோபாலன் காலம் :-

### ஆரணி வண்ணக்கன் பேரம்பலக் கூத்தன் வேட்டையழகியான்

அரசனின் 16-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில், இவன் கோயில் விளக்கெரிப்பதற்காக ஆடுகள் கொடுத்தான் என்று கூறுகிறது. திருக்காளத்தி தேவனின் காலத்தவனாகக் குறிப்பிடப்பட்ட ஆரணி வண்ணக்கன் பேரம்பலக் கூத்தன் காவுடையான் சூரிய தேவனுக்கு, இவன் மகனாக இருக்க வேண்டும். அல்லது இருவரும் ஒரே குலத்தைச் சார்ந்தவர்களாய் இருக்க வேண்டும்.

### தியாக சமுத்திர பல்லவரையர்

விசய கண்ட கோபாலனது 25-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு இவனைப் பற்றி கூறுகிறது. விளக்கிற்காக இவனது மருமகள் கோயிலுக்குப் பொன் கொடுத்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. தியாக சமுத்திரன் என்பது விக்கிரம சோழனின் பட்டப் பெயர்களுள் ஒன்றாகும். 'தியாக சமுத்திரம்' என்ற அவனது பெயரில் ஊரும் உள்ளது. விசயகண்டகோபாலன் காலத்தில் இருந்த அதிகாரி விக்கிரம சோழனின் பட்டப்பெயரை தாங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடாரத்தரையர் சாமிப்பிள்ளை கோவப்பிள்ளை

விசய கண்ட கோபாலனது 7-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் இவன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 'உத்தராயன-சங்கிராந்தியன்று' நடைபெறும் வழிபாட்டிற்காக கோயிலுக்கு 5¾ கண்ட கோபாலன் மாடைகள் கொடுத்தார்.

## ஸ்ரீகாரியம் பல்லவராயர்

'ஸ்ரீகாரியம்' என்ற சொல் கோயில் நிர்வாக காரியம் செய்யப்படுவதை குறிக்கும். இவரது தலைமையில் பல மண்டலங்களையும் சார்ந்த நகரத்தாரும் பரதேஸிகளும், கூடிய கூட்டத்தில், நிலத்தின் 'மகண்மை வரி' களை நீக்கி இப்பல்லவராயர் அதனைக் கோயிலுக்கு கொடுத்தார் என்று விசயகண்ட கோபாலனது 15-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கூறுகிறது.

## திருவேகம்பமுடையான் செங்கதிர்ச்செல்வன்

இவன் விருதராசபயங்கர நல்லூரைச் சார்ந்தவன். இவன் கோயில் தர்மகர்த்தாக்களிடமிருந்து நிலம் விலைக்கு வாங்கி, அதனை கோயிலுக்குப் பூந்தோட்டம் அமைப்பதற்காகக் கொடுத்தான். இச்செய்தியை அரசனின் 35-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கூறுகின்றது.

## சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலம் :-
## சூரிய தேவன்

சுந்தர பாண்டிய தேவரின் 11-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் இவன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பாலைவனத்தைச் சார்ந்த பெரிய தெருவில் வசித்தவன். இவன் மனைவி கோயிலில் விளக்கு எரிப்பதற்காக பணமும் விளக்கு ஒன்றும் கொடுத்தாள் என்று இக்கல்வெட்டு கூறுகிறது.

## தேவர்கள் தேவன்

சுந்தர பாண்டியனின் 14-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இவனைப் பற்றி குறிப்பிடுகிறது. அம்மன் சன்னதியில் விளக்கு எரிப்பதற்காக இவன் கோயிலுக்குப் பணம்

கொடுத்தச் செய்தி இக்கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. இவன் நறையூரின் தலைவனாகவும், தொண்டைமனாரின் பிரதிநிதியாகவும் இருந்திருக்கிறான்.

## இராச நாராயண சம்புவராயன் காலம் :-
## திக்கம நாயக்கர்

இவருடைய பிரதிநிதி ஒருவனை மன்னனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கூறுகிறது. ஆனால் அப்பிரதிநிதியின் பெயர் சொல்லப்படவில்லை. 'பிரியாத நாச்சியார்' என்று சொல்லப்படுகின்ற தேவியின் கோயில் திருப்பணிக்காக அந்த பிரதிநிதி கொடையளித்துள்ளான் என்ற செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. ஆனால் திக்கம நாயக்கரின் பெயர் மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளதேயன்றி அவரைப் பற்றி வேறு எந்த குறிப்புமில்லை.

## விசயநகரர் காலத்தவர்கள் ரெட்டிராசா

இவன் ஒபல ராசய்யா என்பவனின் மகன். கோயிலிலுள்ள நடராசர் மண்டபம் இவனால் கட்டப்பட்டது என்று அந்த மண்டபத் தூணிலுள்ளக் கல்வெட்டு கூறுகிறது. இவன் வீரசாயன உடையார் என்ற விசயநகர மன்னனின் காலத்தவன்.

## அண்ணபிள்ளை நாயக்கர்

இவரும் வீரசாயன உடையார் என்ற விசயநகர மன்னனின் காலத்தவர் தான். இம்மன்னன் கால கல்வெட்டு தான் இவரைப் பற்றியும் குறிப்பிடுகிறது. மண்டபமும் படிகளும் இவரால் கட்டுவிக்கப்பட்டன. அதாவது கொடையளிக்கப்பட்டன என்று அக்கல்வெட்டு கூறுகிறது. 'நாயக்கர்' என்ற சொல் இவர் பெயரோடு இணைந்திருப்பதால் இவர் அரசியல் அதிகாரியாக இருந்துள்ளார் எனலாம்.

## நாராயணா

இவன் சாளுவ குடும்பத்தைச் சார்ந்தவன். கோயிலில் இறைவன், இறைவி ஆகியோரின் அபிஷேடகத்திற்காகவும்

வழிபாட்டிற்காகவும் கொடையளித்துள்ளான். மற்றொரு கல்வெட்டு, கோயிலில் விளக்கு எரிப்பதற்காக கொடையளித்ததை குறிப்பிடுகிறது.

## நுளப்பியாற்றுழான் - நாயக்க நாராயணன் - அல்லுந் திக்கன்

திருப்பாலீஸ்வரர் கோயில் பிராகாரத்தில் வைக்கப்பட்டுள்ள ஒரு கல்லில் அனுமன் உருவம் செதுக்கப்பட்டு அதன் மேற்குபகுதியில் காணப்படுகின்ற கல்வெட்டில், உருவத்தோடு கூடிய இக்கல் இவனால் கொடையளிக்கப்பட்டது என்ற குறிப்பு காணப்படுகிறது. இவனும் நாய்க்கத்தனம் செய்யும் அதிகாரி என்பதால் நாயக்க நாராயணன் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். நுளப்பியாறு என்பது தற்போது சென்னை நகரிலுள்ள 'முகப்பேறு' பகுதியாகும்.

## ரகுநாய குல ராஜீ

இவன் குமார வேங்கடாராஜீ என்பவனின் மகனும் வேங்கடராஜீ என்பவனின் தந்தையான திம்மண்ணா உதயகிரியில் மந்திரியாய் இருந்ததும் இவ்வருடத்தில் தான். கி.பி. 15-ஆம் நூற்றாண்டு என்பது விசய நகர மன்னர்கள் காலமாகும்.

கல்வெட்டுகளில் அரச பிரதிநிதிகள், அமைச்சர், சிற்றரசர்கள், அவர் மனைவிமார்கள் மற்றும் சாதாரண மக்கள் ஆகியோரும் தானமளித்துள்ளனர். மன்னரைச் சார்ந்தோரையன்றி, சாதாரண மக்களும் அளித்துள்ள கொடைகள் பற்றிக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது போற்றத்தக்கதாகும்.

# கல்வெட்டில் நந்தவனங்கள்

திருப்பாலைவனம் கோயிலுக்குச் சொந்தமான நந்த வனங்கள் மூன்று இருந்தன என்று கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகின்றன.

1. ஆலால சுந்தரன் திருநந்தவனம்
2. பத்தர் சித்தத்துறைவான் திருநந்தவனம்
3. ஐம்பத்தெழுவர் திருநந்தவனம்

இந்நந்தவனங்கள் ஏற்படுத்தப்பட்டபின் இதற்காக கொடையளித்தோர் பற்றிய குறிப்புகளும் கல்வெட்டின் மூலம் அறியக் கிடக்கின்றது.

## ஆலால சுந்தரன் திருநந்தவனம்

சாத்தனூர்க் கிராமத்தைச் சார்ந்த 'இந்தம்பேடு' என்ற ஊர்த்தலைவனால் இந்த நந்தவனம் ஏற்படுத்துவதற்காக நிலம் விலைக்கு வாங்கி கொடுக்கப்பட்டது என்று முதலாம் குலோத்துங்கனின் 24-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. எனவே 'ஆலால சுந்தரன்' என்றப் பெயருடைய இந்த நந்தவனம் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்று தெரியவருகிறது. (351 of 1929)

முதலாம் குலோத்துங்கன் பட்டத்திற்கு வந்தது கி.பி. 1070-இல். எனவே அவனது 24-ஆம் ஆட்சியாண்டாகிய கி.பி. 1094-இல் இந்த நந்தவனம் ஏற்படுத்தப்பட்டது என்று தெரிய வருகிறது.

## பத்தர் சித்தத்துறைவான் திருநந்தவனம்

மூன்றாம் இராசராசனின் 7-ஆம் ஆண்டு கல்வெட்டில் (350 of 1929) உறனுானில் உள்ள 'பெரியான் திருச்சிற்றம்பலமுடையான் செழியன் வேளான்' என்பவன் இந்த நந்தவனம் பராமரிப்புக்காக "கேரளாந்தக சதுர்வேதி மங்கலச்

சபை'' யாரிடமிருந்து நிலம் வாங்கிக் கொடுத்தான், என்று இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. எனவே இந்த நந்தவனம் மூன்றாம் இராசராசனின் 7-ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

## ஐம்பத்தெழுவர் திருநந்தவனம்

இந்த நந்தவனம் குறிப்பிடப்பட்டுள்ளக் கல்வெட்டில் மன்னன் பெயர் இல்லை. ஆனால் சக ஆண்டு 1280 என்றும் 12-ஆம் ஆட்சியாண்டு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சகயாண்டு 1280 என்பது கி.பி. 1358-ஐக் குறிக்கிறது. எனவே இது 14-ஆம் நூற்றாண்டில் ஆட்சிச் செலுத்திய விசய நகர காலத்தவர் ஆக இருக்க வேண்டும். (374 of 1929).

ஐம்பத்தெழுவர் திருநந்தவனத்தின் பாதுகாப்பிற்காகக் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு இக்கோயில் நிர்வாகிகள் பணம் பெற்று அதனை வரி நீக்கி கொடுத்துள்ளனர். இந்த நந்தவனம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

## நந்தவனங்களுக்கு கொடை

மேற்கூறப்பட்ட மூன்று கல்வெட்டுகள் தவிர மேலும் நான்கு கல்வெட்டுகள் நந்தவனங்களுக்காக அளிக்கப்பட்ட கொடையைப் பற்றி கூறுகின்றன.

அவற்றுள் இரண்டு கல்வெட்டுகள் குலோத்துங்கன் காலத்தையும் (324 of 1929 & 351 of 1929), ஒன்று மூன்றாம் இராசராசன் காலத்தையும் (370 of 1929), ஒன்று விசய நகர மன்னனான புக்கராயன் காலத்தையும் (370 of 1929), சார்ந்தவை. மற்றொரு கல்வெட்டில் மன்னன் பெயர் குறிப்பிடப்படவில்லை.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பேரூரைச் சார்ந்த ஒரு பொற்கொல்லன் நந்தவனத்திற்கு நிலம் விலைக்கு வாங்கிக் கொடுத்தான் என்று ஒரு கல்வெட்டும், திருவொற்றியூர்க் கோயிலைச் சார்ந்த ஒரு நாட்டியப் பெண் விக்ரம சோழ சதுர்வேதி மங்கல ஊர்ச்சபையாரிடமிருந்து நிலம் விலைக்கு வாங்கி நந்தவன வேலையாட்களின் நலனுக்காகக் கொடையளித்தாள் என்று மற்றொரு கல்வெட்டும் குறிப்பிடுகிறது.

கண்டகோபால மாணிக்கம் என்றப் பெண்ணின் பெயரால், கண்டகோபாலன் என்ற சிற்றரசன் நந்தவனத்தின் பராமரிப்புக்காக நிலம் கொடுத்தான் என்று மூன்றாம் இராசராசன் காலக் கல்வெட்டு கூறுகிறது.

மேலும் நந்தவனத்திற்காக நிலம் வரியிலியாக்கிக் கொடுக்கப்பட்டதாக விசய நகர மன்னனான புக்கராயன் காலக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

எனவே கோயிலுக்கு கொடையளித்ததன்றி நந்தவனங் களுக்கும், பலராலும் கொடையளிக்கப்பட்டு அவை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன என்று கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

# கல்வெட்டில் மடங்கள்

விக்கிரமச் சோழன் காலக்கல்வெட்டிலும், மூன்றாம் இராசராசன் காலக்கல்வெட்டிலும் மடங்கள் பற்றிய குறிப்பு வருகிறது.

சயங்கொண்ட சோழ மண்டலத்து பையூர்க் கோட்டத்து கோளூர்நிலை திருப்பாற்றுறை பாலைவனமுடையார் கோயிற் "தன்மதாவளன் திருமடம்" என்று விக்கிரம சோழனின் 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு குறிப்பிடுகிறது. (325 of 1929).

குஞ்சிரமல்லச் சதுர்வேதிமங்கலத்தாரிடம் பொன் கொடுத்து நிலம் வாங்கி நாற்பத்தெண்ணாயிர நம்பி என்பவன் இம்மடத்துக்குக் கொடுத்துள்ளான்.

மேலும் மூன்றாம் இராசராசன் காலத்திலும் "கண்ட கோபால மாணிக்க மடம்" என்று ஒரு மடத்தின் பெயர், குறிப்பிடப்பட்டுள்ளது. 'அவி முத்தீஸ்வரம்' என்பது கோயிலின் மறுபெயர் என்று கல்வெட்டுகள் மூலம் தெரியவருதால் (330 of 1929), கண்டகோபால மாணிக்க மடம் என்ற பெயருள்ள இம்மடம், கோயிலின் வடக்கில் அமைந்திருந்தது என்று அறிய முடிகிறது. கண்ட கோபாலன் என்ற சிற்றரசனால் கண்டகோபால மாணிக்கம் என்னும் பெண்ணின் பெயரால் இம்மடத்துக்கு நிலம் கொடுக்கப்பட்டதாகவும் இக்கல்வெட்டு கூறுகிறது. (330 of 1929) இக்கொடை மூன்றாம் இராசராசனின் 15-ஆம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்டதாகும்.

## அன்பர்க்கடியார் மடம்

மேலும் 3-ஆம் இராசராசனின் 7-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்றில் 'அன்பர்க்கடியார் மடம்' என்று ஒரு மடம் குறிப்பிடப்பட்டுள்ளது. (350 of 1929).

இம்மடத்தைச் சார்ந்த ஆண்டவர்களின் நலனிற்காக உறனூரைச் சார்ந்த பெரியான் திருச்சிற்றம்பலமுடையான் செழியன் வேளான் என்பவன் நிலம் கொடையளித்தான் என்றும் இக்கல்வெட்டு கூறுகின்றது.

# கல்வெட்டில் காசுகள்

பழங்காசு, புஜபலன் மாடை, கண்டகோபாலன் மாடை என்ற பெயருள்ள காசுகள் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பழங்காசு

இரண்டாம் இராசராசனின் ஆட்சியின்போது புழக்கத்தில் இருந்திருக்கிறது. அரசூரைச் சார்ந்த 'அமணப்பாக்கிழான்' என்பவனின் மருமகள்கள் தங்கள் கணவன்மாரின் நலனிற்காக எட்டு பழங்காசுகள் கொடுக்கப்பட்டு கோயிலில் விளக்குகள் எரிக்கப்பட்டன என்று இம்மன்னனின் 15-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கூறுகின்றது.

## புஜபலன் மாடை

இதுவும் இரண்டாம் இராசராசனின் ஆட்சியின் போது வழக்கிலிருந்திருக்கிறது. 'பனங்குடி' என்ற ஊரைச் சார்ந்த ஒருவரிடமிருந்து இரண்டு புஜபலன் மாடைகளை கோயில் சிவபிராமணர்கள் பெற்று கோயிலில் இரண்டு விளக்கு எரிப்பதற்கு சம்மதம் தெரிவித்தனர் என்று இம்மன்னனின் 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கூறுகிறது. (311 of 1929).

## கண்டகோபாலன் மாடை

தெலுங்குச் சோழர்களான திருக்காளத்தி தேவ கண்ட கோபாலன் காலத்திலும் இக்கால வழக்கிலிருந்ததாக அவர்கள் கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. இவர்கள் முறையே மூன்றாம் குலோத்துங்கன் சோழன் காலத்திலும், மூன்றாம் இராசேந்திர சோழன் காலத்திலும் சிற்றரசர்களாயிருந்தவர்கள். எனவே கண்ட கோபாலன் மாடை என்ற காசு தொண்டை மண்டலப் பகுதியில் இவ்விருச் சோழ மன்னர்கள் காலத்திலும் வழக்கத்தில் இருந்திருக்கிறது. மேலும் கண்டகோபாலன் என்ற தெலுங்கு மன்னன் பெயரிலேயே இக்காசும் வெளியிடப்பட்டுள்ளது.

மார்கழி மாதத்தில் 'ஆருத்ரா' என்ற விழாவன்று திருப்பாலைவனமுடைய நாயனாரின் அபிஷேகத்திற்காகவும், வழிபாட்டிற்காகவும், திருப்பாலைவனத்தைச் சார்ந்த ஒரு வணிகன் ஆறு கண்டகோபாலன் மாடைகள் கொடுத்துள்ளான் என்று திருக்காளத்தி தேவ கண்டகோபாலனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கூறுகின்றது. (308 of 1929).

விசய கண்டகோபாலனின் 7-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் சாமிப்பிள்ளை கோவப்பிள்ளை 'சங்கிராந்தி' யன்று நடைபெறும் இறைவழிபாட்டிற்காக 5¾ கண்டகோபாலன் மாடைகள் கொடுக்கப்பட்டன என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. (361 of 1929).

# கல்வெட்டில் நிலங்கள் அளவைகள்

இக்காலத்தில் நிலங்களுக்குப் பல்வேறு பெயர்கள் இருப்பது போன்று முன்னரும் நிலத்திற்குப் பெயர் வழங்கப்பட்டன என்று முதல் குலோத்துங்களின் 23-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது. (341 of 1929). திருப்பாலைவனம் உடையநாயனார்க் கோயிலைச் சார்ந்த சிவ பிராமணர்களிடமிருந்து பணம் பெற்று குஞ்சரமங்கலச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த சபையோர் நிலம் விலைக்கு வாங்கி குமாரீஸ்வரமுடைய நாயனார்க் கோயிலுக்கு அதனைக் கொடுத்தனர். அந்நிலத்தின் பெயர் 'ஆலால சுந்தர விளாகம்' என்பதாகும். எனவே முதலாம் குலோத்துங்கன் காலத்தில் ஆலால சுந்தர விளாகம் என்ற பெயர் நிலத்திற்கு வழங்கி உள்ளது, என்று இக்கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது. மேலும் இதன் அடுத்த ஆண்டான குலோத்துங்கனின் 24-ஆம் ஆட்சி ஆண்டில் "ஆலால சுந்தரவிளாகம்" என்ற இதேப் பெயரில் ஒரு நந்தவனம் அமைக்கப்பட்டது, என்பது ஈண்டு குறிப்பிடப்படத்தக்கது. (309 of 1929).

## அளவைகள்

நீட்டல், நிறுத்தல், முகத்திலளவை போன்றவற்றிற்காகத் தற்காலத்தில் பல்வேறு அளவைகள் இருப்பது போன்று அக்காலத்திலும் இருந்தன.

நிலங்களை அளப்பதற்காக இரு அளவை முறைகள் பயன்படுத்தப்பட்டன. அவை 1. வாழவந்தான் கோல், 2. கண்டார் கண்டன் கோல், மூன்றாம் இராசராசனின் கீழ் சிற்றரசனாக இருந்தவரின் ஆட்சியின் போது 'வாழவந்தான் கோலும்' 'வீரசாயன உடையார்' என்ற விசய நகர மன்னர்கள் காலத்தில் 'கண்டார் கண்டன் கோலும்' பயன்படுத்தப்பட்டன.

திருவேகம்பமுடையான் என்பவன் நந்தவனம் அமைப்பதற்காக கோயில் நிர்வாகிகளிடமிருந்து நிலம் வாங்கிய போது அந்நிலம் வாழ வந்தான் கோலால் அளக்கப்பட்டது என்பதை கண்ட கோபால தேவனின் கல்வெட்டுக் கூறுகிறது.

கண்டார் கண்டன் கோலும் கோயிலுக்கு கொடையாகக் கொடுக்கப்பட்ட நிலத்தை அளப்பதற்காகவே பயன் படுத்தப்பட்டுள்ளது. கண்டார் கண்டன் கோலின் என்ற அளவுகோலின் அளவு காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயிலில் வெட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் விக்கிரம சோழன் காலத்தில் 'பதினாறு சாண்கோல்' என்ற கோல் உபயோகப்படுத்தப்பட்டதாக இம்மன்னனின் 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு குறிப்பிடுகிறது (325 of 1929). "இந்நாற்பாலெல்லைக்கு நடுவுட்பட்ட நிலம் உண்ணிலம் ஒழிவின்றி பதினாறு சாண் கோலாற் குழி" மூவாயிரமும் என்ற கல்வெட்டு குறிப்பால் அறியமுடிகிறது. "பதினாறுசாண் கோலால் குழி ஆயிரத்துக்கு" என்று ஜடாவர்மன் கல்வெட்டும் (328 of 1929) கூறுகின்றன.

மூன்றாம் இராசராசன் கல்வெட்டும் (319 of 1929), வேலி ஒன்றுக்குக் காசு முப்பதாக வந்த பழங்காசு நாற்பத்தைந்தும் கைக்கொண்டு" என்று விக்கிரமச் சோழன் கல்வெட்டும் (325 of 1929), வேலி அளவுப்பற்றி கூறுகின்றன.

'குழி' கணக்கும் வழக்கிலிருந்தது "இந்நாற்பாலெல்லைக்கு நடுவுட்பட்ட நிலம் உண்ணிலம் ஒழிவின்றி பதினாறு சாண் கோலால் குழி மூவாயிரமும்" என்று விக்கிரமச் சோழன் கல்வெட்டும் (325 of 1929), "பதினாறு சாண் கோலாற் குழி ஆயிரத்துக்கு" என்று சடாவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டும் (328 of 1929), "இரண்டாயிரத்து இருநூறு குழி" திரிசூலக் கல்நாட்டி" என்று மூன்றாம் இராசராசன் கல்வெட்டும் (330 of 1929), "தென் கழனியில் கண்ட மடங்கப் பிரித்து விட்டகுழி ஆறாயிரம், இன்னிலம் ஆறாயிரம் குழியால் வந்த" என்று மூன்றாம் இராசராசனின் மற்றொரு கல்வெட்டும் (319 of 1929), விளக்குகின்றன.

# சிறப்புச் செய்திகள்

## அரச பரம்பரை

தமிழ் நாட்டில் களப்பிரர் ஆட்சி நிலவியிருந்தபோது சோழர்கள் அவர்களின் கீழே சிற்றரசர்களாய் இருந்தனர். அப்போது சோழர் வம்சத்தைச் சார்ந்த ஒருவன் தெலுங்கு நாட்டிற்குச் சென்று அங்கு ஒரு சிறு இராச்சியத்தை அமைத்தான் என்றும், அவனுடைய பரம்பரையினர் சில நூற்றாண்டுகள் வரை அங்கு அரசாண்டனர் என்றும், அதனைக் குறிப்பிடுகின்ற பழையக் கல்வெட்டுகளும், சாசனங்களும், செப்பேடுகளும் தெலுங்கு நாட்டிலுள்ள கடப்பை மாவட்டத்திலுள்ளன என்றும் "மயிலை சீனி வேங்கடசாமி" கூறியுள்ளார், அவர்கள் ரேனாட்டுச் சோழர் எனப்படுவர். தங்களை கரிகால் சோழனுடைய பரம்பரையினர் என்று பொதுவாகக் கூறிக்கொள்கின்றனர்.

திருப்பாலைவனத்தில் காணப்படுகின்ற 'தம்மு-சித்தி' என்ற தெலுங்குச் சோழனின் கல்வெட்டொன்றிலும், கரிகால் சோழன் முதற் கொண்டு இம்மன்னன் வரையிலான அரச பரம்பரையைக் குறிப்பிடுகிறது. சமஸ்கிருத மொழியையும், கிரந்த எழுத்துகளையும் கொண்டுள்ள இக்கல்வெட்டில் சக ஆண்டு 1129, குறிப்பிடப்பட்டுள்ளது. சக ஆண்டு 1129 என்பது கி.பி. 1207 ஆகும். இவ்வாண்டில் சோழ மன்னனாயிருந்தவன் மூன்றாம் குலோத்துங்கனாவான். எனவே மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஆட்சி புரிந்த சிற்றரசன் தான் தம்மு-சித்தி என்பதும் தெளிவாகிறது.

மேலே குறிப்பிட்ட தம்மு-சித்தியின் கல்வெட்டில் கரிகால் சோழன், மதுராந்தகன், தெலுங்கு-வித்யா, நல்ல சித்தி, என்ற சித்தி பெத்தா, தம்மு-சித்தி என்ற வரிசையாக பரம்பரைக் கூறப்பட்டு உள்ளது. (343 of 1929) நல்ல சித்தி, எள சித்தி, பெத்தா,

தம்மு-சித்தி ஆகியோர் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழனின் புதல்வராவார்கள். மதுராந்தகப் பொத்தப்பிச் சோழனுக்கு அடுத்த படியாகக் குறிப்பிடப்பட்டுள்ள தெலுங்கு வித்யா என்ற மன்னன் அவனுக்குப் பின்னர் ஆண்டவன்.

தம்மு-சித்தி என்ற மன்னன் தன் பரம்பரையைப் பற்றிக் குறிப்பிடும் போது, தனக்கு சற்று முன்னிருந்தோரையும், தன் உடனே இருந்தவர்களையும் குறிப்பிடுகிறான். ஆனால் கரிகாலன் என்ற பெயர் மட்டும் சோழ மன்னனைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. அவன் சங்க காலத்துச் சோழனா? அல்லது பிற சோழனா? என்பது கேள்வி.

சங்க காலச் சோழனாயிருந்தால் அவனுக்குப் பின்னர் வந்த சோழ மன்னர்கள் யாருடையப் பெயராவது பின்னர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறில்லாமல் தம்மு-சித்தியின் தந்தையான மதுராந்தகப் பொத்தப்பிச் சோழனையும், உடன்பிறந்தோரையும் கல்வெட்டு குறிப்பிடுகிறது. எனவே கரிகாலன் யார் என்பது ஆய்வுக்கு உரியது.

பிற்காலச் சோழ மன்னர்கள் சிலருக்கு கரிகாலன் என்றப் பட்டப் பெயர் இருந்திருக்கிறது.

கன்னியாகுமாரி கல்வெட்டின் மூலம் வீரராசேந்திரனுக்கு கரிகாலன் என்ற பட்டபெயர் இருந்ததாகத் தெரிய வருகிறது. இதுபோல் இரண்டாம் இராசாதிராசாவுக்கும் இப்பெயர் நிலவி உள்ளது. அவர்களை போல் மூன்றாம் குலோத்துங்கனும் கரிகால் - சோழன் என்ற பெயரைத் தனக்குச் சூட்டி மகிழ்ந்திருக்கிறான்.

தம்மு-சித்தியும் அவன் தந்தை மதுராந்தக சோழன் - (பொத்தப்பிச் சோழன்), இருவரும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவர்கள். மேலும் சோழர்களும், தெலுங்குச் சோழர்களும் ஆட்சிகாலம் முழுவதிலும் நட்புடனே இருந்தனர். எனவே பொத்து-சித்தியின் கல்வெட்டு கரிகாலன் என்று குறிப்பிடுவது மூன்றாம் குலோத்துங்கனாகவும் இருக்கலாம் என்று கருத இடம் இருக்கிறது.

எனவே இக்கருத்து சரி என்றால் கரிகாலன் (மூன்றாம் குலோத்துங்கன்), மதுராந்தகப் பொத்தப்பிச் சோழர், முதல், தம் காலம் வரை தன் பரம்பரையைப் பற்றி தம்மு-சித்தி குறிப்பிட்டுள்ளான் என்பது இந்நூலாசிரியரின் கருத்தாகும்.

## காரைக்கால் அம்மையார் திருமேனி

மூன்றாம் இராசராசனின் 18-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்றில் சோழ மண்டலத்திலுள்ள அதங்கூரைச் சார்ந்த ஒரு வணிகன் ஒருவன் காரைக்கால் அம்மையாரின் படிமம் ஒன்றை கோயிலில் செய்து வைத்தான் என்ற குறிப்பு காணப்படுகிறது. ஆனால் தற்போது இப்படிமம் கோயிலில் இல்லை. கொடையளிக்கப்பட்ட காலம் மூன்றாம் இராசராசனின் 18-ஆம் ஆட்சியாண்டு, அதாவது கி.பி.1234-இல் இப்படிமம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

# கோயில் வழிபாடுகளும் விழாக்களும்

## கல்வெட்டுகளில் விழாக்கள்

'திருவாதிரை விழா', 'ஆருத்ரா விழா' 'உத்தராயண சங்கிராந்தி' ஆகிய விழாக்கள் திருப்பாலீஸ்வரர் கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன என்று கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.

## மார்கழி விழாக்கள்

திருவாதிரை விழாவும், ஆருத்ரா என்ற விழாவும் மார்கழி மாதத்தில் கொண்டாப்பட்டன.

ஆமூரைச் சார்ந்த 'குலோத்துங்கச் சோழ மகிபாலன்' என்பவரால் மார்கழி திருவாதிரை விழாவைக் கொண்டாடுதலுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது என்று இரண்டாம் இராசாதிராச தேவனின் கல்வெட்டு கூறுகின்றது. (337 of 1929).

மார்கழி மாதம் நடைபெறும் "ஆருத்ரா" என்ற விழாவிற்குத் திருப்பாலைவனத்தைச் சார்ந்த ஒரு வணிகன் ஆறு கண்ட கோபாலன் மாடைகள் கொடுத்தான் என்று திருக்காளத்தி தேவன் கண்ட கோபாலனின் 3-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டொன்று கூறுகிறது. (308 of 1929).

தற்போது கோயிலில் திருவாதிரை விழா கொண்டாடப் படுகிறது. இவ்விழா "ஆருத்ரா" என்று இப்போது அழைக்கப்படுகிறது.

மூன்றாம் இராசராசனின் கல்வெட்டில் (319 of 1929) பத்து நாட்கள் நடைபெறுகின்ற விழா என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் பெயர் குறிப்பிடப்படவில்லை. "திருப்பாலைவனமுடைய நாயனார் திருநாள்களிலே பத்து நாளும்" என்று அக்கல்வெட்டில்

கூறப்பட்டுள்ளது. திருக்காளத்தித்தேவன் சிற்றரசனாயிருந்த போது சோழ சக்கரவர்த்திக்கு வரி செலுத்தியவன், மூன்றாம் குலோத்துங்கன். அவருக்குப் பின்னர் வந்தவனே, மூன்றாம் இராசராசன். மேலும் திருக்காளத்தித் தேவனுக்குப் பின்னர் சிற்றரசனாக வந்த தெலுங்குச் சோழனான கண்ட கோபாலன்தான், மூன்றாம் இராசராசன் காலத்தில் நடைபெற்ற இந்த பத்து நாள் விழாவிற்கு நிலம் கொடுத்துள்ளான் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது. எனவே மார்கழி மாத விழாவைத்தான் இக்கல்வெட்டும் கூறுகிறது.

"சயங்கொண்ட சோழ மண்டலத்து பையூர்க் கோட்டத்து உடையார் திருப்பாலைவனமுடைய நாயனார் திருத்தாள்களிலே பத்து நாளும் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் கண்ட கோபாலன் தர்மமாக இக்கோட்டத்து ஆசன்திரகாலம் திருச்சான்து சாத்துவதாக இக்கோட்டத்து வடதண்டலத்து தென் கழனியிலே மடங்கப் பிரித்து விட்டக்குழி ஆறாயிரம்" என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்நிலத்திலிருந்து பெறுகின்ற வரியைக் கொண்டு திருநாள் ஒன்றுக்கு நூற்றிருபது கழஞ்சு சாந்தும் அரைக் கழஞ்சு கற்பூரமும், ஒன்றரைப்பலம் திருமேற்பூச்சும் சாத்த வேண்டும் என்றும் கண்ட கோபாலன் உத்தரவு பிறப்பித்ததாக இக்கல்வெட்டு கூறுகின்றது. எனவே பத்து நாட்களிலும் சுவாமிக்குச் சாந்து, கற்பூரம் போன்றவை கொண்டு பூஜை நடைபெற்றது என்று அறிய முடிகிறது.

## தற்போதைய வழிபாடுகள்

தினமும் மூன்று நேரங்களிலும் கோயிலில் வழிபாடு நடைபெறுகின்றன. காலையில் எட்டு மணியிலிருந்து ஒன்பது மணி வரையிலும், உச்சிப்பொழுதில் பதினோரு மணியிலிருந்து பனிரெண்டு மணி வரையிலும், மாலையில் ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரையிலும் தினமும் மூன்று நேரங்களில் வழிபாடு நடைபெறுகின்றன.

இலிங்கத்தின் சிரசில் சுமார் மூன்று அங்குலம் அளவிற்கு கோடாரியால் வெட்டுப்பட்ட காயம் காணப்படுவதாலும், இலிங்கம்

கரையும் தன்மையை உடையதாலும் உச்சிக் காலத்தில் மட்டும் இலிங்கத்திற்கு அபிஷேகம் நடைபெறுகிறது என்று கூறுகின்றனர். ஆனால் மூன்று நேரமும் பூசை நடைபெறுகிறது. உச்சி நேரம் இலிங்கத்திற்கு பால், இளநீர், பன்னீர், விபூதி ஆகியவற்றால் அபிஷேகம் நடைபெறுகிறது. இலிங்கத்திற்கு மட்டும் தான் இவ்வபிஷேகம்.

அம்மனுக்கு தினமும் மூன்று நேரமும் அபிஷேகம் நடைபெறுகிறது. உச்சிக்காலத்தில் தினசரி பாலாபிஷேகமும் விசேஷ நாட்களில் பஞ்சாமிர்தம், பால், இளநீர், பன்னீர், விபூதி ஆகியவையும் பயன்படுத்தப்படுகின்றன.

## விநாயகர் வழிபாடு

பழைய கோபுர வாயிலிலிருந்து எடுக்கப்பட்ட விநாயகரின் மரச்சிற்பம் ஒன்று நடராஜர் சன்னதியில் வைக்கப்பட்டுள்ளது. முன்னர் இச்சிற்பம் கோபுர வாயிலில் இருக்கும் போது எல்லோரும் அவரை வணங்கி விட்டுத்தான் உள்ளே நுழைவது வழக்கமாகியிருந்தது. தங்கள் கோரிக்கைகளை தெரியப்படுத்தி வேண்டினால் தாங்கள் நினைத்த காரியம் கைக்கூடும் என்றொரு நம்பிக்கை. அதே நம்பிக்கைத் தற்போதும் நிலைத்திருக்கின்ற காரணத்தால் இச்சிற்பம் நடராசர் சன்னதியில் கொண்டு வைக்கப்பட்ட பின்பும், அதற்கென்று தனிவழிபாடு நடைபெறுகிறது. தற்போதும் இவ்விநாயகரை வழிபட்டுச் செல்கின்றனர்.

## கோயிலில் நடைபெறும் விழாக்கள்

சித்திரை - சித்திராப்பௌர்ணமி

வைகாசி - வசந்த விழா

ஆனி - ஆனித்திருமஞ்சன விழா (நடராசருக்கு)

ஆடி - ஆடிப்பூரம் (அம்பாளுக்கு)

ஆவணி - விநாயகர் சதுர்த்தி

புரட்டாசி - நவராத்திரி (அம்பாளுக்கு)

ஐப்பசி - கந்தசஷ்டி, அன்னாபிஷேகம்

கார்த்திகை - நான்கு சோம வாரம் கீபம்

| | | |
|---|---|---|
| மார்கழி | - | ஆருத்ரா (திருவாதிரை விழா) |
| தை | - | தைப்பூசம் |
| மாசி | - | சிவராத்திரி (மாசிமகம்) |
| பங்குனி | - | பங்குனி உத்திரம் பங்குனிப் பெருவிழா |

## ஆருத்ரா

மார்கழி திருவாதிரை உற்சவம் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று நடைபெறுகிறது. முதல் நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு அபிஷேகம் நடைபெறும். பின்னர் நடராசரையும், அம்மனையும் தெருவீதிகளில் வலம் வரச்செய்வர். அத்துடன் ஊரைச் சுற்றிலும் வலம் வரும். மறுநாள் பகல் ஏழு மணிக்கு முன்னர் கோயிலினுள் கொண்டு வந்து விடுவர். இந்நிகழ்ச்சியைத் தவிர இந்தநாளில் வேறு விசேஷங்கள் எதுவும் இல்லை.

## பங்குனி உத்திரம்

இதனைப் பங்குனிப் பெருவிழா என்றழைக்கின்றனர். பங்குனி மாதம், சுக்ல பட்ச சஷ்டியன்று காலையில் கொடியேற்றம் நடைபெறும். இதற்கு 'ஆரோகணம்' என்று பெயர். அன்று முதல் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் பஞ்சமூர்த்திகள் என்று அழைக்கப்படுகின்ற சோமாஸ்கந்தர், அம்பாள், சுப்ரமண்யர், விநாயகர், சண்டிகேஸ்வரர் ஆகியோருக்கு உற்சவம் நடைபெறும்.

ஆறாம் நாள் சூர்ணோற்சவம் நடைபெறும் அன்று மஞ்சள் இடித்து அதனை எண்ணெயில் கலந்து பின்னர் தண்ணீரிலே கலந்தும் எல்லோர் மேலும் தெளிப்பர்.

ஏழாம் நாள் 'தேர் புறப்பாடு'. தேரில் இருபுறமும் துவாரபாலகர்களையம், குதிரைகளையும் கட்டி நடுவில் பிரம்மாவை வைத்துத் தேரை இழுப்பர். குதிரைகள் பூட்டப்பட்டத் தேரை பிரம்மா ஓட்டிச் செல்வது போன்று அமைக்கப்பட்டிருக்கும். தேருக்கு வாழை மரம், மாவிலைத்தோரணம், தேர்ச்சீலை எல்லாம் கட்டி அழகு செய்து காலையில் தேர் புறப்படும்.

எட்டாம் நாள் இரவு பாரி வேட்டைக்காக சந்திரசேகரரை, அருகிலுள்ள மெதூருக்கு எடுத்துச் செல்வர்.

ஒன்பதாம் நாள் காலையில் நடராசர் புறப்பாடு நடைபெறும். முதலில் கோயிலை சுற்றி வந்த பின்னர் திருவீதி உலா நடைபெறும்.

பத்தாம் நாள் காலையில் தீர்த்தவாரி நடைபெறும். கோயிலின் முன்னர் உள்ள அமிர்தபுஷ்கரணிக்கு சுவாமியை எடுத்துச் சென்று அபிஷேகம் செய்வர். பின்னர் பகல் பன்னிரெண்டு மணிக்கு முன்னதாக போக்குவரத்து வழிபாடுகள் எல்லாம் முடிந்து விடும். மாலையில் முன்மண்டபத்தில் வைத்து சுவாமிக்குத் திருக்கல்யாணம் நடைபெறும். இதற்கு அவரோகனம் என்று பெயர்.

# சமுதாயச் செய்திகள்

ஒரு சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது அச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள் நடவடிக்கைகள் அவர்களது பண்பாடு போன்றவற்றைக் கூற வேண்டும்.

திருப்பாலைவனத்திலுள்ள மக்களில் பெரும்பகுதியினர் விவசாயத்தையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர். நகர்ப்புறங்களில் இயந்திரங்கள் ஒலியோடு செயல்புரிந்து கொண்டிருப்பதைப் போல நாட்டுப்புறங்களில் நடைபெறும் வேலைகள் பாட்டொலியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கும். பாடிக்கொண்டு வேலை செய்யும் தொழிலாளி பாடல் பாடுவதால் தன்னோடு பலர் வேலை செய்யும் உணர்வையும் இனிதாக வேலை முடிவடையும் நிறைவையும் பெறுகிறான். உழவுத் தொழில் புரியும் உழவனின் பாடலானது அவன் ஏரில் காளைகளைப் பூட்டிய நேரத்திலிருந்து தொடங்கி விதை விதைத்து அறுவடை செய்து, கதிரடித்துக் குவித்துக் குதிரில் போடுகின்றவரை நீடித்துச் செல்லுகின்றது. இவ்வூரில் விவசாயமே முக்கிய தொழிலாய் இருந்தபோதிலும் தொழிலோடு பாடல்களையும் பாடுவது என்பது மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. ஓரிருவரே இம்முறையைக் கையாளுகின்றனர்.

"நிறுத்தின திரு அலகு
நின்று பயிர் ஏற வேணும்
சாத்தின திரு அலகு
சாய்ந்து பயிர் ஏற வேணும்
நெல்லா விளைய வேணும்
நெடுங்களங்கள் ஏற வேணும்
கதிரா விளைய வேணும் - எங்களையா
களஞ்சியங்கள் ரொம்ப வேணும்".

இப்பாடல் உழவரிடையே பொதுவாகப் பாடப்படுகின்ற பாடலாகும். பாலைநிலப் பகுதியாகையால் விளைச்சல் அதிகம் இல்லை. காரணம் இங்கு நீர்வளம் குறைவு.

## விதை விதைத்தல்

இதனை 'பெருவிரை' என்று இங்குள்ள மக்கள் கூறுகின்றனர். ஆடிமாதம் நல்ல முகூர்த்த நேரம் பார்த்து விதைக்கின்றனர். விதைக்கின்ற அன்று வயலுக்குச் சென்று அங்கு சாணத்தால் பிள்ளையார் செய்து அதில் அருகம்புல்லைச் செருகி வைப்பர். பின்னர் பச்சரிசி, தேங்காய் ஆகியவற்றை விநாயகருக்கு நைவேத்தியம் செய்து, கற்பூரமும் கொளுத்துவர். அப்போது விதையைப் பிள்ளையார் முன் வைத்து பின்னர் அதனை எடுத்து ஈசான மூலையில் கொட்டி விதைத்துத் தண்ணீரும் விடுவர். பின்னர் தாங்கள் விருப்பப்பட்ட போது பிற இடங்களிலும் விதைப்பர்.

நெல் அறுவடை வருடத்தில் ஒருமுறை தான் நடை பெறுகிறது. அறுவடை தை, மாசி மாதங்களில் நடைபெறும். மற்ற நேரங்களில் மழை பெய்தால் கேழ்வரகு போன்றவை பயிரிடப்படும். சொந்தமாகக் குழாய் கிணறு உள்ளவர்கள் வருடத்திற்கு இருமுறைப் பயிரிடுகிறார்கள்.

இவ்வூர் மக்கள் ஒரு சில குறிப்பிட்ட நாட்களைத் தவிர பிற நாட்களில் கோயிலுக்குச் செல்லும் வழக்கம் இல்லை. பழமையான பழக்க வழக்கங்களோ ஆச்சாரங்களோ எதுவும் மக்களிடையே தென்படவில்லை. அதிக படிப்பறிவும் இல்லாது தங்கள் தொழிலை நோக்கிய வண்ணமே மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பொதுவாக இவ்வூர் மக்களால் பாடப்படுகின்ற பாடல் தாலாட்டுப் பாடல் ஒன்றுதான். இப்பாடல் வள்ளி, முருகன் புராணக் கதையோடு தொடர்புடையதாய் காணப்படுகிறது.

## தாலாட்டுப் பாடல்

ராரிரோ - ராரிரோ - ராரோ
என் கண்ணேயுறங்கு - என் கானமயில் நீ தூங்கு
எம் பொன்னேயுறங்கு எங்கண்ணே நீ புதுமையுள்ள
தொட்டிலிலே
ஏர் தேரோட்டி தூணை சாத்து
எங்கண்ணே நீ துரை மகனே போட்டாட்டி

நான் அம்மி அடியிலே கண்ணே நீ
இந்திரனார் பொட்டியிலே
இந்திரனார் பொட்டியிலே
கண்ணே நீ கெர்ப்பம் தரித்தவளாம்
ராரிரோ. . . . ராரிரோ. . . .ரோ
கண்ணேநீ . . . . . ராரீரரோ. . . . ராராரோ
நம்ப வறுமாய் வனங்கடந்து எங்கண்ணே நீ
உன் மாமன்மார் விடு புலியை வேட்டையாடி
வாராக . . . வேட்டைகள் தானாடி
என் கண்ணே நீ உன் மாமன்மார்
வேகமாய் வருகிறார்
கண்டிக்கு சீட்டெழுதி என்கண்ணே நீ
கப்பலுக்கோ முத்தளந்து
நெல்லளந்து சோறுகட்டி எங்கண்ணே நீ
உன் மாமன்மார் நடுத்தெருவு தானேகட்டி
பொன்னளந்த தூசியோட கண்ணே நீ
உன் மாமன் மார் போய் புகுந்தார் தாசிவீடு
தாசி மயக்கமில்லோ கண்ணே நீ உன் மாமன்மார்
மதிமருண்டு நிற்கிறாரோ
ராரிரோ. . . . ராரிரோ. . . ராரிரே
காஞ்சிகுலம் ஆமணக்கு எங்கண்ணே நீ
காடோடி வருதில்லோ
பூந்தோட்டம் நந்தவனம் கண்ணே நீ
பூப்பறிக்க வந்த கண்ணே
தொட்டில்மேல் தேரோட்டி கண்ணே நீ
துரைப் பாண்டியரெப் போட்டாட்டி
வெள்ளிமலையருகே உங்கம்மா (அம்மான்) அங்கே
வன வேட்டை ஆடும் போது
சிங்கம் படுமோ கண்ணே நீ
சிறு புலி வேங்கை படுமோ
உங்க சின்னம்மான் வேட்டையிலே
மான் படுமோ, மயில் படுமோ
கொண்டு வந்தார் வேட்டைமான்
உங்க பெரியமாமன் தெருவழி விளையாட
ராரிரோ. . . . . ராரிரரோ - எங்கண்ணே நீ
துள்ளி வந்த மீன்களுக்கு
உங்க மாமன்மார்
தூண்டி வலை போட்டாரோ
கெண்டைபடுமோ உங்க சின்னமாமன்
வேட்டையிலே கெளறுகள் அகப்படுமோ

நம்பிராசன் பெற்றெடுத்த எங்கண்ணே நீ
நவகுல மணியாள் -
வள்ளி என்று பேர் பெறந்து
விதைக்குப் போகச் சொன்னால்
தினைப்புனக் காவலுக்கு
வள்ளியே போகச் சொன்னார் பெற்றெடுத்த நம்பிராசன்
ஆயிரம் தாதிகளை அலங்காரம் தான் செய்து
வள்ளியம்மாள் தினைப்புனந்தான் புகுந்தாள்
தினைப்புனக் காவலிலே வள்ளி
திரளாக தான் நடந்து
ஆயிரம் தாதியுடன் அங்கு
அரசியென ஆண்டாளே
நம்பிராசன் பெற்றெடுத்த
வள்ளியென்ற பெண்ணரசே
கல்லக் கவுனெடுத்து
வள்ளி தினைப்புனக் காவல் கொண்டாள்
நாரதர் தானறிந்து
வள்ளி தினைப்புனக் காவல் சென்று
வள்ளியக் கண்டு மன மகிழ்ந்து
வேலவர்க்கு ஆகுமென்று தான் மனமகிழ்ந்து கொண்டு
ஓடினார் நாரதரும்
வேலவரைத் தானழைத்து
வாருமே வேலவரே
வனவேடம் பூண்டதொரு
வள்ளியென்று பெண் பிறந்து
வனத்திலே வாழுகின்றாள்
சிறை மீட்ட வேணுமென்று
வேலவர் வன வேடம் கொண்டாரு
மானை விரட்டிச் சென்று
வேலவர் மான் பிடிக்கச் சென்றாராம்
அந்த வனத்துக்குள்ளே
ஆரம்மா இவ்வனத்தில்
இந்த வனத்துக்குள்ளே
என்னோட மான் வந்து இருக்குதுங்க
மானுக்குப் பாதைச் சொல்லு.
ஒந்தனது மான் இங்கே வரவில்லை யென்றாள் வள்ளி
எந்தன் மான் இங்கு வந்ததாக
கண்டேன் அடையாளம்
மார்பில் இரண்டு கொம்புண்டு
தலைகுனிந்து மேயாத மான்

அது வள்ளிமான், புள்ளிமான்
ஆரடா வேடுவனே அண்ணமாரைத் தானழைத்தாள்
உடனேயே உன்னை கைது பண்ணிவிடுவார்கள்
சொன்னவுடன் கூ, கூ வென்று
சப்தம் போட்டு வள்ளிதான்
அண்ணன்மாரை அழைக்க
நம்பிராமர் ஓடி வந்து
அழைத்த காரணம் கேட்க
வேலவர் அத்திமரம் ஆனார்.

தினைப்புனங் காவல் காத்து நின்ற வள்ளிக்கும், வேலவருக்கும் இடையே நடந்த வாக்கு வாதம் இத்தாலாட்டுப் பாடலில் இடம் பெற்றுள்ளது. ஆண், பெண் ஆகிய இரு குழந்தைகட்கும் இப்பாடலைப் பாடுவதுண்டு.

## சமயம்

சமுதாயம் என்று சொல்லும் போது 'சமயம்' அதில் பெரும்பங்கு வகிக்கிறது. திருப்பாலைவனத்தில் காணப்படுகின்ற மொத்த மக்கள்தொகையில் 90% பேர் 'கைக்கோளர்' வகுப்பைச் சார்ந்தவர். கைக்கோளர் என்ற பெயரில் அழைக்கப்பட்ட இவ்வகுப்பினர் தற்போது தங்களை செங்குந்த முதலியார் என கூறிக்கொள்கின்றனர்.

## கைக்கோளர்

கைக்கோளர்கள் தமிழ் நாட்டில் அதிகமாகக் காணப் படுகின்ற ஒரு இனத்தவர். இவர்கள் தென்பகுதியில் மட்டுமன்றி ஆந்திராவிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர். இவர்களது பரம்பரைத் தொழில் நெசவு. இவர்கள் செங்குந்த முதலியார் என்றும் அழைக்கப்படுகின்றனர். இதற்குக் காரணமான ஒரு கதையும் உண்டு.

பூமியிலுள்ள மக்கள் சில அரக்கர்களின் கொடுமைக் காரணமாகத் தங்களைக் காப்பாற்றும்படி சிவனிடம் முறையிட்டனர். சிவன் அரக்கர்களையழிப்பதற்காக தன் கண்களிலிருந்து ஆறு தீப்பொறிகளை அனுப்பினார். சிவனது மனைவி பார்வதி பயந்து தன்னுடைய இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டாள். அப்படிப் போகும் போது அவளது காற்சிலம்புகளிலிருந்து ஒன்பது மணிகள்

தெரித்தன. சிவன் அவைகளை பெண்களாக மாற்றினார். ஒவ்வொரு பெண்ணிற்கும், நீண்ட மீசையுடனும், கையில் வேலுடனும் ஓர் ஆண் மகவு பிறந்தது. இந்த ஒன்பது பேரும் சுப்ரமண்யர் தலைமையில் சென்று அரக்கர்களை அழித்தனர். அந்த ஒன்பது பேர்களுள் வீரபாகு என்பவனின் வழி வந்தவர்கள் கைக்கோளர் ஆகிய இந்த செங்குந்த முதலியார்கள். அவர்களைக் கொன்ற பிறகு, சிவன் அவர்களை நோக்கி பிறருக்குத் தீங்கு விளைவிக்காத ஒரு நல்ல தொழிலைத் தேர்ந்து எடுக்கும்படி கூறவே அதன் மூலம்தான் நெசவு அவர்கள் தொழிலாயிற்று என்று கூறப்படுகிறது.

'கை + கோள்' என்பதின் அடிப்படையில் தான் கைக்கோளர் என்ற சொல் உருவாயிற்று. கை + கோல் என்பது நெசவுத் தொழிலைச் சுட்டிக்காட்டுகிறது. கைக்கோளரில் பெரும்பான்மையோர் சிவனை வழிபடுவோராயுள்ளனர். சிறிது பேர் வைஷ்ணவப் பற்றுள்ளவர். முன்பு கைக்கோளர்களின் சமுதாயம் 72 நாடுகளாகவும், அல்லது தேசமாகவும் பிரிக்கப்பட்டு அப்பிரிவினரிடையே திருமணம் செய்து கொள்ளும் வழக்கமும் உண்டு. சிறந்த தமிழ்ப் புலவரான 'ஒட்டக்கூத்தர்' இந்த வம்சத்தை சார்ந்தவராகவே கருதப்படுகிறார்.

அநேகக் கைக்கோளர் குடும்பங்களில் தற்போது தங்கள் பரம்பரைத் தொழிலான நெசவைக் கைவிட்டு விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். அதேபோல் திருப்பாலைவனத்தில் உள்ள கைக்கோளரும் மேற்கொண்டு வருகின்றனர்.

# துணைநின்ற நூற்கள்


1. மாமல்லை - முனைவர். இரா. நாகசுவாமி.
2. கலைச்செல்வங்கள் - முனைவர். இரா. நாகசுவாமி.
3. தமிழக கோயிற்கலைகள் - மா. சந்திரமூர்த்தி
4. பிற்கால சோழர் சரித்திரம் - சதாசிவபண்டாரத்தார்.
5. திருவாசம் - மாணிக்கவாசகர்.
6. யாவரும் கேளீர் - முனைவர். இரா. நாகசுவாமி.
7. தஞ்சைப் பெருவுடையார் கோயிற் கல்வெட்டுகள்.
8. திருப்பாலைவனங் கைபீது
9. திருப்பாலைவனம் கல்வெட்டுகள்
   - முனைவர். இராசமாணிக்கனார்.
10. விக்கிரம சோழன் உலா
11. பாண்டியர் வரலாறு
12. தொண்டைமண்டலச் சதகம்
13. களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
    - மயிலை. சீனி. வேங்கடசாமி.
14. முத்தரையர் - திரு. நடன. காசிநாதன்
15. செங்கற்பட்டு மாவட்டம் - சோ.ம.லெ.
16. பிரபந்தத்திரட்டு (பாலைவனப்பதிற்று பத்தந்தாதி)
    - ஸ்ரீ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை.
17. திருவொற்றியூர் புராணம் (வாசுகிச் சுருக்கம்).
18. பெருந்தொகை.

19. The Cholas - K.A. Neelakantasastri.
20. The History of South India - K.A. Neelakantasastri.
21. Chinglepet District Gazeteer.
22. Chinglepet District Manual.
23. A.R.E - 1928 - 1929.
24. The Early History of the Deccan - G. Yazdani.
25. The Historical Inscriptions of South India.
26. The Sucindram Temple - K. K. Pillai.
27. Inscriptions of the Madras Presidency - V. Rangacharya.
28. The Castes and Tribes - Edgar thurdson
29. Inscriptions of the Pudukkottai State
30. Nellore Inscriptions.

# நிழற்படங்கள்



கோயில் - பொதுத் தோற்றம்



தூங்கானை வடிவ கருவறை



கோயில் முன்புறத் தோற்றம்



தூங்கானை வடிவ விமானத்தின் மேல்பகுதி



விநாயகர்



தேவகோட்டம் - திருமால்



தேவகோட்டம் - பிரம்மா



பிட்சாடனர்



மகரத்தூண்



விஜயநகர அரசு இலச்சினை





சங்கநிதி-பத்மநிதி



மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு



விஜயகண்டகோபலன் கல்வெட்டு



கோயில் முன் உள்ள மண்டபம்



மண்டப விதானத்தில் கலைநுணுக்க வேலைப்பாடுகள்




கொடிப்பெண்கள்



நவகண்டச் சிற்பம்



நந்தி



திருக்குளம்

